https://telegram.me/aedahamlibrary



https://telegram.me/aedahamlibrary

# கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி

"லக்ஷ்மி"

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு வீதி
மயிலாப்பூர், சென்னை - 4.

தொலைபேசி : 4943074

https://telegram.me/aedahamlibrary

# நூல் விவரப்பட்டியல்


| | |
|---|---|
| நூலின் பெயர் | கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி |
| நூலாசிரியர் | லக்ஷ்மி |
| நூல் வகை | நாவல் |
| நூல் உரிமை | டாக்டர் கே. மகேஸ்வரன் |
| மொழி | தமிழ் |
| நூல் வெளியீடு | பூங்கொடி பதிப்பகம்<br>14, சித்திரைக்குளம் மேற்குவீதி<br>மயிலாப்பூர், சென்னை - 4. |
| பதிப்பு ஆண்டு | பூங்கொடியின்<br>1-ம் பதிப்பு நவம்பர், 1979<br>2-ம் பதிப்பு நவம்பர், 1981<br>3-ம் பதிப்பு மார்ச், 1987<br>4-ம் பதிப்பு ஆகஸ்ட், 1994<br>5-ம் பதிப்பு ஏப்ரல், 1998<br>6-ம் பதிப்பு டிசம்பர் 2009 |
| நூல் அளவு | 1 X 8 கிரவுன் |
| பக்கங்கள் | 128 |
| எழுத்து | 11 புள்ளிகள் |
| தாள் | 11.6 கி.கி. வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | சாதா அட்டை |
| லேசர் வடிவம் | ஸ்ரீ டிசைன்ஸ், திருச்சி-1 |
| அச்சிட்டோர் | அமர் ஆப்செட்,சென்னை-5 |
| விலை | ரூ.50.00 |

https://telegram.me/aedahamlibrary

# பதிப்புரை

பயிரிடையே ஊடுருவி களையும் வளருவதைப் போன்று சமுதாய விரோதிகளும் நம்மிடையேதான் வாழ்கிறார்கள்.

''கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி'' என்ற இந்நாவலில் வரும் தேவநாதன் சமுதாயத்தின் முன் மிக உயர்ந்த பண்பாளர், கொடைவள்ளல், இரக்க குணம் படைத்த பெருந்தகையாளர்.

ஆனால் அவரது இன்னொரு பகுதி வாழ்க்கை நேர்மாறானது.

அரக்ககுணம், பிறரைத் துன்புறுத்தி மகிழும் மனம், சட்டத்தையும் சமுதாய நெறிமுறைகளையும் பொருட்படுத்தாது பொருள் குவிக்கும் சமுதாய விரோதி அவர்.

இந்த வேடதாரியிடம் சிக்கிய பச்சைக்கிளி தமயந்தி விம்மி எழுப்பும் மூச்சோடு படிப்போர் விம்மலும் சங்கமமாகின்ற வகையில் விறுவிறுப்பாக எழுதப்பட்ட இந்த நாவல் வெறும் பொழுது போக்கு நாவல் அல்ல. வாழ்க்கைக்கு வேண்டிய பல படிப்பினைகளை வாசகர்கள் பெற்றுப் பயனடையத் தக்க பயனுள்ள நாவல்.

வே. சுப்பையா
பூங்கொடி பதிப்பகம்

https://telegram.me/aedahamlibrary

# "லக்ஷ்மி"யின்
# பூங்கொடி வெளியீடுகளில் சில.

| | |
|---|---|
| அழகின் ஆராதனை | 80.00 |
| அவள் தாயாகிறாள் | 35.00 |
| • அசோகமரம் பூக்கவில்லை | 55.00 |
| • அடுத்த வீடு | 175.00 |
| • அரக்கு மாளிகை | 180.00 |
| • அதிசய ராகம் | 90.00 |
| • அவளுக்கென்று ஒரு இடம் | 85.00 |
| • அவள் ஒரு தென்றல் | 75.00 |
| • இவளா என் மகள் | 65.00 |
| • இனிய உணர்வே என்னைக் கொல்லாதே | 105.00 |
| • இருளில் தொலைந்த உண்மை | 85.00 |
| • இன்றும் நாளையும் | 90.00 |
| • உறவுகள் பிரிவதில்லை | 40.00 |
| • உயர்வு | 80.00 |
| • உறவின் குரல் | 65.00 |
| • ஊன்றுகோல் | 75.00 |
| • என் வீடு | 55.00 |
| • என் மனைவி | 85.00 |
| • ஒரு காவிரியைப் போல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) | 125.00 |
| • ஒரு சிவப்பு பச்சையாகிறது | 110.00 |
| • கடைசி வரை | 55.00 |
| • கங்கையும் வந்தாள் | 115.00 |
| • கதவு திறந்தால் | 115.00 |

https://telegram.me/aedahamlibrary

# கூண்டுக்குள்ளே ஒரு பச்சைக்கிளி

## 1

இருள் மறைந்து லேசாக புது வெளிச்சம் பரவத் தொடங்கிய விடியற்காலை வேளை.

தேவநாதன் படுக்கை மீது சோம்பலுடன் சில நிமிடங்கள் புரண்டு கொண்டிருந்தார். மெல்ல எழுந்து கட்டில் தலைமாட்டில் போட்டிருந்த டிரஸ்ஸிங் கவுனை எடுத்து தமது பைஜாமாமீது அணிந்து கொண்டு அறையில் குழல் விளக்கைப் பொருத்தினார். விளக்கு கக்கிய பிரகாசமான ஒளியிலே எதிர்ப்பக்கத்து சுவற்றோரம் கிடந்த டிரஸ்ஸிங் டேபிள் அருகே வந்தார். ஆளுயரத்தில் அதில் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடிக்குள் தம்மை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டார்.

அறுபது வயது ஆண்பிள்ளைக்கு ஒரு வயதா?... என்ன வயது என்று ஊகிக்க முடியாத ஒரு இளமைத் தோற்றம் இன்னமும் அவரிடம் ஒட்டிக் கொண்டுதான் இருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மலேஷியா, சிங்கப்பூர், ஹாங்காங் முதலிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் போன போது வாங்கிய டிரஸ்ஸிங் கவுன். அது அரக்கு நிறத்தில் வெள்ளை மலர் கொத்துக்கள் போட்ட. சைனீஸ் சில்க் புரே கோட்டில் தைத்த ரெடிமேட் கவுன். அதில் அவர் ஏதோ ஒரு

https://telegram.me/aedahamlibrary



சினிமாவில் அப்பா வேடம் போட்டுக் கொண்டு நின்ற அழகான நடிகர் போன்ற கனகம்பீரமான தோற்றத்திலே காணப்பட்டார். இரத்தம் தெறிக்கும் இளம் வயதும் இல்லை. மீசை நரைத்த கிழவனும் இல்லை. இருளும் ஒலியும் கலந்த ஒரு ஸந்தியாகாலம் போல இளமையும் முதுமையும் ஒன்றி ஒரு புதுமையான வயதில் இருந்தார். அவருக்கு இருந்த ஆஸ்திக்கு அந்தஸ்திற்கு ஊரில் இருந்த மதிப்பிற்கு அந்த வயதிலும் பெண் கொடுக்க எத்தனையோ பெரிய மனிதர்கள் வரிசையாக வந்து நிற்பார்கள்.

அவருக்குத் தெரிந்த கதைதான்...

வெள்ளையும் கருப்பும் இழையோடிய கிராப் சிகையை செல்லமாக மெல்லத் தடவிக் கொண்டார். ஒன்றிரண்டு நரையையும் சாயத்தால் மறைத்துவிட்ட மீசையையும் மெல்லத் தடவிக் கொண்டார்.

இன்னமும் சொந்தமாகவே சற்று வரிசையாகவும் இருந்துவிட்ட பற்களை இளித்துப் பார்த்துக் கொண்டார்.

முடிவில் பெருமூச்சுடன் காலுக்கு மெத்தென்று கிடந்த ரத்ன கம்பளத்தின் மீது குறுக்கும் நெடுக்குமாகப் பல முறை நடந்தார்.

பின்னர் சலிப்புடன் ஜன்னல் அருகே வந்து நின்றார். ஊருக்கு ஒதுக்குப்புறமாக அவரது வீடு. அரண்மனை போன்று பெரியதுதான். அந்த வீட்டைச் சுற்றி எத்தனை பெரியதொரு தோட்டம்! எத்தனை விதமான மரங்கள். என்னென்ன பூச்செடிகள்? ஜன்னல் அருகே பூத்துக் குலுங்கிய மகிழ மரத்தினின்று குப்பென்று வாசம் குளிர்ந்த காற்றோடு கலந்து முகத்திலே மோதிய போது, அவர் நினைவு எங்கேயோ போய்விட்டது. மீண்டும் தமக்குள்ளே நீண்ட பெருமூச்செறிந்தார்.

அவரது தோட்டமும் வீடும் நெடுஞ்சாலையை விட மேடானதொரு பூமியில் அமைந்துவிட்டிருந்தது. மாடியி

https://telegram.me/aedahamlibrary



லிருந்த அவரது படுக்கை அறையினின்று பார்த்தபோது - தொலைவில் காலை ஒளியால் வெள்ளிப்பாளமாக மின்னி நெளிந்த காவேரி நதி எங்கேயோ ஒரு பள்ளத்துக்குள்ளே ஓடுவது போன்ற பிரமிப்பை கொடுத்தது. சேலத்திற்கும் திருச்சிக்கும் இடையே ஓடுகின்ற வாகனங்கள் அப்போதைக் கப்போது எழுப்பிய ஓசையைத் தவிர அந்த வீட்டைச் சுற்றி எப்பொழுதுமே ஒரே அமைதி.

வெகுநேரம் நதிப் பரப்பையே வெறித்துக் கொண்டு ஜன்னல் அருகே நின்று கொண்டிருந்தார்.

தோட்டத்துத் தென்னை மரங்களின் கீற்றுகள் காற்றிலே சலசலத்தன.

எங்கேயோ மாமரக் கிளையில் ஒளிந்து கொண்டிருந்த ஒரு குயில் கூவிக் கொண்டிருந்தது.

அந்த அமைதியின் நடுவே அந்த ஓசைகள் எல்லாம் இனிமையாகத் தானிருந்தன.

கீதமினிய குயிலே கேட்டியோ லெங்கள் பெருமான்

பாத மிரண்டும் வினவிற் பாதாள மேழினுக்கப்பாற்...

கீழேயிருந்த அலங்கார பூஜையறையினின்று கேட்பது போன்றதொரு நினைபபு. வைரவன் கொளுத்தி வைத்த ஊதுவத்திக் கத்தையின் மணம்.. மேலே எழும்பி... அறைக்குள்ளே பரவிய போது என்னென்னவோ நினைவுகளைக் கிண்டி விடவே சட்டென்று உள்ளேயே அமைக்கப்பட்டிருந்த குளியலறைக்குள் அவர் புகுந்து கொண்டார்.

குளியலறையா அது? சுவரெல்லாம் வெளிர்நீல வண்ண டைல்கள். நீலவண்ண ஸ்நான தொட்டி டெலிபோன் - ஷவர்... எதிர் சுவற்றிலே பெரிய நிலைக்

https://telegram.me/aedahamlibrary



கண்ணாடி - உட்கார்ந்து அலங்கரித்துக் கொள்ள பளிங்கு ஆசனம் - உடைகளை உடுத்திக்கொள்ள ஒரு சிறு தடுப்பு - உடைகளை அடுக்கி வைக்க சுவற்றோடு பதித்த சன்மைகா இழைத்த முகம் தெரியும் அலமாரி. கூரையையும் தரையையும் தொட்டுக் கொண்டு நின்றது. பழைய காலத்துக் கட்டடந்தான் அது. அந்தக் காலத்தில் அவர்களது முன்னோர் அந்த வட்டாரத்து கலெக்டராக இருந்த வெள்ளைக்கார துரை ஜமபந்திக்கு வரும்போது தங்குவதற்கு என்று தாராளமாக ஒதுக்கி விட்டிருந்த காரைக்கட்டடம். கொள்ளுப் பேரனான அவர், அதை இங்குமங்கும் இடித்து காசைத் தண்ணீராக செலவழித்து எத்தனை அலங்காரமாக - நவீன வசதிகளுடன் கிராமத்து சூழ்நிலையில் அமைதியான அந்த இடத்தில் அற்புதமாக அமைத்து விட்டிருந்தார்.

எதற்காக...? எல்லாம் அவளுக்காகத்தான், பலன்...?

பற்களை நற நறவென்று கோபத்துடன் கடித்துக் கொண்டு குளியல் அறைக் கதவைப் படீர் என்று சாத்திக்கொண்டார்.

குளித்து முடித்துவிட்டு பட்டுக்கரை வேட்டியும், மல்ஜிப்பாவும் தரித்துக்கொண்டு கீழே மெல்ல இறங்கி வந்தார்.

ஒரு காலத்தில் ஏகப்பட்ட வேலையாட்கள் இருந்த வீடுதான் அது.

இப்போது? சமையலையும் மற்ற ஏனைய காரியங்களையும் கவனிக்க வைரவனும் வீடு கூட்ட வேலைக்காரி ஒருத்தியும் - தோட்டக்காரனும் மட்டுமே தான் இருந்தனர். எப்போதாவது வைரவன் கிராமத்துக்குள் சென்று ஜன்னல் துடைக்கவும் - ஒட்டடை அடிக்கவும் தரை முழுவதையும சோப்புப் போட்டு தேய்த்துக் கழுவவும் தேவநாதன் உத்தரவின் பேரில்தான்... உதவிக்கு இரண்டு

https://telegram.me/aedahamlibrary



ஆட்களைக் கொண்டு வருவதுண்டு.

விடியுமுன் எழுந்து வைரவன் பச்சைத் தண்ணீரில் முழுகிவிட்டு பூஜை அறையைச் சுத்தப்படுத்தி, விளக்கை ஏத்திவிட்டிருந்தான். தோட்டத்தில் பூத்துக்கிடந்த மல்லிகையையும் சண்பக மலர்களையும் வெள்ளிப் பூக்கூடையில் நிறைத்து அறைக்குள் வைத்திருந்தான். சமையலறையில் அம்மியில் அவன் ஏதோ அரைக்கும் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

மீசையைத் தடவியபடியே தேவநாதன் பூஜை யறைக்குள் வந்தார். சுவற்றிலே வரிசையாகத் தொங்கிய தெய்வங்களின் படங்களை ஒருமுறை நோட்டம் விட்டார்.

முருகன் அவரது மூதாதையரால் வழிவழியாகக் கொண்டாடப்பட்ட தெய்வம். காலஞ் சென்ற தமது பெற்றோர்களைப் போல் அவருக்கு பக்தி பஜனை இவைகள் மீது ஈடுபாடுகள் கிடையாது. எனினும் காலையில் எழுந்ததும் காப்பி சாப்பிடுவது என்ற வழக்கம் போல குளித்து முடித்ததும் பூஜை அறைக்குள் வந்து ஒரு பிடி மலரை எடுத்து கல்யாண கோலத்தில் மேடை மீது கழுவித் துடைத்து பொட்டிட்டு பூவணிந்து நிற்கும் முருகனது திருவுருவின் மீதும் அவரது பத்தினியர் மீதும் தூவி விட்டு வைரவன் தயாராக தூபக் கலசத்திலே வைத்திருக்கும் கற்பூரத்தை ஏற்றிக் காட்டி விட்டு - கையெடுத்து கும்பிட்டு விட்டு வெளியே வந்து விடுவார்.

அத்துடன் அவர் செய்த எல்லா பாவங்களையும் அநியாயங்கள் - அக்கிரமங்கள் எல்லாவற்றையும் பொசுக்கிச் சாம்பலாக்கிவிட்டதொரு நினைப்பு.

பூஜை அறையை ஒட்டிய அந்த பெரிய ஹாலின் நடுவே தொங்கிய பர்மா தேக்குமர ஊஞ்சலின் மீது வந்து உட்கார்ந்து கொண்டார். துடைத்துவிட்ட சலவைக்கல் தரை

https://telegram.me/aedahamlibrary



மீது வட்ட வடிவில் பெரியதானதொரு கம்பளி விரிப்பு - அதன் மேல் காஷ்மீர முக்காலி. அதன் மேல் பிராசோ போட்டுத் துடைத்து, பொன்னாக மின்னிய பெரிய வெண்கல பூந்தொட்டி - வைரவன் தோட்டத்திலே, பூத்துக்கிடந்த ரோஜா மலர்களைச் சீராக வெட்டி அழகாக அதற்குள் சொருகி வைத்திருந்தான்.

அந்த ஹாலின் சுவரில் ஒரு பக்கத்திலே அவரது மூதாதையரின் படங்கள் ஒரே அளவில் பெரிதாக்கப்பட்டு பொற்பூச்சு பூசிய சட்டத்திற்குள் அடக்கி - வரிசையாக மாட்டப்பட்டிருந்தன. முண்டாசும் - சரிகை அங்கவஸ்திரமும் வைரக் கடுக்கனும் பிடி மீசையுமாக விழித்த அப்பா நீலமேகத்தின் படத்தை உற்றுப் பார்த்தார். தொண்டு கிழவராக படுக்கையில் நாரும் தோலுமாகக் கிடந்து ஊரிலிருந்த வியாதிகள் அனைத்தும் உடலை வாட்ட, விடேன் தொடேன் என்று எண்பத்தெட்டாவது வயது வரை இருந்துவிட்டுதான் அவர் பரமபதமடைந்தார். சாகும் வரை அந்தக் கிழவர் ஓயாது புலம்பிக் கொண்டுதான் இருந்தார்.

‘‘தேவநாதா! இது ஒரு வயசா? நான் சொல்றதைக் கேள். நம் உறவிலே உனக்குப் பெண் கொடுக்க நான், நீயின்னு வருவாங்க. பேசாம ஒருத்தியைப் பார்த்துக் கட்டிக்கோ. நம்ம வமிசம் வளர வேண்டாமா? பார்வதி போய் பத்து வருஷம் ஆகப்போகுது. அவளோட எல்லாம் போச்சுன்னு இப்படி ஒண்டிக்கட்டையாக ஏண்டா நீ தவிக்கணும்’’ சதா கிழவர் முணுமுணுத்தார்.

தேவநாதனை பெரிய வைத்தியராக்க வேண்டும், அந்த பிராந்தியத்திலேயே சிறந்த அறுவை நிபுணனாக மகன் விளங்க வேண்டும் என்றெல்லாம் அப்பாவுக்குக் கனவு. ஆனால் பிள்ளை பட்டணத்திற்கு சென்று படித்தவன் - பார்மஸியில் பட்டம் பெற்று கிராமத்துக்குத் திரும்பி வந்த

https://telegram.me/aedahamlibrary



கையுடன் அண்மையிலிருந்த டவுனில் ஒரு மருந்துக் கடை வைத்து சில ஆண்டுகளில் கொழிக்கத் தொடங்கி விட்டிருந்தார்.

பல ஏக்கர் வாழையும், நெல்லும் விளைந்த நிலங்களுக்கு சொந்தக்காரராக இருந்தும் கட்டும் செட்டுமாக வாழ்ந்தார் அப்பா. அத்துடன் வட்டிக்கடை வைத்து குவித்த பணம் வேறு பாங்கில் தூங்கியது. அம்மா மேனியிலும், இறந்துபோன மனைவி பார்வதி உடம்பிலும் கனத்த நகைகள் கிலோ கணக்கில் லாக்கரில் உறங்கின.

அப்பாவுக்குப் பின் சொந்த உபயோகத்திற்கு மட்டும் கொஞ்சம் நிலங்களை வைத்துக்கொண்டு மீதியை விற்று முதலாக்கி விட்டிருந்தார் அவர்.

ஊரிலே அவர்தான் பெரிய புள்ளி. கோவில் உற்சவங்கள் போது, முதல் மரியாதை அவருக்குத்தான். பஞ்சாயத்து தலைவர்கூட அவரிடம் ஒரு வார்த்தை கேட்காது எந்தக் காரியத்தையும் துவங்கியதில்லை. அந்தஸ்து ஆஸ்தி வியாபாரம் - நிலங்கள் - அழகான வீடு - போக்குவரத்திற்கு புத்தம் புதிய பியட் கார் எல்லாம் இருந்தன. பயன்...?

ஹாலை ஒட்டியிருந்த சாப்பாட்டறையில் பன்னிரண்டு பேர் சேர்ந்தாற்போல் உட்கார்ந்து சாப்பிடக் கூடிய அந்தப் பெரிய தேக்கு மர மேஜை மீது கேரள நாட்டு கை வண்ணத்துடன் விளங்கிய சிறிய பாயை விரித்துப் போட்டு வெள்ளித்தட்டை கொண்டு வந்து வைரவன் வைத்தான். ஒரு பெரிய வெள்ளி பேலா நிறைய இடியாப்பமும், சிறு வெள்ளிக் கிண்ணத்தில் தேங்காய்ப் பாலும் கரண்டியும் சர்க்கரை கிண்ணமும் வைத்து விட்டு மரத்தட்டில் பீங்கான் கெட்டில் நிறைய காப்பியும், சாப்பிட கோப்பையும் சுமந்து கொண்டு வந்து வைத்தான்.

https://telegram.me/aedahamlibrary



வைரவன் தமிழன் என்றாலும் நீண்டகாலம் கேரளத்திலே தங்கி விட்டவன். மூன்று காலமும் முழுகா விட்டால் மண்டை வெடித்துவிடும் போன்ற பழக்கம். நீலமேகம் காலத்திலிருந்து வேலையிலிருப்பவன். மனைவி மக்கள் என்ற பந்தபாசங்கள் எல்லாம் அற்றுப் போய்த் தனிக் கட்டையாகத் தள்ளாத வயதிலே அந்த வீட்டில் அவன் தடுமாறிக் கொண்டிருந்தான். எத்தனையோ முறை வேலையை விட்டு சொந்த கிராமத்திற்கு திரும்பி விடவேண்டுமென்ற ஆதங்கம் அவனுக்கு. ஆனால் முடியாத ஒரு வேலையில் மாட்டிக் கொண்டு விட்டோமே என்ற தவிப்பு.

முன்போல் பரபரப்பாக அவனால் இயங்க முடியவில்லை. வயதும் - தள்ளாமையும் அவனை அயரச் செய்தன. கை வைத்த பனியனும் - வெள்ளை வேட்டியும் நெற்றி நிறைய திருநீறுமாக அவன் பளிச்சென்று காணப்பட்டான். அவனது வேலையிலும் சுத்தம் தாண்டவமாடியது. மேல் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு மெல்ல நடந்து ஹாலுக்குள் தலையை நீட்டினான்.

காப்பி, பலகாரம் தயார் என்று அறிவிக்க லேசாக இருமினான்.

ஊஞ்சலிலிருந்து திரும்பினார் தேவநாதன்.

''இன்னும் எட்டு மணி ஆகலை. ஐந்து நிமிடம் இருக்கு. அதுக்குள்ளாகவே நீ காலில் கஞ்சியை ஊத்திக் கிட்டு வந்துட்டியாக்கும்... எகத்தாளமாக கேட்டபடி அவர் ஊஞ்சலினின்று இறங்கினார்.

வெள்ளித் தட்டின் மீது வைரவன் பரிமாறிய இடியாப்பத்தை வெறித்தார்.

குனிந்த தலைநிமிராது பணிவுடன் இடியாப்பத்தின் மீது தேங்காய்ப் பாலை ஊற்ற, அவன் கரண்டியைக் கையில் எடுத்து முகர்ந்தான்.

https://telegram.me/aedahamlibrary



திடீரென்று முகம் சிவந்து பற்களைக் கடித்தார் தேவநாதன். ''முட்டாள் எத்தனைவாட்டி சொல்லுவது, தேங்காய்ப்பால் என் உடம்புக்கு ஒத்துக்காதுன்னு முன்னமே சொல்லியிருக்கேன். மடசாம்பிராணி... தெரியாமத் தான் செய்கிறாயா அல்லது வேணுமினே செய்கிற காரியமா....'' கத்தி கூச்சலிட்டபடி வெள்ளிக் கிண்ணத்தை ஆவேசமாக எடுத்து அத்தனை பாலையும் அவன் முகத்திலே விசிறிக் கொட்டினார்.

முகம், கழுத்து பனியன் - வேட்டி எல்லாவற்றிலும் தேங்காய்ப்பால் அபிஷேகம். மேல் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். மவுனமாக அவரை உற்றுப் பார்த்தான். அந்தப் பார்வையிலேயே தேங்கி நின்ற ஏராள மான பொருட்களை உணர்ந்த தேவநாதனின் ஆத்திரம் அதிகமாகியது.

''மடையா, போய் பசும்பாலை சூடாக எடுத்துக் கொண்டு ஓடியா, எட்டடிக்கப் போகிறது. நேரத்தோடு ஒட்டி சாப்பிடணும்னு டாக்டர் உத்தரவாச்சே...'' சீறினார்.

சூடான பசும்பாலை டம்ளரில் நிறைத்துக் கொண்டு வந்து வைத்துவிட்டு பின்பக்கமிருந்த வேலையாட்கள் உபயோகிக்கும் குளியலறைக்கு விரைந்தான் வைரவன்.

உள்ளே பொங்கி எழுந்த சினத்திலே அவன் உடல் முழுவதும் நடுங்கியது. நெஞ்சு பதறியது. வர வர தேவ நாதன் பெரும் அசுரனாக மாறிக்கொண்டு வருகிறார். வேணுமென்றே அவனைக் குத்தி குதறி, அவன்படும் அவஸ்தைகளைப் பார்ப்பதில் மனிதனுக்கு ஒரு குரூர ஆனந்தம். ஒருமுறை தமயந்தி அவனிடம் சொன்ன வார்த்தை நினைவுக்கு வந்தது

''அவர் ஒரு ஸாடிஸ்ட்டு''

''அப்படின்னா என்ன அர்த்தம் குழந்தே?'' கேட்டான் அவன்.

https://telegram.me/aedahamlibrary



"தேவநாதன் ஊருக்கு உபகாரி - பெரிய மனிதர் எல்லாம் சரிதான். உணர்வுகளில் அவர் ஒரு பயங்கர மிருகம். வெறிபிடித்த மிருகம் வைரவன் தாத்தா! அவரிடம் நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள்" பதினெட்டு வயதிலேயே அந்தக் குழந்தை தேவநாதனை அணு அணுவாகப் புரிந்து கொண்டு விட்டிருந்தாள்.

## 2

தேவநாதன் ஒரு மிருகந்தான். அதுவும் பைத்தியம் பிடித்த தன் உணர்வுகளுக்கு அவனை ஒரு வடிகாலாக வைத்துக்கொண்டு ஆட்டிப்படைக்கின்ற அசுர மிருகம்.

பாலில் நனைந்து பிசுபிசுத்த ஆடைகளை கலைந்து பிளாஸ்டிக் வாளியில் போட்டுவிட்டு, அவசரமாகக் குளித்து அவன் வேறு உடுத்திக் கொண்டான்.

துணிகளை அலசிப் பிழிந்து கொடியில் போட்டுவிட்டு விபூதி அணிந்து கொண்டு அவன் வெளியே வருவதற்குள் அவர் தோட்டத்திற்குள் போய்விட்டிருந்தார்.

உடம்பிற்கு சுகம் இல்லை என்று அவர் அடிக்கடி கூறுவதெல்லாம் கலப்படமில்லாத பொய், சுபாவத்திலே அவர் பெருந்தீனிக்காரர். சமீப காலத்தில் அவருக்கென்ன பசியோ? அளவுக்கு மீறியே சாப்பிட்டார். இரவு வேளை களில் பீரோவுக்குள் மறைத்து வைத்திருக்கும் புட்டிகளுடன் உட்கார்ந்து விடுவார்... போதை ஏற ஏற பேச்சுக்கள் காரமாகவும் விரசம்ாகவும் கேட்க வேதனையாகவும் இருக்கும். அவனுக்கு அவரது பழக்க வழக்கமெல்லாம் அத்துபடியான சங்கதிதானே! வெள்ளித் தட்டிலும் பேலாவிலும் அவன் குவித்து வைத்திருந்த அத்தனை இடியாப்பமும் காலியாகி விட்டிருந்தது. எருமை மாடு தொட்டியில் உறிஞ்சுவது போல் கெட்டில் காப்பி

https://telegram.me/aedahamlibrary



முழுவதையும் ஆசாமி உறிஞ்சி விட்டிருந்தார். டம்ளரில் பாலும் காலியாகி விட்டிருந்தது. பாத்திரங்களை எடுத்துக் கொண்டு அவன் சமையலறைக்குள் போன போது அந்த பெரிய ஜன்னல் வழியே பார்த்தான். வழக்கம் போல் அந்த ரோஜா பாத்திகள் அருகே அவர் மேலும் கீழும் உலாவிக் கொண்டிருந்தார்.

செவேலென்று இதழ்களை விரித்துக்கொண்டு கிளைக்கு நாலாக பூத்திருந்த அந்த சிவப்பு ரோஜா செடியருகே வந்து அவர் வெகுநேரம் பூக்களையே பார்த்துக் கொண்டிருந்தார்.

தோட்டத்திற்குள் கார் வரும் சப்தம் கேட்டதும் விடுக்கென்று திரும்பிப் பார்த்தார். டாக்டர் நாராயணன் காரை நிறுத்திவிட்டு மருந்து பெட்டியுடன் வண்டியினின்று இறங்கினார்.

''என்ன காலை வேளையில் சிவப்பு ரோஜாக்களைப் பார்த்துக்கொண்டு மயங்கி நிற்கிறீர்களே? பக்கத்து டவுனில் சிவப்பு ரோஜாக்கள் என்கிற படம் வந்திருக்கே. நீங்கள் பார்த்தீர்களா? வீட்டிலே எல்லோரும் போய் விட்டு வந்தாங்க'' சிரித்தார்.

அவர் வெகுநாளைய குடும்பத்து வைத்தியர். வயதில் அவரை ஒத்தவர். அந்த உரிமையிலே நெருக்கமாக சில சமயம் பேசுவதுண்டு. முதல் காட்சிக்கே தேவநாதன் போய் பார்த்துவிட்டுத்தான் வந்திருந்தார். ஆனால் அதை சட்டென்று ஒப்புக்கொள்ள மனம் இல்லை.

''டிக்கெட் கிடைக்கறது கஷ்டமாம். படம் ஓகோன்று ஓடுகிறதாம். புதுவித உத்திகளாம். புதிய கருத்துக்களாம், அடுத்த வாரம் போகலாம்னு இருக்கேன். வரீங்களா'' ஆமாம் இன்னிக்கு கூட ஊசி போடப் போறீங்களா? உங்களை பார்த்தாலே பயமா இருக்கு''

https://telegram.me/aedahamlibrary



''உங்களுக்கா பயம்?'' டாக்டர் இரு பொருள்பட சிரித்தார்.

சின்ன வ்யதிலிருந்தே தேவநாதனை அவர் அறிவார். முரட்டுப் பையனாக, பின்னால் திமிர் பிடித்த உல்லாச வாலிபனாக - அதற்குப் பின்னர் அந்தஸ்து வெறியனாக அவரை பல நிலைகளிலும் பார்த்துப் பழகியவர்.

வெளியே எல்லோரும் ''ஆகா திரு தேவநாதன் அவர்கள் கொடைவள்ளல்'' என்றுதான் புகழ்வார்கள்.

ஆனால் அவரது நெஞ்சில் கருணை என்பது கடுகளவும் கிடையாது என்பது நாராயணனுக்கு நன்கு தெரியும்.

ஒரு சமயம் வேலைக்காரன் வடிவேலுவின் மனைவி இருமி ரத்தம் கக்கிக்கொண்டு க்ஷயரோகத்தில் உருகி நகரத்து ஆஸ்பத்திரியில் செத்துக் கொண்டிருந்த போது ஐந்து நாட்கள் மனைவியுடன் ஆஸ்பத்திரியில் தங்கி விட்டான் வடிவேலு. மனைவி இறந்ததும் அவளுக்கு மண் கொடுத்துவிட்டு வந்த குற்றத்திற்காக... வைத்தியர் நாராயணன் கண்முன்னே சாட்டையினால் அவனை வீசியது இன்று நடப்பது போன்று அவர் நினைவிலிருந்து நீங்காத ஒரு பயங்கர அதிர்ச்சி. ஐந்து நாள் சம்பளத்தை பிடித்துக்கொண்டு காலமெல்லாம் நாயாக உழைத்த அந்த அப்பாவி வேலையாளை உடனடியாக வேலை யினின்று நீக்கிவிட்ட கொடைவள்ளல் தான் அவர்.

இந்தக் காட்சி அவர் நேராக பார்த்தது. இன்னும் கேள்விப்பட்டது எத்தனையோ?

தேவநாதன் மனைவி பார்வதி கஷ்டப் பிரசவத்தில் குழந்தையுடன் இறந்துவிட்டதாகத்தான் ஊரில் கதை. கணவனது நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டு கேள்விகள்

https://telegram.me/aedahamlibrary



கேட்டபோது கோபம் மூண்டெழுந்து மிருகமாகி கண் மூஞ்சி தெரியாது அவளை தேவநாதன் அடித்து நொறுக்கி விட்டார். பூரண கர்ப்பிணி அவள் அப்போது, படாத இடத்தில் அடிபட்டு உள்ளே ரத்தக் கசிவு ஏற்பட்டு மரணமடைந்து விட்டாள் என்பதுதான் உண்மை.

இதை அவருக்கு முன் அந்த வீட்டின் குடும்ப வைத்தியராக இருந்த ரங்கபாஷ்யம் தான் சொன்னார். 'பிரேத பரிசோதனை செய்திருந்தால் உண்மை அம்பல மாகியிருக்கும். மனிதன் கம்பி எண்ணப் போயிருப்பான். அந்த பொல்லாதவனோடு மல்யுத்தம் செய்ய எனக்கு துணிவு இருக்கவில்லை. மனசாட்சியை மறைத்துக் கொண்டு ''கஷ்ட பிரசவத்திலே மரணம்'' என்று சான்றிதழில் கையெழுத்திட்டு விட்டேன், என்ன செய்வேன்'' என்று தமது அந்திய காலத்தில் அவர் நாராயணனிடம் அடிக்கடி சொல்லி புலம்பியதுண்டு.

''உங்களுக்கு ஊசி மருந்து எதுவும் தேவையில்லை, உண்மையான தேவை என்னன்னு சொல்லட்டுமா?'' டாக்டர் சிரித்தார், அதை தொடர்ந்து உள்ளே சென்றார்.

படுக்கை மீது வாட்டசாட்டமாகக் கிடந்த அவரைப் பரிசோதித்து விட்டு வாஷ்பேசினில் கையைக் கழுவிக் கொண்டு வைரவன் கொடுத்த துண்டில் கையைத் துடைத்துக் கொண்டார்.

''உங்களை பொறுப்பாக கவனித்துக் கொள்ள மனைவி தேவை, அவ்வளவுதான்'' என்று புன்னகைத்த டாக்டர், வைரவன் பக்கம் திரும்பி, என்ன? உன் எஜமானருக்கு நீயாவது எடுத்து சொல்லக் கூடாது? நாற்பது வருஷமா இந்த குடும்பத்தோடயே ஒண்டிக் கொண்டிருக்கிறியே - இவங்க பந்தத்திலே இவருக்குத் தக்க இடத்திலே தக்க வயசிலே பெண் இல்லாமலா இருக்கும்? உம்... என்று கேட்டுக் கொண்டே அவர் தம் மருந்துப் பெட்டியை மூடினார்.

https://telegram.me/aedahamlibrary



வைரவன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு அவர் பின்னால் நாய்க்குட்டிபோல் ஓடிச்சென்று வாசல் வரை வழியனுப்பிவிட்டு வந்தான். வைத்தியர் கார் கிளம்பி தோட்டத்தை விட்டு நகர்ந்ததும் கேட்டை மூடிக் கொண்டு மெல்ல உள்ளே வந்தான்.

பகல் உணவிற்கு பிரியாணியும் தயிர் பச்சடியும் செய்யும்படி எஜமானனின் உத்தரவு - மாதாந்திர சாமான் களை வாங்க கடைக்குப் போய்வர வேண்டிய வேலையும் கூட இருந்தது. உள்ளே வந்தவன் கவனித்தான்.

காலையில் வந்த தமிழ் பத்திரிகையை ஊஞ்சலின் மீது வேலைக்காரி வைத்துவிட்டுப் போயிருந்தாள்.

சூடாக தாகத்திற்குக் கொஞ்சம் தேநீர் தயாரித்து எடுத்துக் கொண்டு பத்திரிகையுடன் எஜமானனின் படுக்கை யறைக்குள் நுழைந்தான். மிருதுவான சோபா ஒன்றின் மீது தேவநாதன் காலை நீட்டிக்கொண்டு சாய்ந்து கிடந்தார். வழக்கம்போல் அவர் சிந்தனை எங்கேயோ சிலந்தி கூடுகட்டிக் கொண்டிருந்தது. பத்திரிகையை பணிவுடன் அருகிலிருந்த முக்காலி மீது வைத்தான். பின்னர் பேசத் துணிவின்றி தலையைச் சொறிந்து கொண்டு நின்றான்.

என்ன? என்பது போல் அவர் அவனை உறுத்து விழித்தார். ''மாதாந்திர சாமான்களை வாங்க கடைக்குப் போகணும்'' ....மென்று விழுங்கினான்.

''மாதம் முடியலை. அதுக்குள்ளேயே சாமான்கள் தீர்ந்து போச்சா? ஏண்டா உண்மையைச் சொல்.மறுபடியும் அந்த பழைய வேலையை ஆரம்பிச்சுட்டியா? கண்டு பிடிச்சேன்னா முதுகுத்தோலை பிச்சு உப்பு தடவி விடுவேன்... தெரியு மில்லையா... படுவா ராஸ்கல்'' உறுமிக்கொண்டு எழுந்து இரும்பு பீரோவைத் திறந்தார். மேல் தட்டில் அடுக்கா வைத்திருந்த நோட்டுக் கத்தை

https://telegram.me/aedahamlibrary



ஒன்றை எடுத்து நான்கு நூறு ரூபாய்களை உருவி அவன் பக்கம் விசிறினார்.

''எல்லாத்துக்கும் கணக்கு எனக்குத் தெரியணும். பில்லைத் தொலைச்சுட்டேன்னு பழைய பல்லவியைப் பாடினியோ கொன்னு குழிவெட்டி புதைச்சுடுவேன்?'' அதட்டியபடி பீரோவை சாத்திவிட்டு ஆசனத்தில் வந்து பத்திரிகையை கையில் எடுத்துக் கொண்டார்.

எச்சிலை விழுங்கிக் கொண்டான் வைரவன். கீழே அவர் வீசிப் போட்ட நோட்க்களைப் பொறுக்கி எடுத்து தன் இடுப்பிலிருந்த பெல்ட் பர்சில் பத்திரமாக வைத்துக் கொண்டான்.

ஒரு பக்கத்து ஜன்னல்களைத் திறக்க மறந்து போய் விட்டிருந்தாள் வேலைக்காரி.

திரைச்சீலைகளை ஒரு புறமாக ஒதுக்கி விட்டு ஜன்னல்களைத் திறந்து விட்டான். மின்விசிறியை நிதானமாகச் சுழலச் செய்துவிட்டு அவன் வெளியே போகக் கிளம்பினான்.

தேநீரை சுவைத்தபடியே அவர் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

''டே! வைரவா. இங்கே வா... உரத்து அதட்டிக் கூப்பிட்டார்.

விரைந்து ஓடிவந்து அருகே கைகளைக் கட்டிக் கொண்டு குழைவாக நின்றான் அவன்.

''உனக்கு தமிழ் படிக்கத் தெரியுமே. இந்தச் செய்தியைப் படிச்சுப் பார்... பத்திரிகையின் நடுவிலிருந்த ஒரு தாளை இழுத்து அவன்முன் வீசிப் போட்டார்.

https://telegram.me/aedahamlibrary



காற்றிலே அறையின் மூலையில் போய் விழுந்த அந்தத் தாளை அவன் ஓடிச் சென்று எடுத்து பிரித்து அவர் சுட்டிக்காட்டிய செய்தியைப் படித்தான்.

"கிரீஸ் நாட்டில் லாமியா எனும் ஊரில் ஒரு சகோதரன், இரு சகோதரிகள். மூவரும் சேர்ந்து தங்களது கடைசி தங்கையை முப்பது வருட காலமாக ஒரு பாதாள அறையில் கைதி போல் அடைத்து வைத்திருந்தார்கள். போலீஸிற்கு தகவல் தெரிந்து அறையை உடைத்து அவளை விடுவித்தனர். நாற்பேத்தேழு வயதாகிவிட்ட அந்த பெண் மேலே உடை ஏதுமின்றி மிருகம் போல் பேசத் தெரியாது உளறிக் கொண்டு மிரண்டபடி பரிதாபமாக இருந்தாள். இதற்கு அந்த சகோதரர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது."

காய்ந்து போன உதட்டை நாவால் தடவிக் கொண்டு வைரவன் எஜமானின் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தான்.

'நெஞ்சமுழுத்தத்தோட தமயந்தி என்ன சொன்னாள்? கூண்டுக் கிளியாட்டமாக அவளை வீட்டில் சிறை வைச்சிருக் கேன்னு சொன்னாளே... ஞாபகம் இருக்கா.... வளர்த்து ஆளாக்கி படிக்கவச்சு எல்லாம் செய்த என்னைப் பாவி மகள் என்ன கோலம் செய்தாள்?'

மீண்டும் எச்சிலை விழுங்கிக் கொண்டான் வைரவன்.

"ஆடு திருடின கள்ளன் மாதிரி நீ ஏன் முழிக்கிறே. குத்தமுள்ள நெஞ்சு குறுகுறுக்குதா... நான் பொல்லாத வனாக இருப்பேன்" என்று சத்தம் போட்டார்.

வைரவன் மவுனமாக பத்திரிகைத் தாளை மடித்து முக்காலி மீது வைத்துவீட்டு காலிக் கோப்பையுடன் மெல்ல அங்கிருந்து கீழே நழுவிவிட்டான்.

https://telegram.me/aedahamlibrary



# 3

உட்காரப் பிடிக்காது எழுந்து வெளி வராந்தாவிற்கு வந்தார் தேவநாதன். மறுபடியும் அவர் பார்வை தோட்டத்தின் பக்கம் திரும்பியது. மதில் சுவர் ஓரமாக ஓங்கி வளர்ந்து நின்ற பலாமரம் முன்னைவிட இந்தத் தடவை அதிகம் காய்த்து விட்டிருந்தது. கிளைக்குக் கிளை தொங்கிய பலாப் பிஞ்சுகளைப் பார்த்ததும் - மறுபடியும் அவருக்கு அவளது நினைவு - நான்கு ஆண்டுகளுக்கு மேலாகியும் உதறிவிட முடியாத நினைப்பு.

தமயந்தி படிப்பில் மட்டும் கெட்டிக்காரியல்ல. சமையலிலும் கைதேர்ந்தவள். அது அவளது பரம்பரை தொழிலாயிற்றே! விடுமுறைக்கு வந்தபோதெல்லாம் அவள்தான் சமைப்பாள். பலாப்பிஞ்சுகளைப் பறித்து முள்போக சீவி, துண்டமிட்டு உப்புடன் வேகவைத்து மசாலாவில் தோய்த்து எண்ணெயில் பொரித்து ''சித்தப்பா'' மீன் வறுத்து வச்சிருக்கேன் சாப்பிடுங்கோ'' என்று விளையாட்டாகச் சொல்வாள்.

ஒரு தட்டு நிறைய வைத்த வறுத்த பலாக்காய் துண்டங்கள் அத்தனையையும் தின்று விடுவார் - அவ்வளவு ருசி அவள் கை பக்குவத்திற்கு!

''சித்தப்பா, ரொம்பக் குளிராக இருக்கே?'' சொல்லிக் கொண்டே போர்வையை எடுத்து அவர்மீது அவள் போர்த்தும்போது தவறிப் போய் அவளது பிஞ்சு விரல்கள் அவர் கழுத்திலே பட்டுவிடும்.

உடம்பெல்லாம் இன்பப் பூரிப்பில் துடித்துப் போகும், நெஞ்சு வேகமாக அடித்துக் கொள்ளும்.

''என்ன இப்படி வேர்த்துக்கொட்டுது... கேட்டுக் கொண்டே அவள் துண்டை எடுத்து அவர் நெற்றி மீது

https://telegram.me/aedahamlibrary



துளிர்த்த வியர்வையைத் துடைத்து விடும்போது... அதை எல்லாம் நினைத்துக் கொண்டதும் தமக்குள்ளே மூண்ட ஆத்திரத்தை அடக்கமாட்டாது படுக்கையறைக் கதவைப் படார் என்று சாத்தித் தாளிட்டுவிட்டு படுக்கை மீது தொப்பென்று போய் விழுந்தார்.

தமயந்தி... மோசக்காரி ... பாவி... பற்களைக் கடித்தார். ஓங்கி சுவற்றின் மீது கையை மடக்கிக் கொண்டு குத்தினார்.

கை வலித்ததே ஒழிய, மனதைக் கனத்த அந்த எண்ணங்களின் சுமை, வேதனை எதுவும் குறையவே இல்லை.

அன்று பிற்பகல் அருகிலிருந்த டவுன் ஹைஸ்கூலில் பரிசளிப்பு விழா. தேவநாதன் விழாவுக்குத் தலைமை வகித்து பரிசு வழங்க இருந்ததால் பகல் உணவிற்குப் பின்னர் சில்க் ஜிப்பாவும், சரிகை அங்கவஸ்திரமுமாக கிளம்பி விட்டார். தமது காரை அவர் தாமே ஓட்டுவது வழக்கம். போர்டிகோவில் நிறுத்தப்பட்டிருந்த காரைக் கழுவித் துடைத்துவிட்டு, வைரவன் டிரைவர் ஆசனத்துக் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு அவருக்காகக் காத்திருந்தான்.

''விழா முடிஞ்சதும், அப்படியே மருந்துக் கடைக்குப் போய்விட்டு அஞ்சு மணிக்கு மேலேதான் வருவேன். கடைக்கு நீ நாளைக்குப் போகலாம். ஒருநாள் கூட சமைக்க சாமான்கள் இல்லாமல் அப்படி துப்புறவா துடைச்சு வச்சுட்டியா!'' கேலியும் குரோதமுமாகக் கேட்டபடி வண்டிக்குள் ஏறிக்கொண்டார் அவர்.

''அதில்லை. மாசக் கடைசி. கடையிலே ரொம்பக் கூட்டமிருக்காது. வாங்கி வச்சுக்கிட்டா நடுவில் தட்டுப் படாது'' மென்று விழுங்கியபடி கதவைச் சாத்தினான் வைரவன்.

https://telegram.me/aedahamlibrary



''உன் சம்பளத்தை சாப்பாட்டறை மேஜைமேல் ராமாயண புத்தகத்துக்கடியில் வச்சிருக்கேன். எடுத்துக்கோ, போன மாசம் முன் பணம் பத்து ரூபாய் வாங்கியிருக்கே. அதை பிடிச்சுக்கொண்டு நாற்பது ரூபாய் வச்சிருக்கேன். கணக்கு வச்சுக்கோ'' உத்தர விட்டு விட்டு அவர் காரை வேகமாகச் செலுத்திக் கொண்டு தோட்டத்தினின்று சாலைக்குள் மறைந்தார்.

கேட்டை சாத்திவிட்டு மெல்ல உள்ளே நடந்து வந்தான் வைரவன். அவனைத் தவிர அந்த பெரிய வீட்டில் அப்பொழுது யாரும் கிடையாது. வீடுகூட்டும் வேலைக்காரி காலை பத்துமணி அளவிலேயே வேலையை முடித்துக் கொண்டு பழைய சோற்றை அலுமினிய கிண்ணத்தில் அடைத்துக்கொண்டு கிளம்பிவிடுவாள்.மறுபடி அவள் பொழுது சாயும் வேளைதான் வந்து வாசல் கூட்டி விட்டு பாத்திரங்களைத் தேய்த்துக் கொடுப்பாள். மாலை வேளையில் அவளுக்குச் சோறு கிடையாது.

வைரவன்தான் பரிதாபப்பட்டுக்கொண்டு ஒரு டம்ளரில் காப்பியை நிறைத்து யாரும் காணாத சமயம் துளசி மாடத்தருகே வைத்து விடுவான். வாசல் கூட்டும் வேலையை முடித்துக்கொண்டு பாத்திரங்கள் துலக்க எடுத்துப் போடுவது போல் காப்பி டம்ளரை தூக்கிக்கொண்டு தோட்டத்து கிணற்றடியில் தலைமறைவாக லபக்கென்று ஒரே விழுங்காக அதை வயிற்றுக்குள் கொட்டிக் கொள்வாள்.

வெளியாருக்குத்தான் தேவநாதன் பெரும் கொடை வள்ளல். வீட்டு வேலையாட்களுக்கு அவர்கள் உழைப்புக் குத் தக்க ஊதியமும் சவுகர்யமும் கொடுக்க விரும்பாத கல் நெஞ்சம் படைத்தவர். நாற்பது வருடங்களுக்கு முன்னர் இருபது ரூபாய் சம்பளத்தில் எடுபிடி ஆளாக அந்த வீட்டிற்குள் நுழைந்தவன் வைரவன். அப்பா நீலமேகம் காலத்தில் அது நாற்பது ரூபாயாக பெருகிவிட்டிருந்தது.

https://telegram.me/aedahamlibrary



அவரது மகன் தேவநாதன் கொடைவள்ளலின் காலத்தில் வீட்டு வேலை,எடுபிடி வேலை சமையல் வேலை, எல்லாவற்றிற்கும் ஒட்டுமொத்தமாக சேர்த்து ஐம்பது ரூபாய் சம்பளம் கிடைத்தது. அதில் அடிக்கடி பிடித்தங்கள்... ஆனால் அவன் அதைப் பற்றி குறைபட்டுக்கொண்டு ஒரு வார்த்தை பேசினவன் இல்லை.

அவரது ஏளனமான பேச்சுக்களையோ - சுடு சொற் களையோ காதுகளில் போட்டுக் கொண்டதும் இல்லை.

கடந்த நான்கு ஆண்டுகளாக அவரது கெட்ட குணம், முரட்டு சுபாவம் இரண்டும் முன்னைவிட அதிகரித்து விட்டிருந்தன. அதனால் அவன் பல துன்பங்களை அனுபவித்தான். ஆனாலும் மவுனமாகத்தான் பொறுத்துக் கொண்டிருந்தான். புரட்சி செய்து வெளியேறி விடமுடியாத ஒரு சிக்கல்.

''எருமைத் தோல் உனக்கு - ஏதாவது உறைச்சால் தானே? உப்பு போட்டுத் தின்னால்தான் உணக்கை இருக்கும்.. அடிக்கடி அவனை அவர் இடித்துக் காட்டுவது உண்டு. அப்போதெல்லாம் வைரவன் ஒரு கணம் அசந்து போய்தான் நிற்பான். பின்னர் வாத்து சிறகின் மீது கொட்டிய தண்ணீரைப் போல அந்த வசவுகளை உதறிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கத் தொடங்கி விடுவான்.

தாங்க முடியாத ஆத்திரத்தில் குமுறும்போது குளியலறைக்குள் நுழைந்து பச்சைத் தண்ணீரைத் தலையில் ஊற்றிக் கொண்டு முழுகுவான். அடுப்பருகே கொதிக்கும் பாலைப் பார்த்தபடி நிற்கும்போது கோபத்தை அடக்க முருகா - முருகா என்று நூற்றெட்டு முறை, வீட்டு குலதெய்வத்தைக் கூப்பிடுவான்.

வாயிற் கதவைத் தாளிட்டுவிட்டு உள்ளே வருமுன் வைரவன் சில வினாடிகள் யோசனையுடன் நின்றான்.

https://telegram.me/aedahamlibrary



தோட்டக்காரன் வாரத்துக்கு இருமுறைதான் வருவது வழக்கம். அன்று அவன் வராத இடைவெளி நாள். வேலைக்காரி பொழுது சாயுமுன்தான் வருவாள். விழாவுக்குத் தலைமை வகிக்கப் போயிருக்கும் தேவநாதன் வீடு திரும்ப வெகு நேரம் ஆகும். இதைவிட பொன்னான சந்தர்ப்பம் வேறு கிடைக்கப் போகிறதா?

உடனடியாக அவ்னது உள்ளத்தில் திட்டம் உருவாகியது. கொஞ்ச நாட்களாக வீட்டுச் செலவிற்குக் கொடுக்கும் பணத்தைப் பற்றிய விவரங்களை அறிய தேவநாதன் கண்குத்திப் பாம்பாகி விட்டிருந்தார். அந்த வழியில் முன்பெல்லாம் அவனிடம் கொஞ்சம் காசு சேர்வது உண்டு. இப்போது அதற்கு வாய்ப்பில்லாது போய்விட்டது. கையில் கிடைத்த பழைய பத்திரிகை - ஓட்டை ஒடைச லான அலுமினிய பாத்திரங்கள்... எல்லாவற்றையும் அப்போதைக்கப்போது அவன் கடையில் போட்டு கொஞ்சம் பணம் திரட்டினான்.

தோட்டத்தில் பழங்களை அவருக்குத் தெரியாமல் அறுத்து விற்று பழைய துணிகளை விற்று அவன் சிறுகச் சிறுக காசு சேர்க்க முடிந்தது.

மழை பெய்து தீரவேண்டிய பஞ்சம் பனி பெய்தா தீரும் என்ற அலுப்பு அவனுக்கு.

சில நாட்களாக அவனுக்கு ஒரு யோசனை, பின் பக்கத்து அறையில் பரணையில் பழைய சாமான்கள் பல காலமாக குவித்து வைக்கப்பட்டிருந்தன. தேவநாதனுக்கு அவைகளை பற்றியெல்லாம் பரிசோதித்து கணக்கு வைத்துக் கொள்ள பொழுது இருக்கவில்லை.

ஒரு முறை ஒட்டடை தட்ட உள்ளே நுழைந்தபோது பார்த்த நினைவு. ஒரு பெரிய விசேஷத்தின் போது எடுத்து

https://telegram.me/aedahamlibrary



உபயோகித்த பாத்திரங்களை மறுபடியும் பரணையில் ஏற்றியவர்கள் தவறுதலாக இரண்டு வெள்ளித் தட்டு களையும் ஒரு 'கிண்ணத்தையும் ஒரு ஈயச் செம்பையும், பித்தளை அண்டா சருவங்களுடன் சேர்த்து தூக்கி பரணையில் போட்டுவிட்டிருந்தனர். தான் கண்ட அந்த உண்மையை அவன் தேவநாதனிடம் சொல்லவே இல்லை. அவரது கணக்கில் இல்லாத அந்த பொருள்களை சமயம் வந்தபோது தன் கணக்கில் சேர்த்துக் கொள்ள அவன் காத்திருந்தான்.

பரபரப்பாக பின்கட்டுக்கு விரைந்தான். தோட்டத்துக் கதவை மெல்லத் திறந்து தேவநாதன் எதையாவது மறந்துவிட்டு எடுக்க வந்து தொலையப் போகிறார் என்று சற்று நேரம் வேவு பார்த்தான். பின்னர் கதவைத் தாளிட்டுக் கொண்டு தாழ்வாரத்தில் சாத்தியிருந்த ஏணியும் கூடத்து மேஜை மீதிருந்த டார்ச்சுமாக அந்த அறைக்குள் நுழைந்தான்.

அந்த அறையைப் பெருக்கி ஒட்டடை தட்டி ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டிருந்தது. மூடிக்கிடந்த ஜன்னல் கதவுகளைத் திறப்பதற்குள் தோள்பட்டை கழன்றது, குப்பென்று வீசிய காற்றில் பறந்து புழுதி மூக்கை அடைக்க பலமுறை பலமாகத் தும்மினான். பரணைமீது ஏணியைச் சாத்திவிட்டு வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு மெல்ல ஏறினான்.

பரணையில் ஒரே கும்மிருட்டு. இடது கையால் டார்ச்சைப் பொருத்திக்கொண்டு வலது கையால் அண்டா குண்டாக்களைத் தடவிக் கொண்டு அதற்குள் பாத்திரங்கள் இடையே கடபட என்ற சத்தம் எழுப்பிக் கொண்டு நகர்ந்தான். முடிவில் அவன் தேடிய வெள்ளிப் பாத்திரங்கள் ஒரு வெந்நீர் தவலைக்குள் கிடந்தன. கையை விட்டு துழாவி அவைகளை வெளியே எடுத்தான். கனமான வெண்கல

https://telegram.me/aedahamlibrary



குத்து விளக்கையும் விட மனமில்லை. அதையும் எடுத்துக் கொண்டான். இடுப்பிலே தயாராக வேட்டிமீது சுற்றிக் கொண்டிருந்த கனமான துப்பட்டியை எடுத்து போட்டு சாமான்களை அதில் வைத்துக்கொண்டு மெல்ல கீழே இறங்கி வந்தான். பின்னர் அவன் வேகமாக செயல்பட வேண்டியிருந்தது. ஏணியைக் கொண்டு இருந்த இடத்தில் வைத்து விட்டு வந்தான்.

கால்பட்டு பாதம் பதிந்து அடையாளம் காட்டிய அறையின் தூசிமுழுவதையும் கூட்டி எடுத்துக் குப்பைத் தொட்டியில் கொட்டி விட்டு கதவைப் பூட்டினான்.

வெகு நேரம் பரணையின் கூரை தலையில் இடிக்க - ஒட்டடை முகத்தில் கோலமிட - தூசி மூக்கை அடைக்க தேடியெடுத்த அந்த பொருள்கள் கொண்ட மூட்டையை பத்திரமாகத் தூக்கிக்கொண்டு உக்கிராண அறைக்குள் வந்தான்.

தேவநாதன் அந்தப் பக்கம் தப்பித்தவறிக்கூட எட்டிப் பார்ப்பதில்லை. சாமான் அறையிலிருந்து வெளிவரும் கலவை மணம் அவருக்குப் பிடிக்காத விஷயம். மூட்டையை பருப்பு பூப்பாய்க்குள்ளே தள்ளி அழுத்தி மூடிக் கதவைப் பூட்டினான்.

அழுக்காகிவிட்ட வேட்டி பனியன்களைக் களைந்து விட்டு - தலை முழுகி வேறு உடுத்திக் கொண்டான். சோப்பு போட்டு துணிகளை தோய்த்து அலசிப் பிழிந்து கொடியில் போட்டுவிட்டு நெற்றி நிறைய திருநீற்றை அப்பிக் கொண்டு வெளிவந்தபோதுதான் அவனுக்கு நிம்மதியாக மூச்சு வந்தது. ஆனாலும் இதயம் வெகு நேரம் படபடத்துக் கொண்டுதான் இருந்தது.

https://telegram.me/aedahamlibrary



மாலைப் பொழுது மயங்கிய வேளையில் பெரிய பூமாலையுடன் வீடு திரும்பிய தேவநாதனைப் பார்த்த போது குற்ற உணர்வில் அவன் குன்றிப்போனான் இருந்தாலும் சமாளித்தான்.

மறுநாட் காலை தேவநாதன் காப்பி பலகாரத்திற்குப் பின்னர் மாடியறைக்கு பத்திரிகைகளுடன் போன பின்பு அவன் கடைக்குக் கிளம்பினான்.

அத்தனை பெரிய மூட்டையுடன் வெளியேறினால் மாடியினின்று அவர் பார்த்துவிட்டால் என்ற அச்சம்.

வெள்ளித் தட்டுகளில் ஒன்றை மட்டும் சாமான் வாங்கும் சாக்குப் பையில் சுற்றிக் கொண்டு - வேகமாக - அவன் தோட்டத்தைத் தாண்டி வெளியே நழுவினான்.

வாடிக்கையான கடையில் வீட்டு சாமான்களுக்கு ஏற்பாடு செய்துவிட்டு பணத்தை கொடுத்து பில்லை வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டான். பின்னர் காகிதத்தில் சுற்றிய வெள்ளித் தட்டுடன் பஸ் ஏறி பக்கத்து டவுனுக்குச் சென்றான்.

அங்கே அவனுக்கு ஒரு கடைக்காரரைத் தெரியும். இது மாதிரியான வியாபாரம் அவரிடம் ஏராளம். ''யார் நீ? எங்கே வந்தே? என்ன கொண்டு வந்திருக்கிறே?'' என்ற எந்த விவரமும் கேட்க மாட்டார். வாங்கியதை உடனடியாக உருக்கி உருமாற்றி தமது மொத்த வியாபாரக் கடைக்கு பக்கத்து டவுனுக்கு அனுப்பி விடுவார்.

காகிதத்தில் சுற்றி வைத்திருந்த வெள்ளித் தட்டை அவர் முன் வைத்தான் வைரவன்.

கடைக்காரர் தட்டை எடை போட்டார். பழைய காலத்துப் பொருள். திண் என்ற நல்ல கனம். இருந்தாலும்

https://telegram.me/aedahamlibrary



கொஞ்சம் பேரம் செய்தார். வெள்ளி விலை உயர்ந்து விட்டதின் விளைவாக அவனுக்கு அந்தத் தட்டுக்கு மட்டும் ஆயிரத்து நூறு ரூபாய் கிடைத்தது. அவனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. பணத்தை வாங்கி பர்சிற்குள் அடக்கிக்கொண்டு வேகமாக பஸ் நிலையத்திற்கு விரைந்தான்.

மறுநாள் அவன் காய்கறி வாங்கிவர பகல் வெளியே கிளம்பினான். இடுப்பிலே பர்ஸில் கனத்த பணத்தைப் போல மனத்திலும் குற்ற உணர்வு சுமையாக கனத்துக் கொண்டிருந்தது. பஸ்ஸைப் பிடித்து வெகு தொலைவில் இருந்த அந்த டவுனுக்கு அவன் வந்தான். தேவநாதனுக்குத் தெரிந்தவர்கள் அவனைக் கண்டு கொள்கிறவர்கள் அங்கே யாரும் கிடையாது என்ற துணிவு. அங்கிருந்த வங்கியில் ஒரு டிமாண்ட்டிராப்ட் ரூபாய் ஆயிரத்திற்கு எடுத்தான். அருகிலிருந்த தபால் நிலையத்திற்கு விரைந்து அதை உடனடியாக தன் மனத்திலே எழுதி வைத்துக் கொண்டிருந்த முகவரிக்கு ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பி விட்டு பரபரப்புடன் ஊருக்குத் திரும்பினான்.

எவ்வளவு முயன்றும் அவன் வீடு திரும்புவதற்குக் கொஞ்சம் நேரமாகி விட்டது.

தேவநாதன் ஹாலுக்குள் முன்னும் பின்னும் கூண்டில் அடைக்கப்பட்ட புலியாக உலாவிக் கொண்டிருந்தார்.

ஓசைப்படாது பின் வழியாகக் கதவைத் திறந்து கொண்டு சமையலறைக்குள் புகுந்து அவசரமாக அடுப்பைப் பற்ற வைத்தான். முன்னதாக செய்துவிட்டுப் போன ரவை உப்புமாவை சூடாக்கி காப்பியுடன் எடுத்துக்கொண்டு ஓடி வந்து சாப்பாட்டு மேஜைமீது வைத்தான்.

https://telegram.me/aedahamlibrary



வேளை தவறிவிட்டதென்று கோபம் தேவநாதனுக்கு, பசி பொறுக்காத ஜென்மம்.

‘‘ஐயா ஊரைச் சுத்திவிட்டு இப்பத்தான் வருகிறீராக்கும்?’’ஏளனமாகக் கேட்டபடி சாப்பாட்டறைக்குள் வந்தார். மவுனமாக கெட்டிலிலிருந்த காப்பியைக் கோப்பையில் வார்த்து வைத்து விட்டு தூர கையைக் கட்டிக் கொண்டு பணிவோடு நின்றான் அவன்.

இரண்டு வாய் உப்புமாவை விழுங்கிவிட்டு அவர் அவனை உற்றுப் பார்த்தார்.

‘‘கடை சாமான் பில், காய்கறி பில் எல்லாம் இருக்குதில்லையா? கொண்டு வா கணக்குப் பார்க்கணும்’’ சீறினார்.

உள்ளே மறைந்த வைரவன் சில வினாடிகளில் பில்லையும் மீதிச் சில்லறையையும் மேஜை மீது வைத்தான்.

டிபன் சாப்பிட்டதும் பில்களை ஆராய்ந்து கணக்கிட்டு திருப்தியுடன் சில்லறையை அள்ளி தம் பைக்குள் போட்டுக் கொண்டார்.

‘‘எங்கே உன் பழைய புத்தியைக் காட்டி விடுவியோன்னு நான் அப்போதைக்கப்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கே. இந்த வீட்டிலே நீ வேலை செய்கிறாயோ..... பிழைச்சே இல்லாட்டி’’ என்று கூறிவிட்டு பக பகவென்று சிரித்தார் தேவநாதன்.

முகம் சிவந்து போன வைரவன் மூலையில் சுவற்றின் ஓரமாக ஒட்டிக்கொண்டு நின்றான்.

அவன் நெஞ்சு நெருப்பாக எரிந்தது.

https://telegram.me/aedahamlibrary



# 4

சில வருஷத்துக்கு முந்தி நடந்த கதை அது. சமயம் வந்தபோதெல்லாம் அவர் அதை எடுத்துப் போட்டு அவனைக் குத்திக் குதறிக் கொண்டிருந்தார். தந்தை இறந்ததும் மகன் சொத்துக்களுக்கு அதிபதியான சமயம் அது. வைரவன் மனைவி சிறு வயதிலேயே இறந்து விட்டாள். அவனுக்கிருந்த உறவெல்லாம் அவள் விட்டுப் போன ஒரு பெண் குழந்தை.

அவள் தன் தாய்வழி பாட்டியிடம் வளர்ந்து கொண்டிருந்தாள். வருஷத்துக்கு ஒரு முறை நாலு நாட்கள் லீவு வாங்கிக்கொண்டு குழந்தையைப் பார்த்துவிட்டு - அவள் செலவிற்குப் பணம் கொடுத்துவிட்டு வருவது அவன் வழக்கம்.

பத்தாவது வயதில் அவளுக்கு கடும் காமாலை - நோய் வந்துவிட்டிருந்தது. ஊரிலிருந்து தந்தி வந்தது.

மாதத்தின் நடுவே அவன் ஊருக்கு எப்படி போக முடியும்? தேவநாதன் உத்தரவு கொடுக்க மறுத்து விட்டார்.

ரொம்பவும் அதிகமாகிவிட்டது - குழந்தை பிழைக்க மாட்டாள் என்று அடுத்தபடியாக வந்த தந்தியைக் கண்டு அவன் அலறித்துடித்து அழுதான்.

''போய்த்தொலை'' என்று எஜமான் உத்தரவு கொடுத்தார். ஆனால் சம்பளத்தை முன்பணமாகக் கொடுக்க மறுத்துவிட்டார்.

அதுசமயம் அவனிடம் கையில் காசு ஏதும் இருக்க வில்லை. சமீபத்தில்தான் குழந்தையைப் பார்க்கப் போனவன் இருந்ததை எல்லாம் கொடுத்துவிட்டு வந்திருந்தான்.

https://telegram.me/aedahamlibrary



மறுபடி ஊருக்குப் போக ரயிலுக்கு சீட்டு வாங்கக் கூட காசு இருக்கவில்லை. அவர்கள் வீடே கதியென்று உழைத்துக் கொண்டிருந்தவனுக்கு வெளியில் கிராமத்தில் நெருங்கிய நண்பர்கள் யாரும் கிடையாது கடன் கொடுத்து உதவ.

வைரவன் ஏழையானாலும் தன்மானம் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவன்தான் - கொள்கைகள் பல உள்ளவன் தான் அரக்கன் அடியில் அழுத்தப்பட்டவனாக வாழ நேர்ந்த துர்பாக்கியம் ஏற்பட்டபோது, அவசரம் என்ற நிலை வந்ததும் அவன் கொள்கைகளை காற்றிலே ஊதி விட்டான். அப்பொழுது ஏற்பட்ட ஆத்திரத்தில்தான் அந்த இழிவான காரியத்தில் இறங்கினான்.

தேவநாதன் தங்கப் பட்டை போட்ட கைக்கடிகாரம் அணிந்து கொண்டிருந்தார். அடிக்கடி அதைக் குளிய லறையில் வைத்துவிட்டு மறந்து போவதுண்டு.

அன்று காலை அவன் புறப்படுமுன் கவனித்தான். ஐயா கடிகாரத்தை குளியலறையில் வைத்துவிட்டு திருச்சிக்கு ஏதோ காரியமாகப் போயிருந்தார்.

லபக்கென்று அதைக் கொத்திக் கொண்டு, தன் மூட்டையுடன் அவன் வெளியேறி விட்டான்.

பக்கத்து டவுனில் தங்கப் பட்டையை மட்டும் நகைக் கடை ஒன்றில் விற்றுப் பணத்தை எடுத்துக் கொண்டு - கடிகாரத்தைச் சப்பாத்திக் காட்டில் வெறுப்புடன் வீசி விட்டு ஊருக்குப் புறப்பட்டு விட்டான்.

அவன் போனது நல்லதாகிவிட்டிருந்தது. சில தினங்களில் அவனது ஒரே மகள் நோய் கடுமையினின்று மீளாது இறந்து போய் விட்டாள்.

https://telegram.me/aedahamlibrary



மகளை இழந்த துக்கத்திலே மருகிப்போய் ஒரு மாதத்திற்கு மேல் அவன் ஊரிலேயே தங்கிவிட்டான்.

கைப் பணமெல்லாம் கறைந்த பின்னர் அவனுக்கு வேறு வழியிருக்கவில்லை.

வேலைக்குத் திரும்பி வர வேண்டியிருந்தது. வீட்டுக்குள் நுழைந்தவனைக் கண்ட தேவநாதன் 'அப்படி நில்' என்று இடியோசையாக முழங்கினார்.

அவனுக்குப் புரிந்துவிட்டது. பாவிப்பயல் கண்டு பிடித்துவிட்டானே? பின் பக்கமிருந்த காலியான அறைக்குள் அவனை அழைத்துச் சென்றார் தேவநாதன்.

வெலவெலவென்று நடுங்கிக் கொண்டு நின்றான் அவன். அவன் குடும்பத்திலே யாரும் செய்யாத ஒரு கேவலமான காரியத்தை செய்து விட்டோமே என்ற குற்ற உணர்வின் சுமையில் தத்தளித்தான். நெஞ்சு உலர்ந்து நாவறண்டு பேசத் தோன்றாது விழித்தான்.

''கடிகாரத்தை என்ன செய்தே! படுவா ராஸ்கல்... திருடிக்கொண்டு போய் வித்திருக்கே... நான் கண்டு புடிச்சிட்டேன். அந்தக் கடைக்காரன் ஒப்புக்கொண்டு பயந்து போய் தங்க பட்டையை என்னிடம் திருப்பிக் கொடுத்துட்டான். கடிகாரம் எங்கே?'' உறுமியபடி சுவற்றில் தொங்கிய சாட்டையைக் கையில் எடுத்துக் கொண்டார். கிலியில் அவன் பதறிப் போய்விட்டான்.

திருட்டு குற்றத்திற்கு அவனைப் போலீசில் ஒப்படைத்து விடுவாரோ? போலீஸ் - சிறை இதெல்லாம் கேட்டறியாத கவுரவமான குடும்பத்திலிருந்து வந்தவனாச்சே கடவுளே!

''உம் உண்மையைச் சொல்... சுரீர் என்று முதுகின் மீது சாட்டை விழுந்தபோது வேதனையில் அவன் துள்ளினான்.

https://telegram.me/aedahamlibrary



''மன்னிச்சுக்கோங்க எஜமான் - ஆபத்துன்னு தந்தி வந்தது - ஊருக்குப் போக பணமில்லை - என் குழந்தை செத்துவிட்டாள் எஜமான்... அந்த ஒரு தண்டனையே எனக்குப் போதும் போதும்...'' அவன் கண்ணீர் விட்டுக் கதறினான்.

''திருட சொல்லித்தா... போய் பிச்சை எடுக்கிறது தானே.. கடிகாரம் எங்கேடா படுவா...'' மறுபடியும் ஓங்கி சாட்டை அவன் முதுகில் விழுந்தபோது அவன் வீரிட்டு அலறிவிட்டான்.

''அடிக்காதீங்க.. என்னாலே தாங்க முடியாது- செத்துப் போயிடுவேன். அந்த கடிகாரம் என்கிட்ட இல்லை... தூக்கி சப்பாத்தி காட்டிலே எரிஞ்சுட்டேன். இப்பபோய் தேடினால் கிடைக்காது.''

தேவநாதன் கோபத்திலே கொதித்துப் போனார். 'பாவி! அது என் பாட்டன் காலத்து பொருள். அநியாயம் பண்ணிட்டியே. உன்னை நான் சும்மாவிடப் போறதில்லை... வீட்டிலிருந்த வைர மாலையைக் காணோம்னு போலீசில் புகார் பண்ணப் போறேன். அந்தக் கடைக்காரன் கடிகாரப் பட்டையை விற்க வந்ததிற்கு சாட்சி சொல்ல தயாராக இருககிறான். மாமியார் வீட்டுக்குப் போய் வந்திருக்கிறே. இப்போ இன்னொரு மாமியார் வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன். அந்த சுகத்தையும் அனுபவிச்சுப் பார்... ராஸ்கல்!' மீண்டும் ஓங்கி அவன் முதுகிலே சாட்டையை வீசினார்.

தொப்பென்று அவர் காலடியில் சுருண்டு விழுந்தான் வைரவன். ''ஐயா சத்யமா சொல்றேன். நான் திருடணும்கிற ஆசையில் செய்யலை. குழந்தையை உசிரோடவாவது ஒரு முறை பார்க்கணும்கிற தவிப்பில் தப்புக் காரியத்தை

https://telegram.me/aedahamlibrary



செஞ்சுட்டேன். மன்னிச்சுடுங்கோ. கடிகாரத்துக்கு உண்டான பணத்தை உழைச்சு கடன் தீர்த்து விடுகிறேன். ஐயா கருணை காட்டுங்க... உங்க முருகன் சந்நிதியிலே, கற்பூரத்தை அணைச்சு வேணுமானால் சத்தியம் செய்து கொடுக்கிறேன்.... எஜமான்... இந்த ஏழையை மன்னிச்சுடுங்கோ...'' கதறிக் கண்ணீரால் அவர் கால்களைக் கழுவினான்.

''சீ... கழுதை விடு காலை...'' என்று பந்தைப் போல் அவனை எட்டி உதைத்து தேவநாதன் தன் மீசையைத் தடவிக் கொண்டு சற்று நேரம் சிந்தனையோடு நின்றார்.

''திருடியபின் வழக்கமாக எல்லா பயல்களும் சொல்கிற காரணந்தான் நீயும் சொல்றே. ஆபத்து வந்துட்டா மத்தவங்க பொருளை அள்ளிக்கொண்டு போகிறது நியாயமா? தொலை விட்டுவிடுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை - வீட்டு வேலை - சமையல் வேலை - மற்ற எடுபிடி வேலை எல்லாத்தையும் நீதான் கவனிக்கணும். இந்த மாசத்தோட வீடு கூட்டுகிற வேலைக்காரி, தோட்டக்காரன் இரண்டு பேரைத் தவிர மத்தவங்கள் எல்லாரையும் நிறுத்திவிடப் போகிறேன். அப்பத்தான் தொடர்ந்து வீட்டிலே ஏதாச்சும் காணாமல் போனால் குற்றவாளியைக் கண்டுபிடிக்க எளிதாக இருக்கும். அடுத்த வாட்டி ஏதாவது தப்புத்தண்டா செய்தியோ நான் பொறுக்க மாட்டேன். கடிகாரம் விலை ஆயிரம் ரூபாய் உன் சம்பளத்திலிருந்து மாதா மாதம் பிடிச்சுக்குவேன்... சரியா?''

வேறு வழியின்றி அவன் ஒப்புக் கொண்டான்.

அந்த ஆயிரம் ரூபாய் கடனுக்கு அவன் ஓடாக உழைத்தான். சிறுகச் சிறுகத்தான் சம்பளத்திலிருந்து அவர் பிடித்துக் கொண்டார். அதற்குப் பின்னர்... அவன் தேவநாதனது கொத்தடிமையாக அல்லவா போய்விட்டான்.

https://telegram.me/aedahamlibrary



அவருக்குப் பயந்து கொண்டு அவர் செய்த அத்தனை காரியங்களுக்கும் உடந்தையாக இருக்கவேண்டிய ஒரு அவல நிலையில் அவன் சிக்கிக் கொண்டு விட்டான்.

மருந்து கடை வியாபாரத்தில் மட்டுமே அவர் பெருந்தனக்காரராகி விடவில்லை. மர்மம் அவனுக்கு விரைவில் விளங்கிவிட்டது. சில கடத்தல் பொருள்களை போதை மருந்துகளை அவர் விற்று பணத்தைக் குவித்துக் கொண்டிருந்தார்.

அந்த பொருள்களை எடுத்துக் கொண்டு ரகசியமாக யாருக்கும் தெரியாது சொன்ன இடத்திலே கொண்டு சேர்ப்பிக்க வேண்டியதொரு வேலையும் அவனுடையதாகி விட்டிருந்தது.

அத்துடன் மட்டுமா?

ரகசியமாக மதுப்புட்டிகளை வாங்கிக் கொண்டு வந்து பின்னறைக்குள் வைத்துப் பூட்டி அவர் கேட்ட பொழுது மாடி படுக்கையறையில் கண்ணாடி டம்ளர், ஐஸ் துண்டங்களுடன் கொண்டு வைக்க வேண்டிய வேலை...

அப்போதைக்கப்போது அவரது மிருக வெறிக்கு அவர் விரும்பிய பெண்கள் வீட்டுக்கு தூது நடக்க வேண்டிய மட்டமானதொரு வேலையும் கூடச் சேர்ந்து கொண்டது.

இதையெல்லாம் விட பேசாது திருடன் என்ற பட்டத்துடன் கம்பி எண்ணிவிட்டு வெளியே சுதந்திரமாக வந்திருக்கலாமே, மூட்டை தூக்கிக்கூட பிழைத்துக் கொள்ளலாம்... ஏன் போலீஸ் என்றதும் பயந்து ஒப்புக் கொண்டோம் என்று தன்னையே அவன் சாடிக் கொண்டு வருந்தியதுண்டு. சில சமயங்களில் கண்ணீர்விட்டு அழுததும் உண்டு.

https://telegram.me/aedahamlibrary



புதை மணலுக்குள் காலை விட்டவன் போல் விடுவித்துக்கொண்டு ஓடத் தெரியாது, அவருடன் அக்கிரமங்களில் பங்கு கொண்டு அவனும் உழன்று கொண்டிருந்தான்.

''டே வைரவா? என்ன பண்ணிக்கிட்டு இருக்கே?'' தேவநாதனின் இடி முழக்கம் மேல் அறையிலிருந்து வந்தது.

விழிப்புற்று அவன் விரைவாக மாடிப்படிகளில் ஏறினான்.

ஜிப்பாவையும் வேட்டியையும் களைத்துவிட்டு பட்டைக் கோடுகள் போட்ட பச்சை வண்ண பைஜா மாவையும் சட்டையையும் அணிந்து கொண்டு அவர் படுக்கை மீது சாய்ந்து கிடந்தார்.

''லேசாகக் காய்ச்சல் அடிக்கிறா போல இருக்கு. கொஞ்சம் மிளகு ரசம் சீக்கிரம் வச்சு சாதத்தோட எடுத்து கிட்டு வா'' உத்தரவிட்டார். ''டாக்டரை கூப்பிட்டுட்டு வரட்டுங்களா...'' பணிவுடன் அவன் கேட்டபோது, எரிந்து விழுந்தார் அவர்.

''சொன்னதைச் செய். எனக்கு உன் உபதேசம் தேவை யில்லை. போடா கழுதை அதிகப்பிரசங்கி'' அதட்டினார்.

மறுநாட் காலை, எழுந்ததும காப்பி பலகாரம் சாப்பிட்ட பின்னர் தோட்டத்திற்குள் உலவிக் கொண்டிருந்த தேவநாதன் உள்ளே வந்தபோது வக்கீல் வரதராஜனும் கூட நுழைவதைக் கண்டான் அவன்.

வக்கீலுக்கு இப்போது என்ன வேலை? ஆவலில் அவன் மண்டை வெடித்தது.

''வைரவா... வக்கீல் ஐயாவுக்கு சூடாக காப்பி எடுத்துக் கொண்டா'' உத்தரவிட்டபடி ஹாலுக்குள் நுழைந்தார் தேவநாதன். காப்பிக் கெட்டிலுடன் அவன் வெளிப்பட்ட

https://telegram.me/aedahamlibrary



போது கவனித்தான். வக்கீல் ஐயா கையில் தடிமனான தொரு காகித உறை இருந்தது.

உயில் எழுதிக் கொண்டு வந்திருக்கிறாரா? அப்படி ஐயாவுக்கு உடம்புக்கு என்ன வந்துவிட்டது உயில் எழுத? சந்தேகமும் வியப்பும் தாளாது அவன் மரத்தட்டை காப்பி மேஜை மீது வைத்துவிட்டு அப்பால் நகர்ந்தான். ஆனால் உள் வாசலை மறைத்துக் கொண்டு தொங்கிய கனமான திரைக்குப் பின்னால் நின்றபடி காதைத் தீட்டிக் கொண்டான்.

நல்லவேளை. இருவரும் தமிழிலேயேதான் பேசினார்கள். இடை இடையே கலந்து வந்த ஆங்கில வார்த்தைகளுக்கு அவனாக ஊகித்து அர்த்தம் புரிந்து கொண்டான். காப்பியை கோப்பையில் நிரப்பி ஆளுக்கு ஒன்றாகக் கையில் எடுத்துக்கொண்டு மெல்ல அருந்திக் கொண்டே பேசினார்.

''ஒரு கோடியில் எழுதி பழைய உயிலிலேயே சேர்த்தி ருக்கலாம். நீங்க என்னவோ எல்லாத்தையும் புதுசா எழுதச் சொன்னீங்க. படிக்கட்டுமா?''

வேண்டாம். ஏற்கனவே படிச்சுப் பார்த்துட்டேனே... அது போதும். என் கையெழுத்தும் - சாட்சி கையெழுத்தும் தான் பாக்கி...

''ஆனாலும் உங்களுக்கு ரொம்ப தாராளமான மனசு ஸார்... முந்தின உயிலில் சொத்து முழுவதையும் கோவில் - பள்ளிக்கூடம் - ஆஸ்பத்திரின்னு தான தர்மங்களுக்கு எழுதி வச்சிருந்தீங்க...''

''அது நாலு வருஷத்துக்கு முந்தி எழுதின உயில்... தமயந்தி மேலே ஏற்பட்ட கோபம். மனசு ஒடிஞ்சு போய் எழுதி வச்சேன். இப்போ எனக்கு அடிக்கடி அந்தக் குழந்தை யின் நினைவு மனசை ரொம்ப வேதனை பண்ணுது... அதனால்தான் இந்த புதிய உயில். என் சொத்தில் முக்கால்

https://telegram.me/aedahamlibrary



பகுதி அவளுக்கும், அவளுக்குப் பிறந்துள்ள பிறக்கப் போகிற குழந்தைகளுக்கும் - கால்வாசிதான் தர்மத்துக்கும்னு மாத்தி எழுதச் சொன்னேன்.''

''உங்க பெருந்தன்மையைக் கண்டு நான் பூரிச்சுப் போறேன் ஸார். அந்த பெண் உங்களை அவமானப்படுத்தி விட்டு ஓடிப் போனவள். ரொம்ப மனம் நொந்து துக்கப்பட்டு அதே நோயாகி நீங்க கொஞ்ச காலம் படுக்கையாகி விட்டீங்க. இந்த கிராமம் செய்த புண்ணியம் அந்த மட்டுக்கு நீங்க பிழைச்சு எழுந்து விட்டீங்க. ஆமாம் அவள் உயிரோடு இருக்கிறாள்னு நீங்க நம்புகிறீர்களா?...'' வரதராஜன் படபடவென்று பேசினார்.

''நான் நம்புகிறேன். என் கண்மணி தமயந்தி எங்கேயோ சோத்துக்கில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறாள். அந்த நினைப்பு வரும்போதெல்லாம் என்னால் உறங்கவே முடிவதில்லை. உண்ணவும் முடிகிறதில்லை.... அந்தப் பயல் அவளை மோசம் செய்துவிட்டு போயிருக்கிறான் என்று உள்மனம் சதா புலம்புகிறது. இந்தக் காலத்து பசங்களை கபடமில்லாத வெள்ளை உள்ளங்கொண்ட சின்னப் பெண்கள் நம்பினால்... தமயந்தியின் கதியைத் தான் அடைவார்கள்...'' அவரது குரல் தழதழத்தது.

''வருத்தப்படாதீங்க தேவநாதன்... என்ன செய்கிறது... அந்தப் பெண் படிச்சிருந்தும் இப்படி ஒரு புத்தி. பத்திரிகைகளில் பல மாதங்கள் விளம்பரப் படுத்தினீங்களே - போலீசுக்குக் கூட புகார் கொடுத்தீங்க. ஆஸ்பத்திரிகள் எல்லாம் தேடச் செய்தீங்க... மாயமாக மறைந்து போனவங்க திரும்பி வருவாங்கன்னு நினைக்கிறீங்களா?

தேவநாதன் துயரப் பெருமூச்செறிந்தார். சோகமாக முறுவலித்தார். ''தமயந்தி திரும்பி வருவாள். கட்டாயம் வருவாள். என்னிடம் அவளுக்கு ரொம்ப பயம் உண்டு. அதனால் இப்போ வரமாட்டாள். நான் உயிரோடு இருக்கும்

https://telegram.me/aedahamlibrary



வரை இந்தப் பக்கமே எட்டிப்பார்க்க மாட்டாள். எனக்கும் வயசாகிக் கொண்டு போகிறது. கொஞ்ச காலமாக ரத்த அழுத்தம் வேறு. இருதயம் கொஞ்சம் பலஹீனமாயிருக்கு. திடீர்னு எனக்கு ஏதாச்சும் ஆயிட்டா நீங்கள் உயிலில் கண்டபடி ஆறு மாதத்துக்கு குறையாமல் எல்லா பத்திரிகையிலும் என் குடும்பத்து வக்கீல் என்கிற நிலையில் - அவள்தான் என் சொத்துக்கு வாரிசு என்கிற உரிமையை விளம்பரப்படுத்த வேண்டும்.''

''காசு பணம் இல்லாது தவிக்கிறவள் அத்தனை சொத்தும் தனக்கு கிடைக்கப் போகிறதென்றால் ஆசையோடு கட்டாயம் வருவாள். ஒரு சமயம் வராவிட்டால்?''

''அதற்கு உயிலில் ஒரு ஷரத்து இருக்கிறதே ஆறு மாதம் பத்திரிகைகளில் தொடர்ந்து விளம்பரப் படுத்தியும் அவள் வராவிட்டால் அந்த பங்கு சொத்தையும் - நான் குறிப்பிட்டிருக்கும் தானதர்மங்களுக்கு விநியோகிக்க வேண்டியதுதான்.''

''குழந்தையிலிருந்து ஆசையுடன் எடுத்து வளர்த்தேன். பால் ஊட்டி வளர்த்த பச்சைக்கிளின்னு பெருமையாக இருந்தேன். பால் வார்த்து ஒரு நாகப்பாம்பை வளர்த்தேன்னு யார் நினைச்சா? இந்த வீட்டு உப்புக்குக் கொடுத்து வச்சிருந்தால் சொத்து கிடைக்கட்டும். அவள் நன்றாக வாழட்டும் -அதுதான் என் ஆசி.''

''மிஸ்டர் தேவநாதன் நீங்க ரொம்ப பண்பான மனிதர். உங்களுடைய உதாரண குணம் என் நெஞ்சை நெகிழச் செய்கிறது... சொல்லிக்கொண்டே தமது கைப்பையில் வைத்திருந்த அவரது பழைய உயிலை எடுத்து சிவப்பு மையால் இது இனி செல்லாது என்று எழுதி கையெழுத்திட்டார். தேவநாதனும் அதில் கையெழுத்திட்டார்.

https://telegram.me/aedahamlibrary



அது சமயம் வாயில் பக்கம் பலர் வரும் காலடிச் சத்தம் கேட்கவே திடுக்கிட்ட வைரவன் வேகமாக சமைய லறைக்குள் சென்று மறைந்து கொண்டான். இதுவரை ஒட்டுக் கேட்ட விஷயங்கள் அவனை வியப்பில் ஆழ்த்தி விட்டிருந்தது.

இந்த புது உயிலின் மர்மம்? அவனுக்கு ஒரே குழப்பம். ஏனோ விவரிக்க இயலாத ஒரு திகிலில் உடல் நடுங்கியது. வைரவா! எஜமானின் அதிகாரக் குரல் அவனை அழைத்தது. துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு ஓடி வந்தான். ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவரும், அவரது சகாக்களும் மல்ஜிப்பாக்கள் மீது அங்க வஸ்திரங்கள் புரள... ஆளுக் கொரு சோபாவில் தேவநாதனைச் சுற்றி அமர்ந்து கொண்டிருந்தனர்.

''எல்லோருக்கும் சூடா காப்பி எடுத்துக் கொண்டு வா ஓடு... அவர்கள் வேண்டாம் என்ற கூக்குரலுக்கிடையே தேவநாதன் ஓங்கிய குரலில் உத்தரவிட்டார்.

அவசரமாகக் காப்பியை கலந்து ஸ்டீல் டம்ளர்களில் ஊற்றி மரத்தட்டில் வரிசையாக வைத்து எடுத்துக் கொண்டு அவன் விரைவாகவே வந்தான்.

அவர்கள் எல்லோரும் பேசியது பட்டும் படாமலும் அவன் காதுகளில் விழத்தான் செய்தது.

''என்னங்க, வக்கீல் ஐயாகூட இங்கே'' பல்லைக் காட்டினார் பஞ்சாயத்து நாயகர்.

''புதுசா ஒரு உயில் எழுதச் சொன்னேன். ஊர் பிரமுகர்கள் நீங்களும் இப்போது வந்து சேர்ந்தது நல்ல சகுனம் போலத்தான். என் புது உயில் பிரகாரம் என் சொத்தின் முக்கால் பகுதியை தமயந்திக்கும், கால் பகுதியை தர்மத்துக்கும் எழுதி வைத்திருக்கிறேன். என் வாயாலேயே உயிலில் உள்ளதை உங்கள் எல்லோருக்கும் சொல்லி

https://telegram.me/aedahamlibrary



விட்டேன். ஏன்னா எனக்கு திடீர்னு ஏதாவது ஏற்பட்டுட்டா நீங்கள் எல்லாம் ஒரு வகையில் சாட்சி போல் இருந்து உதவுவீங்கன்னு நம்பிக்கை. இதுதான் நான் கடைசியாக எழுதும் உயில் - பஞ்சாயத்து தலைவரும் வேறு ஒரு நண்பரும் சாட்சி கையெழுத்து போடுங்கள் நானும் கையெழுத்து போட்டு விடுகிறேன்'' சொல்லிக் கொண்டே உயிலில் கையெழுத்தைப் போட்டார். ''அப்படியா... ஹி...ஹி... உங்க தங்க மனசு யாருக்கு வரும்? அவமானப் படுத்தின அந்தப் பொண்ணுக்கு அத்தனை சொத்தையும் அள்ளிக் கொடுக்கிறீங்களே உண்மையில் நீங்க பெரிய கொடை வள்ளல்தான் ... பற்களைக் காட்டிய பஞ்சாயத்து தலைவர் சாட்சிகள் என்ற இடத்தில் முதலாவதாகத் தமது கையெழுத்தை நாட்டினார். வேறு ஒரு அங்கவஸ்திரம் எழுந்திருந்து அடுத்தபடியாக சாட்சி என்ற இடத்தில் கையெழுத்து போட்டுவிட்டு உட்கார்ந்தார்.

வக்கீல் உயிலை மடித்து உறைக்குள் போடடு தேவநாதனிடம் நீட்டினார். காப்பி டம்பளர்களை குட்டி முக்காலி மீது அவரவர் கைக்கு எட்டும்படி வைத்துவிட்டு நகர்ந்த வைரவனை அவர் கைதட்டி அழைத்தார். செல்லாது என்று அடித்துவிட்ட பழைய உயிலையும் புது உயிலையும் எடுத்து அவனிடம் கொடுத்தார்.

''பூஜையறை அலமாரியில் பொறுப்பாக இதை பத்திரமாக வைச்சு பூட்டிக்கொள். இந்த வீட்டில் நீதானே எனது பர்சனல் செக்கரெட்டரி, மற்றும் எல்லாம்...'' சிரித்தார்.

திகைத்துப்போய் நின்றான் வைரவன் இதென்ன நாடகம். மேடைமீது நின்று நடித்திருந்தால் இவருக்கு இந்த இடத்தில் கட்டாயம் பலத்த கையொலி கிடைத்திருக்கும். எண்ணியபடியே அவைகளை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

https://telegram.me/aedahamlibrary



அவர் கூறிய பூஜையறையிலிருந்த இரும்புப் பீரோவில் சில புத்தகங்களும், ஊதுவத்தி கத்தைகளும், பழைய தஸ்தாவேஜுகளும் காலாவதியாகி விட்டவைகளும் தான் இருந்தன. இப்போது முருகன் அருளை நாடி அந்த உயில் பூஜை அறை இரும்பு பீரோவுக்குள் அடங்கி விட்டிருந்தது. எதற்காக?

உக்கிராண அறை சாவியும் பூஜை அறை சாவியும் அவனிடந்தான் இருக்கும். பீரோவைப் பூட்டி சாவிகளை இடுப்பிலே பத்திரமாக சொருகிக் கொண்டான். தேவநாதனின் போக்கு அவனுக்கு விசித்திரமாகவும் கொஞ்சம் பயங்கரமாகவுந்தானிருந்தன.

காப்பி சாப்பிட்டு காலியாக அவர்கள் வைத்த டம்ளர்களை எடுக்க அவன் வந்தபோது அவர்கள் உற்சாக மாகப் பேசிக் கொண்டிருந்தனர். இப்போதெல்லாம் குழந்தை களின் படிப்பில் இந்த பிளஸ்டூ வந்திருக்கிறதினாலே நம் கிராமத்திலேயே அதற்கு ஒரு பள்ளிக்கூடம் கட்ட திட்டமிட்டிருக்கிறோம். அதற்கு பணம் திரட்ட கிளம்பி இருக்கிறோம். எதை எடுத்தாலும் உங்கள் நினைப்புதான் முதலில் வருகிறது. உங்கள் கைராசி அப்படிப்பட்டது. அதனால் நீங்கள் இந்த நிதியைத் துவக்கி வைக்கணும்னு வந்திருக்கிறோம்'' புகழ் பாடிவிட்டு சங்கதியை அவிழ்த்தார் பஞ்சாயத்து நாயகர்.

''செஞ்சால் போச்சு என்ன என்கிட்டே எதிர்பார்க்கிறீங்க?''

''எத்தனை கொடுத்தாலும் ஏத்துக்கத் தயார்'' கோஷமிட்டனர் வந்தவர்கள். அலமாரியைத் திறந்து செக் புத்தகத்தை எடுத்து வந்தார் தேவநாதன். ''என்ன நிதிக்கு பேர் சொன்னீங்க.. கேட்டுக்கொண்டே பரபரப்புடன் எழுதி செக்கில் கையெழுத்துப் போட்டார்.

https://telegram.me/aedahamlibrary



“இப்ப சத்தியா இருபத்தஞ்சாயிரத்துக்கு ஒரு செக் கொடுக்கிறேன். கட்டடம் வளரட்டும் - பிறகு ஆனதை செய்ய முயற்சிக்கிறேன்” செக்கை கிழித்து பஞ்சாயத்து தலைவரிடம் நீட்டினார். அகமும் முகமும் பூரித்துப் போன அவர், “நன்றி ஐயா நன்றி. பாரி வழி வந்த கொடை வள்ளல் நீங்கள்தான் சந்தேகமில்லை. இந்தக் கிராமம் நீங்கள் செய்திருக்கும் இம்மாபெரும் தொண்டை மறக்கவே மறக்காது...” நன்றி உணர்விலே படபடவென்று பேசி விட்டு, கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு விடை பெற்றுக் கொண்டார். எல்லோரும் வணங்கி விட்டுக் கிளம்பினர். வக்கீலும் தமது கைப்பையைத் தூக்கிக் கொண்டு அவர் முதுகில் செல்லமாகத் தட்டிவிட்டு “மிஸ்டர் தேவநாதன், நீங்கள் ஒரு அபூர்வ பிறவி” புகழ்ந்துவிட்டு கிளம்பினார்.

தோட்டத்திலே உலவிக் கொண்டிருந்தவருக்கு ஒரு கண்ணாடி டம்பளர் சாத்துக்குடி சாரை நிறைத்துக் கொண்டு விரைந்து வந்தான் வைரவன்.

அந்த சிவப்பு ரோஜா பாத்தியருகேதான் அவர் நின்று கொண்டிருந்தார்.

“சிவப்பு ரோஜான்னா தமயந்திக்கு ரொம்ப பிடிக்கும் இல்லையா? நீதானே இதை அவளுக்காக பயிரிட்டு வளர்த்து வந்தே... உனக்குக் கூட தமயந்தின்னா ரொம்ப பிரியமாச்சே... பாவம் அந்தப் பெண் ..” அவர் வஞ்சகமாகச் சிரித்தார். வைரவன் மௌனமாக நின்றான். டம்ளரை அவனிடம் கொடுத்துவிட்டுத் தன் வாயை கைக்குட்டையால் அவர் துடைத்துக் கொண்டார்.

“கவலைப்படாதே, உயிலில் உன் பெயருக்குக் கூட ஒரு ஐயாயிரம் ரூபாய் எழுதி வச்சிருக்கேன் நான் மண்டையைப் போட்டுவிட்டால் அது உனக்குக் கிடைக்கும் - ஆனால் வயசில் என்னைவிட பெரியவன். நீ முன்னால் போய்விட்டால் ஹ...ஹா” ஏளனமாகச் சிரித்தார்.

https://telegram.me/aedahamlibrary



கொதித்துக் கொண்டு வந்த ஆத்திரத்தை அடக்கிய படி அவன் தரையைப் பார்த்தான்.

''அதுக்காக அவசரப்பட்டுக் கொண்டு என் சாப்பாட்டில் விஷத்தைப் போட்டியோ வசமா மாட்டிக்குவே. இந்தக் கிராமத்திற்கு வந்திருக்கிற போலீஸ் இன்ஸ்பெக்டர் படு பொல்லாதவன். ஒரு தடவை தப்பியிருக்கிறாய். இந்தத் தடவை மாட்டிக் கொண்டால் கயிற்றிலே தொங்குவாய். ஞாபகம் இருக்கட்டும்.''

மௌனமாக உள்ளே வந்தான் வைரவன். ஹாலின் இடைச்சுவற்றிலே பெரிய அளவில் புன்னகை பொங்க கண்கள் பளபளக்க - இளமையின் பொலிவு ஒளியிட அழகு தேவதையாக காட்சியளித்த தமயந்தியின் புகைப்படத்தருகே வந்து நின்றான். என்னென்னவோ நினைவுகள் பச்சைக் குழந்தையாக இருந்தபோது இடது கை மடக்கிலே அவளை ஏந்திக் கொண்டு - வெள்ளிக் கிண்ணத்திலிருந்த பால் சோற்றை அள்ளி அந்த சின்ன வாய்க்குள் ஊட்டி வளர்த்தான் அவன்.

''தாத்தா, கதை சொல்லுங்க தாத்தா'' என்று மழலையில் கொஞ்சி தன் பட்டுக் கன்னத்தை அவனது தாடி மீசையுடன் அவள் பொருத்திக் கொண்டபோது, தன் சின்னஞ்சிறு கைகளால் அவனது கழுத்தைக் கட்டிக் கொண்ட போது அவனுக்கு மறைந்துபோன மகளின் நினைவு வந்துவிடும். நெஞ்சுருகிப் போய்விடுவான்.

'சொல்றேன் கொழந்தை... கன்னத்தில் முத்தமிட்டு நெற்றி முகர்ந்து நெஞ்சோடு அவளை அணைத்துக் கொண்டு தோட்டம் முழுவதும் சுற்றி வருவான்.

''ரோஜாப்பூ தாத்தா - பட்டு ரோஜா'' அவள் கொஞ்சிக் குழைவாள். ஆசையாகத் தான் வளர்த்து வந்த அந்த சிவப்பு ரோஜாக்களை பூஜைக்குக்கூட அவன் கிள்ள மாட்டான்.

https://telegram.me/aedahamlibrary



ஆனால் தமயந்தி கேட்டுவிட்டால்.... மறுக்க அவனுக்கு மனமே இருக்காது.

அழகாகப் பூத்து காற்றிலே அசைந்தாடும் ஒரு மலரை மெல்லக் கிள்ளி எடுத்து அவளது உச்சந்தலை முதுகுப் பின்னலிடையே சொருகிவிட்டு அழகு பார்ப்பான்.... இன்னும் எத்தனையோ இன்பமான நினைவுகள்.

திடீரென்று அவனது கண்களை நீர் திரையிட்டது. சமாளித்துக்கொண்டு மெல்ல அந்த புகைப்படத்தை விரல்களால் தடவி விட்டு கனத்த மனத்துடன் உள்ளே சென்றான்.

மனைவி செய்ய வேண்டிய பணிவிடை அது. அவன் தான் கடந்த பல ஆண்டுகளாகச் செய்து கொண்டிருந்தான். கடைசியாக இரவு படுக்கைக்குப் போகுமுன் அவன்தான் எஜமான் சாப்பிட பால் டம்ளரைக் கொண்டு மாடியறையில் வைத்து வருவது வழக்கம். டம்ளரை அருகிலிருந்த முக்காலி மீது வைத்துவிட்டு கொசுவலை வட்டத்தால் அதை மூடினான். ஜன்னல் திரைகளை நன்றாக ஒதுக்கி விட்டான். வானத்திலே வெள்ளித்தட்டு போன்று ஊர்ந்த நிலவைக் கண்டதுமே அவனது நினைவுகள் எங்கெங்கேயோ அலைபாயத் தொடங்கின. பரபரப்புடன் கீழே இறங்கி வந்தான்.

சமையலறையை ஒட்டிய வராந்தாவில்தான் முற்றத்தில் வீசும் இயற்கைக் காற்றை அனுபவித்த வண்ணம் அவன் பாயை விரித்துக் கொண்டு படுப்பது வழக்கம்.

முதல் நாள் மாலை தோட்டக்காரன் புல்வெளியை வெட்டிச் சமனாக்கி விட்டுப் போயிருந்தான்.

அதனால் கொசுக்களின் படையெடுப்பை அவனால் தாங்க முடியவில்லை. பாயைச் சுருட்டிக் கொண்டு சாபபாட்டறைக்குள் வந்த ன்.

https://telegram.me/aedahamlibrary



சுவற்றோரமாக அதைப் போட்டுவிட்டு மின்விசிறியை சுழலவிட்டான். தலையணை மீது துண்டை விரித்துப் போட்டுவிட்டு சில நிமிஷங்கள் கடவுள் சிந்தனை யோடு கண்களை மூடியபடி உட்கார்ந்திருந்தான். கண்களை விழித்தபோது எதிர்பக்கத்துச் சுவற்றில் தமயந்தி படத்திற்குள்ளிருந்தபடி அவனைப் பார்த்து முறுவலித்துக் கொண்டிருந்தாள்.

அன்று மாலையிலிருந்தே அவன் மனம் மிகவும் குழம்பி விட்டிருந்தது. அவள் படத்தைப் பார்க்கப் பார்க்க குழப்பமும் வேதனையும் அவனை என்னவோ செய்தன. எழுந்து சென்று குழல்விளக்கை அணைத்துவிட்டு வந்து படுக்கை மீது உட்கார்ந்தான்.

ஜன்னல் வழியே வீசிய நிலவொளி முழுவதும் சுவற்றில் தொங்கிய அவள் படத்தின் மீது பரவிக் கொண்டிருந்தது.

நிலவு நாட்கள் அவளுக்கு மிகவும் பிடித்தமான காலம். சிறு வயதில் 'தாத்தா நிலா... நிலா... அந்தப் பாட்டை பாடுங்க' என்று அவனது கழுத்தைக் கட்டிக்கொண்டு கொஞ்சுவாள். கொஞ்சம் வயதான பின்பு.... ஜன்னல் வழியே வானத்தைப் பார்த்து 'தாத்தா பால் போல நிலவுங்கிறாங்களே, எத்தனை உண்மை என்பதை பாருங்களேன். நிலவு எப்படித்தான் காய்கிறது' மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரிப்பாள்.

கல்லூரி மாணவியான பின்பு கோடை இரவில் குளிர்ந்த காற்றை அனுபவித்தபடி நிலவொளியில் அவள் தோட்டத்திலே தன் எண்ணங்களோடு புதைந்தபடி உலவி வருவாள்.

'ஏம்மா இந்த வேளையில் தோட்டத்திலே தனியா நடந்துட்டு... இருக்கே' ஆதங்கத்துடன் அவன் கேட்பான்.

https://telegram.me/aedahamlibrary



'நிலவொளியில் தனிமையிலே சிந்திக்க ஏராளமான எண்ணங்கள் - மனதுக்கு பிடிச்ச இன்பமான நினைவுகள் பல இருக்கே'

முத்துப்பல் தெரிய அவள் சிரிப்பாள். ''இளவயது, என்னென்னவோ எண்ணங்கள் தோன்ற வேண்டிய காலம்தான்'' தனக்குள்ளே எண்ணிக் கொள்வான் அவன்.

''தாத்தா! நீங்க டெல்லிக்கு போயிருக்கிறீங்களா?

'ஒரு சமயம் ஐயாவோட கூட உதவி செய்யப் போயிருந்தேன். ஏன் கேட்கிறே?'

'தாஜ்மகாலைப் பார்த்திருக்கிறீர்களா?'

'ஐயாவோட ஒரு தபா பார்த்திருக்கிறேன். அதுக்கு இப்போ என்ன?'

'தாஜ்மகாலை நிலவொளியில் பார்த்திருக்கிறீர்களா தாத்தா?'

சரிதான் போ... என்னவோ ஐயாவோட மூட்டைத் தூக்கி முத்தண்ணாவா போனேன். அந்த அற்புத கட்டடத்தைப் பார்க்க ஒரு வாட்டி குடுத்து வச்சிருந்தேன். பட்டப் பகல் வேளை. நல்ல வெயில், மண்டையைப் பிளந்துகிட்டிருந்தது. ஆன்னு வாயைப் பிளந்து கொண்டு அதைப் பார்த்தேன்.. அவ்வளவுதான்..

''நாங்கள்லாம் காலேஜ் மாணவிகள், ஆசிரியை களுடன் ஒரு சுற்றுலா போனோம். நான் கூட உங்களுக்குக் கடிதம் போட்டிருந்தேனே ஞாபகம் இல்லையா? டில்லியிலே இரண்டு நாள் தங்கினோம். அப்போ தாஜ்மகாலை விடியற்காலையில் - உச்சி வேளையில் மங்கி வந்த மாலைப் பொழுதில்... பின்னர் நிலவு ஒளியில் என்று நாளின் பல பொழுதில் சென்று பார்த்தோம்''

https://telegram.me/aedahamlibrary



'தாத்தா! தாஜ்மகாலை நீங்கள் நிலவொளியில் பார்த்தால் அப்படியே மயங்கி அங்கேயே நின்று விடுவீங்க. அத்தனை அழகு போங்க. எங்கேயோ கனவு உலகத்திலே மிதக்கிறாப்போல ஒரு பிரமிப்பு ஏற்படாது. விடுமுறைக்கு கிராமத்திற்கு வந்தவள் அவனிடம் ஆர்ப்பரித்தாள் அந்த நினைவு இப்போது...

தாஜ்மகால் நிலவொளியில் மின்னியதோ மயங்கியதோ அவன் பார்க்கவில்லை.

ஜன்னல் வழியே உள்ளே வீசிய நிலவொளியில் புகைப்படத்திலே புன்னகைத்த அவள் கண்கள் எப்படி மின்னின? சூரிய வெளிச்சத்தில் பார்க்கும்போது இல்லாத ஒரு அழகு மயக்கம் எல்லாம் இப்போது அந்த முகத்திற்குள் எப்படி வந்து சேர்ந்தன?

குழந்தையின் கண்களில் பொங்கிய அந்த ஒளியைக் கண்டு மயங்கித்தானே அதை எடுத்து வளர்க்கும் பொறுப்பைத் துணிவுடன் ஏற்றுக்கொண்டான். அம்மா.. தமயந்தி...! தனக்குள் அரற்றியபடி அவன் சுவர்ப் பக்கமாக திரும்பி தலையணை மீது முகத்தைப் பதித்துக் கொண்டான்.

உறங்க முயற்சித்தான். ஆனால் சிந்தனைகள் சிறகு விரித்துக் கொண்டு கடந்த காலத்திற்குள் புகுந்து விட்டன. 'அம்மா குழந்தை தமயந்தி..' வாய்விட்டு உரத்த குரலில் கூப்பிட்டான்.. ஏனோ துன்பம் அவன் நெஞ்சை அடைத்தது. கண் இமைகள் கனத்தன.

மருதாம்மாள், அவள்தான் தமயந்தியின் தாய் வழிப் பாட்டி விதவை. தலை நரைத்து உடல் தளர்ந்து போன வயது- சமையல்காரியாக அந்த வீட்டில் வேலைக்கமர்த்தப் பட்டிருந்தாள்.

நீலமேகம் இறந்துபோன சில ஆண்டுகளுக்குப்

https://telegram.me/aedahamlibrary



பின்னர் பழைய சமையல்காரர் உடம்புக்கு முடியாது போகவே ஓய்வு எடுத்துக்கொண்டு ஊருக்குப் போய் விட்டார்.

அப்பொழுதான் யாரோ தெரிந்தவர்களின் சிபாரிசின் பேரில் மருதாம்பாள் வீட்டின் சமையல் ஆளாக நியமிக்க பட்டாள். தோட்டத்திலே விறகுகள் அடுக்கி வைக்கவும், பழைய வேண்டாத சாமான்கள் குவித்து வைக்கவும் ஒரு சிறு ஓட்டு வீடு இருந்தது.

அதிலே ஒரு சிறிய அறையை அவள் வசிக்க ஒழித்துக் கொடுத்திருந்தனர். அவளுண்டு அவள் காரியமுண்டு என்று அமைதியாக இருப்பவள் மருதாம்பாள்.

ஒரே வீட்டில் வேலை செய்கிறவர்கள் என்ற ஈர்ப்பு வைரவனுக்கு. அடிக்கொரு தடவை சமையலறைக்குள்ளே வந்து அவள் செய்கிற பக்குவங்களை விந்தையாகப் பார்த்துக் கொண்டு நிற்பான்.

''காரக்குழம்புக்கு இத்தனை மிளகாய் வைச்சு அரைச்சால்தான் ருசிக்கும். தக்காளிச் சட்டினியைப் பரிமாறும் போது ஒரு கொத்து பச்சைக் கொத்தமல்லியை போட்டு வச்சா வாசனை மூக்கைத் தூக்கும்.. என்று சமையல் முறைகளை அவள் அவனுக்கு போதிப்பது வழக்கம்.

ஐயா டவுன் கடைக்குப் போயிருக்கையில் ஒவ்வொரு சமயம் அவன் கரண்டியைத் தூக்கிக் கொண்டு மருதாம்பாள் சொல்லிக் கொடுத்தபடியே அவளுக்கு சவால் விடும் தோரணையில் சமைத்து முடிப்பான்.

அந்தப் பழக்கந்தான் பின்னர் அவனுக்கு பெரிதும் உதவியது; தன் கூடப் பிறந்த தம்பியைப் போல் அவளுக்கு வைரவன் மீது பரிவு.

https://telegram.me/aedahamlibrary



தமக்கையைப் பார்ப்பது போன்ற நேசத்தோடு அவளிடம் அவன் பழகினான்.

மருதாம்பாள் வேலைக்கு வந்து இரண்டு ஆண்டுகள் சென்ற பின்னர்தான் அந்த துன்ப சம்பவம் நடந்தது.

கிராமத்தில் அவளது விதவை மகள் தன் பெண் குழந்தையோடு வீடு கூட்டிப் பிழைத்துக் கொண்டிருந்தாள். இரண்டு நாள் காய்ச்சலில் திடீரென்று போய் விட்டாள். துக்கத்திற்குப் போன தாயார் பேத்தியைக் கூட்டிக் கொண்டு திரும்ப வேலைக்கு வந்தாள்.

ஆரம்பத்தில் தேவநாதனுக்கு இந்த ஏற்பாடு கொஞ்சமும் பிடிக்கவில்லை. அந்தக் குழந்தை அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அறையை விட்டு தப்பித் தவறிக்கூட பங்களாவிற்குள் நுழையக் கூடாது என்றும் கடும் உத்தரவு. அமைதியையும் தனிமையையும் விரும்பிய அவருக்கு குழந்தையின் கூக்குரல் - விளையாட்டு விஷமம் எல்லாம் வேம்பாகத்தான் இருந்தன.

தமயந்திக்கு நான்கு வயது - அப்போது இன்னொரு துன்ப நிகழ்ச்சி.

ஒரு நாள் இரவு ஒன்பது மணி அளவிலே உறங்கப் போகுமுன் தேவநாதன் கதைப் புத்தகம் ஒன்றைப் புரட்டிக் கொண்டு வாயில் பக்கமிருந்த பெரிய வரவேற்பு அறையில் உட்கார்ந்திருந்தார். பளிங்கு வராந்தா மீது மெல்லிய பாத ஓசை கேட்டது.

பரட்டைத் தலையும் அழுக்குப் பாவாடையுமாகக் குழந்தை தமயந்தி கண்கள் கலங்கியபடி விரைந்து ஓடி வந்தாள்.

'என்ன வேணும்? எங்கே இந்த வேளையில்' அதட்டிய தேவநாதன் அவளைக் கோபத்துடன் வெறித்தார்.

https://telegram.me/aedahamlibrary



குழந்தை நடுங்கிப் போனாள்.

'எங்க பாட்டி பேசவே மாட்டேங்கிறாங்க பயமா இருக்கு' அவள் விக்கினாள்.

உள்ளே இருந்த வைரவன் விரைந்து வந்தான்.

'என்னம்மா, குழந்தை பாட்டிக்கு என்ன?' பதறியபடி எஜமானின் உத்தரவைக்கூட கேட்காமல் அப்படியே குழந்தையை வாரி தோளில் சாத்திக் கொண்டு தோட்டத்திற்குள் விழுந்தடித்து ஓடினான். அவன் போகுமுன் பாட்டி மருதாம்மாள் மாரடைப்பால் இறந்துவிட்டிருந்தாள்.

''பாட்டி-பாட்டி..'' என்று விக்கி அழுத குழந்தையும் தரையில் கிழிந்த பாயின் மீது நீட்டிய காலும் விரைத்த கைகளுமாகப் பிணமாகக் கிடந்த மருதாம்பாளையும் பார்த்து அவன் கண் கலங்கிப் போனான்.

தன்னுடன் இரண்டு வருஷ காலம் வேலை செய்தவள் என்ற பந்தம். உடன் பிறப்பு போல் பழகியவள் என்ற பாசம்.

சொந்த மனிதரை இழந்துவிட்டது போன்ற அந்த இழப்பின் துக்கத்தை தாள முடியாது அவனும் அழுது விட்டான்.

மருதாம்பாளின் உடலை அடக்கம் செய்யும் பொறுப்பையும் செலவையும் அவனே ஏற்றுக் கொண்டு இருந்தான்.

காரியங்கள் முடிந்த பின்னர் தமயந்தியை தன்னந் தனியே அந்த வீட்டிற்குள் விட்டுவிட முடியாத நிலையில் தன்னுடன் பின்கட்டுத் தாழ்வாரத்தில் கொண்டு வைத்துக் கொண்டான்.

''முதலில் இந்தப் பீடையை அனாதை ஆஸ்ரமம் எதிலாவது கொண்டு தள்ளு. தரித்திரம்... இதை ஏன்

https://telegram.me/aedahamlibrary



கட்டிக்கொண்டு அழுகிறே?'' எஜமான் குழந்தையைப் பார்த்த போதெல்லாம் சீறி விழுந்தார்.

ஆனால் அவன் அசைந்து கொடுக்கவில்லை

ஆரம்பத்திலே வெறுத்த தேவநாதன், சில நாட்களில் அந்தக் குழந்தை அவனுடன் ஒரு ஒதுக்குப்புறமாக வீட்டில் தங்கியிருந்ததை அவ்வளவாகப் பாராட்டவில்லை.

# 5

வேகமாக நாட்கள் ஓடி மறைந்தன. வருஷ இறுதியில் அவள் தன் வகுப்பிலே நல்ல மதிப்பெண்களுடன் தேர்ந்து விட்டிருந்தாள். ஒரு நாள் காலை அவர் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார். மெல்ல வீட்டிற்குள்ளேயிருந்து வந்த தமயந்தி அவர் முன் வந்து நின்றாள்.

மகிழ்ச்சியில் சிவந்து பூரித்த முகமும்... ஒளி கக்கிய கண்களுமாக நின்ற அந்தச் சிறுமியை அவர் வியப்போடு பார்த்தார். வைரவன் அவளுக்கு ஏதும் சொல்லிக் கொடுக்கவில்லை. தமயந்திக்கு சின்னஞ்சிறு வயதிலேயே அப்படி ஒரு அறிவு.

''வணக்கம் ஐயா... தன் சிறு கைகளைக் குவித்துக் கொண்டு அவள் வணங்கினாள்.

தேவநாதன் அதிசயமாக அவளை உற்றுப் பார்த்தார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வாராத தலையும் - கிழிந்த சொக்காயுமாக அவர்முன் பிச்சைக்காரி போல் வந்து நின்ற சிறுமியா அவள்? வெடவெடவென்று உயரமாக வளர்ந்து விட்டிருந்தாள்.

பள்ளிச் சீருடையில் பட்டாம் பூச்சி போல அல்லவா இருந்தாள். வியப்புடன் அவளை ஏற இறங்கப் பார்த்தார்.

https://telegram.me/aedahamlibrary



"நான் பரீட்சையில் பாஸ் பண்ணி-முதல் வகுப்புக்கு வந்து விட்டேன், நன்றி ஐயா".

"எனக்கு ஏதுக்கம்மா நன்றி - உன்னை படிக்க வச்சவன் வைரவன் தாத்தா, அவனுக்குத்தான் நீ நன்றி சொல்லணும்".

"உங்க வீட்டிலே தங்க இடம் கொடுத்தீங்களே அதுக்கு...".

தூக்கிவாரிப் போட்டது அவருக்கு. அவளது அறிவு அவரைத் திகைக்கச் செய்தது... உடனடியாக உள்ளேயே ஒரு சிறு ஆவல். இத்தனை அறிவாக இருக்கும் பெண்ணை அவரே படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வந்தால்... கிராமமே அவரைப் பாராட்டுமே. வலுவில் கிடைக்கிற சந்தர்ப்பத்தை சமையற்காரப் பயலுக்கு ஏன் விடவேண்டும்? உடனே அவர் வைரவனை அழைத்து நீண்டநேரம் தமயந்தியின் வருங்காலத்தைப் பற்றிப் பேசினார்.

முதலில் அவனால் நம்பவே முடியவில்லை.

விஷம்போல் வெறுத்த அந்தக் குழந்தை மீது ஏன் இந்த திடீர் பாசம்?

ஒழியட்டும், மனிதனிடம் பணம் குவிந்து கிடக்கிறது. வலுவிலே அந்தக் குழந்தைக்கு வருகிற அதிர்ஷ்டத்தின் குறுக்கே அவன் ஏன் தடையாக நிற்கணும்?

நல்ல எண்ணத்துடனே தன் உள்ளத்தைக் கவர்ந்த தன் அன்பை ஈர்த்துக் கொண்ட தமயந்தியை அவர் மேற்பார்வையில் வளர்க்க அவன் அனுமதித்தான்.

அவ்வளவுதான் அவள் வாழ்க்கையில் ஒரு திடீர் திருப்பம் ஏற்பட்டுவிட்டது.

இத்தனை காலம் குழந்தைகளைப் பற்றி நினைப் பின்றி இருந்த தேவநாதன் தமயந்தியிடம் நெருங்கி நேசத்தோடு பழகி விளையாடத் தொடங்கினார்.

https://telegram.me/aedahamlibrary



ஏற்காடு கான்வெண்டில் அவளுக்கு ஆரம்ப கல்வி கொடுக்க ஏற்பாடு செய்து தாமே தமது காரில் அழைத்துச் சென்று பள்ளியில் சேர்த்துவிட்டு வந்தார்.

ஒவ்வொரு விடுமுறைக்கும் அவள் வீட்டிற்கு வந்து விட்டால் ஒரே கொண்டாட்டந்தான்.

"குழந்தைக்கு இதை சமைத்துப் போடு-பாப்பாவுக்கு இதை வாங்கிக்கொடு..." என்று பணத்தைத் தண்ணியாக செலவழித்தார். மருதாம்பாள் பேத்தியா-கிழிந்த பாவாடையில் திரிந்த தமயந்தி பட்டு உடுத்தி-பாலும், தயிரும் உண்டு நன்றாக செழுமையாக வளரத் தொடங்கினாள்.

அவளுக்கு இயற்கையாகவே இனிய குரல். அதை மெருகேற்ற திருச்சியிலிருந்து பாட்டு வாத்தியார் ஒருத்தரை தருவித்து விடுமுறை நாட்களில் அவளுக்கு முறைப்படி சங்கீதம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தார்.

பி.யூ.சி முடித்ததும் அவளைச் சென்னை பெண்கள் கல்லூரி ஒன்றில் பி.ஏ எக்னாமிக்ஸில் சேர்த்துவிட்டு ஹாஸ்டலில் தங்கியிருக்க மாதாமாதம் பணம் அனுப்பி உதவினார்.

அப்பொழுது ஒரு முறை கோடை விடுமுறைக்கு வந்த போதுதான் அவனிடம் சொன்னாள்.

"தாத்தா! சித்தப்பா ஒரு ஸாடிஸ்ட். ஜாக்கிரதையாக இருங்கள்" ஏனோ அவள் மேனி முழுவதும் நடுங்கியது. அப்பொழுது அவளுக்கு வயது பத்தொன்பது. தாழம்பூ நிறம்-செல்வத்தின் செழுமை-பருவத்தின் அழகு... ஒடிய உயரமாகக் கொடிபோல வளர்ந்திருந்தாள் அவள். பிறந்த நாளுக்கு தேவநாதன் அவளுக்கு வாங்கித் தந்த காஷ்மீர் பட்டுச் சேலையில் அன்று அவள் மிகவும் அழகாகத் தானிருந்தாள்.

https://telegram.me/aedahamlibrary



அப்பொழுதுதான் அவள் தேவநாதனுடன் அவருடைய காரில் திருச்சி வரை கடைகளுக்குப் போய் விட்டு வந்திருந்தாள். பணத்தைப் பற்றி சிந்திக்காது தேவநாதன் அவள் விரும்பியதையெல்லாம் வாங்கிக் கொடுத்தார்.

புடவைக் கடைக்குள் சென்றபோது அவள் கல்லூரி விழாக்களுக்கு உடுத்தத் தேவையென்று நான்கு பட்டுச் சேலைகளை எடுத்துக் கொடுத்தார். நகைக்கடை ஒன்றிற் குள் அழைத்துச் சென்று கைக்கு ஒரு ஜோடி தங்க வளையல்களும்-கழுத்துக்கு ஒரு மெல்லிய தங்க சங்கிலியும் வாங்கிப் பரிசாக அளித்தார்.

''எனக்காக ரொம்ப செலவழிக்கிறீங்க சித்தப்பா... இந்த நன்றிக் கடனை நான் எப்படித்தான் தீர்ப்பேனோ தெரியாது'' உணர்ச்சி வசப்பட்டு அவள் திணறினாள். அவர் மெல்ல சிரித்தார்.

''பி.ஏ. படிப்பு முடிய இன்னும் சில மாதங்கள் தானே இருக்கும். அதுக்குப்'பிறகு நீ இந்தக் கடனைத் தீர்த்திடலாம்... இந்த நகைகள் என்ன? பாங்க் லாக்கரில் தூங்குகிற அத்தனை நகைளையும் உனக்குத்தான் கொடுக்கப் போகிறேன். இந்த ஆஸ்தி-வீடு-கார் எல்லாம் உனக்கு வந்து சேரப்போகிறது''

''என்ன சொல்றீங்க சித்தப்பா? அனாதையான எனக்கு'' அவளால் பேசமுடியவில்லை. விழிக்கடையில் நீர் துளிர்த்தது.

''உண்மையைத்தான் சொல்றேன். இனி இத்தனைக் கும் நீதான் எஜமானி. அனாதையின்னு மறுபடியும் சொல்லாதே. தேவநாதன் பொறுப்பிலே இருக்கிற நீ எப்படி அனாதையாக முடியும்''.

சித்தப்பா! ஊரே நீங்க எனக்குச் செய்கிற உதவிகளைப் பற்றி ஒரே பெருமையாகப் பேசுகிறது. உங்களை எல்லோரும் ரொம்ப புகழ்கிறாங்க; கேட்க எனக்கு மகிழ்ச்சியா இருக்கு...

https://telegram.me/aedahamlibrary



''உம்..? என்று கனைத்துக் கொண்டே வண்டியை ஓட்டினார் தேவநாதன்.

கடைக்கண்ணால் அருகில் அமர்ந்திருந்த அவளை அடிக்கடி பார்த்துக் கொண்டார்.

''உன் கல்லூரியில் அழகு போட்டிகள் வைப்ப தில்லையா? நீ அந்த மாதிரி போட்டி எதிலும் கலந்து கொள்வதில்லையா?'' வேடிக்கையாகக் கேட்டார்.

''போங்க சித்தப்பா... முகம் சிவந்துபோன அவள் செல்லமாகச் சிணுங்கினாள்.

''நான் சொல்லட்டுமா? அப்படி ஒரு அழகுப் போட்டி வச்சா உங்க கல்லூரியிலே நீதான் ஜெயிப்பே... நீ இன்னிக்கு எத்தனை அழகாக இருக்கிறே தெரியுமா?'' அவர் குரல் தழுதழுத்து தடுமாறியது. சற்று சாய்ந்தபடி அவர் முகம் அருகில் நெருங்கியபோது அவரது மூச்சுக் காற்று நெருப்பாகக் கன்னத்தைச் சுடுவதை உணர்ந்து தமயந்தி பதறிப் போனாள். நெஞ்சு படபடவென்று அச்சத்திலே அடித்துக் கொண்டது.

சித்தப்பா ஏன் ஒரு மாதிரி பேசுகிறார்? குழம்பினாள் அவள். அப்பொழுதுதான் அந்தச் சிறு விபத்து நேர்ந்தது.

பக்கத்து டவுனுக்கு தயிர் விற்கப் போய்க் கொண்டிருந்தாள் ஒரு இளம் பெண். சும்மாடு மீது தயிர்ப் பானையைத் தலையில் வைத்துக் கொண்டு சாலையே தன்னுடையது போன்ற நினைப்பில் நடுவே நடந்து சென்று கொண்டிருந்தாள். ''உனக்கு இப்போ ஒரு வேடிக்கை காட்டட்டுமா?'' மெல்ல சிரித்த தேவநாதன் காரை வேகமாக ஓட்டிக்கொண்டு வந்தார். சர் என்ற சப்தத்துடன் பிரேக் போட்டு அழுத்தி நிறுத்தி ஹாரனை அதிகம் சப்திக்க அழுத்தினார்.

https://telegram.me/aedahamlibrary



"அம்மாடியோவ்?..." என்று அலறிய அந்தப் பெண் பயத்திலே பானையை கீழே போட்டுவிட்டாள். சாலையின் ஓரத்திற்கு ஓடத் திரும்பியவள் - ஒரு கல் தடுக்கி மண்ணில் குப்புற விழுந்தாள்.

குலுங்க குலுங்க சிரித்தார் தேவநாதன். தமயந்தி திடுக்கிட்டுப் போனாள். இது ஒரு விளையாட்டா?

"என்னய்யா நீ கார் ஓட்டறே!" கோபத்துடன் மண்ணை உதறிக் கொண்டு அவள் எழுந்தபோது தேவநாதன் தொடர்ந்து சிரித்துக் கொண்டிருந்தார்.

"ரோடு உங்க பாட்டன் வீடுன்னு நினைப்பா... அதட்டினார்.

இல்லே உங்க பாட்டன் வீடு," அந்த இளம் பெண் உறுத்து விழித்தாள்.

"அதிகம் பேசினியோ முகரையை பெயர்த்திடுவேன்" கோபத்துடன் கத்திவிட்டுக் காரை கிளப்பினார்.

"ஐயா! என் வவுத்திலே மண்ணைப் போட்டுட்டியே.. அந்தக் கிட்டத்துல வந்து ஊதினதைக் கேட்டு பயந்து பானையைப் போட்டுட்டேன். எங்காத்தா என்னைப் பின்னி கட்டுவா... அவளுக்கு நான் என்ன பதில் சொல்வேன்... சாமி கும்பிடறேன். தயிருக்காவது ஏதாச்சும் பணம் கொடுத்திடுங்க ஐயா... நீங்கல்லாம் பணக்காரங்க.. அழுதபடியே கெஞ்சி கையை நீட்டினாள்.

"சீ! எடு கையை அந்த பயம் உன் உடம்பிலே இருந்தா நடு ரோட்டிலே ராணி போல நடப்பியா? ஒரு நாள் உன் ஆத்தாகிட்டே உதைபடு; அப்பத்தான் புத்தி வரும்... எனக்கே உன் முதுகில் ரெண்டு போடணும் போல் ஆத்திரமா இருக்கு. போ வழியில் நின்னியோ காரை உன் மேல் ஏத்தி விடுவேன்" உரக்கக் கத்தினார்.

https://telegram.me/aedahamlibrary



அவள் நடுங்கிக் கொண்டு நகர்ந்தாள். தமயந்தியின் மகிழ்ச்சி அனைத்தும் வினாடியில் மறைந்து போனது. மேனி முழுவதும் லேசாக நடுங்கியது.

சிறிது தூரம் அவர் வண்டியை வேகமாக ஓட்டிக் கொண்டு வந்தார்.

''சித்தப்பா அந்தப் பொண்ணுக்கு ஏதாவது பணம் கொடுத்துட்டு வந்திருக்கலாம்... பாவம் அவள்..'' என்றாள் முடிவில் அனுதாபத்துடன்.

''என்ன பாவம் இறங்கி... புளியமலாரு ஒன்றை பிய்த்து ரெண்டு இழுப்பு இழுக்காததுதான் பாவம். இந்தக் கழுதைகளை எல்லாம் செம்மையாக உதைச்சாதான் ஒழுங்குக்கு வருவாங்க. உனக்கு இவங்களைப் பத்தி ஒண்ணும் தெரியாது, பேசாம இரு... அதட்டி விட்டு பற்களை நறநறவென்று கடித்தார். அவர் முகம் போன போக்கைக் கண்டு அவள் அதிர்ந்து போய் விட்டாள்.

அதற்குப் பின்னர் இன்னொரு நாள் காலை தோட்டத்திலே அவர் உலாவிக் கொண்டிருந்தார். கேட்டை மூட மறந்து தோட்டக்காரன் திறந்தபடி விட்டிருந்தான்.

எங்கிருந்தோ சாலையினின்று நழுவி உள்ளே புகுந்து விட்டது ஒரு வெள்ளைப் பசு.

வாழை மரங்கள் இருந்த பக்கம் மெல்ல நகர்ந்து... ஆவலுடன் ஒரு கன்றைக் கடித்து விழுங்கத் தொடங்கியது.

அவ்வளவுதான், தேவநாதன் ருத்ரமூர்த்தியாகி விட்டார். கேட்டை சாத்திவிட்டு அங்கே கிடந்த ஒரு மூங்கில் கழியைக் கையில் எடுத்துக் கொண்டார்.

வாரந்தாவில் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த தமயந்தி திடுக்கிட்டு எழுந்து வந்து

https://telegram.me/aedahamlibrary



பார்த்தாள். வாயில் பாதி கடித்த வாழையிலையுடன் அந்த மாடு பாவம் அடி தாள முடியாது அங்குமிங்கும் தோட்டத் திற்குள் பாய்ந்து ஓட சின்ன வயது வாலிபனைப் போல அதை விடாது, தோட்டம் முழுவதும் விரட்டித் துரத்தி ஓங்கிக் கம்பால் முதுகிலே படீர் படீர் என்று தாக்கிக் கொண்டு வந்தார்.

''ஐயோ சித்தப்பா நிறுத்துங்க. சினைமாடு போல இருக்கு பாவம்'' கத்திய தமயந்தி உடல் வெடவெட வென்று நடுங்கியது... முதுகின் மீது மூங்கில் உடைந்து சதை பிய்ந்து காயத்திலிருந்து ரத்தம் கசிய மாடு பரிதாபமாக அம்மா, மே.... என்று கத்தியபடி ஓடியதைக் காண அவளால் சகிக்க முடியவில்லை.

வேகமாக தோட்டத்திற்குள் இறங்கிச் சென்று மூடியிருந்த கேட்டை அகலமாகத் திறந்து வைத்தாள்.

மீண்டும் ஒரு பலத்த அடியை முதுகில் வாங்கிக் கொண்டு ஒரே பாய்ச்சலாகப் பசு வெளியே ஓடிய பரிதாபத் தைக் காண அவள் நெஞ்சு துக்கத்தில் அடைத்தது. ''இனி இந்தப் பக்கம் அந்த மாடு வரவே வராது. அத்தனை அடி செம்மையா கொடுத்துட்டேன்'' கையைக் கொட்டிச் சிரித்தார் அவர். அவரது முகத்தைக்கூட பார்க்க அவளுக்குப் பிடிக்க வில்லை.

வாயில்லாத ஜீவன் படும் வேதனையைக் கண்டு இப்படி ஒரு மகிழ்ச்சியா? பயத்திலே அவள் முதுகு சில்லிட்டுப் போயிற்று.

ஹாஸ்டலுக்கு கிளம்பும் முதல் நாள் அவள் தன் பெட்டியில் சாமான்களை அடுக்கி வைத்து தயாராக்கி விட்டு தாத்தாவுக்கு உதவியாக சமயலறைக்குள் வந்தாள். சூடான பசும்பாலை வைரவன் டம்ளரில் நிறைத்து வைத்திருப்பதைக் கண்டு அதை எடுத்துக் கொண்டு மாடிக்கு வந்தாள்.

https://telegram.me/aedahamlibrary



"சித்தப்பா உங்களுக்கு பால் கொண்டு வந்திருக்கேன், இப்படி வைக்கட்டுமா" முக்காலியொன்றில் வைத்தாள். படுக்கைமீது காலை நீட்டிக் கொண்ட தேவநாதன் சாய்ந்து கிடந்தார்.

"இங்கே வாம்மா இப்படி கிட்ட வா" அவர் அழைத்த விதம் அவர் குரலில் தொனித்த ஆர்வம் அந்தப் பார்வை ஒன்றுமே அவளுக்கு சரியாகத் தோன்றவில்லை.

இந்த சித்தப்பா ஏன் இப்படி திடீரென்று மாறி விட்டிருக்கிறார்? இவருக்கு என்ன வந்து விட்டது?

அருகில் வந்து குனிந்து "என்ன வேணும் சித்தப்பா...?" மெல்லிய குரலில் கேட்டாள்.

தேவநாதன் அவளை ஒரு மாதிரி பார்த்துவிட்டு புன் முறுவலித்தார்.

"வலது கணுக்கால் வீங்கி வலிக்கிறது. அந்த மருந்து பாட்டிலில் ஒரு களிம்பு இருக்கு - அதை எடுத்து கொஞ்சம் பூசிவிடேன்" வலது காலைக் கட்டிலுக்கு வெளியே நீட்டினார்.

பணிவுடன் அவள் அவர் சொன்ன பாட்டிலைத் திறந்து களிம்பை விரலால் தொட்டு எடுத்து வந்து கணுக்கால் மீது மெல்லத் தடவினாள்.

"உன் கைப்பட்டால் பூப்போல என்ன சுகமாக இருக்கு தெரியுமா?" சொல்லிக் கொண்டே சட்டென்று எழுந்தவர் ஆவேசம் பிடித்தவர்போல் அவளது கரங்களைப் பற்றி இழுத்து அவளைத் தன் மார்போடு அணைத்துக் கொள்ள முற்பட்டபோது அவள் திகிலுடன் கத்தி விட்டாள். "விடுங்க சித்தப்பா என்ன இது... விடுங்கோ..." தன் பலமெல்லாம் திரட்டிக் கொண்டு அவரது பிடியை உதறிவிட்டு துக்கமும் வெட்கமும் திகிலும் தாங்கமாட்டாது மாடிப்படிகளில் தட தட

https://telegram.me/aedahamlibrary



வென்று இறங்கி ஓடி வந்தாள். என்ன சத்தம் என்று எட்டிப் பார்த்த வைரவனிடம் ஓடி வந்து ''தாத்தா எனக்கு ரொம்ப பயமா இருக்கு'' என்று தேம்பிக்கொண்டு அவன் மீது முகத்தைப் பதித்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

அவள் கரத்தின் மீது பட்டிருந்த நகக் கீரலையும் அதிர்ந்து போன முக பாவத்தையும் கலைந்துவிட்ட அவள் கூந்தலையும் பார்த்தவுடனேயே வைரவன் புரிந்து கொண்டு விட்டான். எரிமலையாக ஆத்திரத்தில் கொதித்துப் போனான். ''அடப்பாவி? சண்டாளா... குழந்தையாக வளர்த்துவிட்டு திடீர்னு இப்படி ஒரு எண்ணமா? இப்படி ஒரு சபலமா? நீ மனுஷனா?...'' தனக்குள்ளேயே வெகுண்டான். ''உகும்... இவளை இனி இங்கே விட்டு வைப்பது தவறு. படிப்பு முடிஞ்ச கையோட கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணி வெளியே அனுப்பினால்தான் பிழைப்பாள். இல்லா விட்டால் இந்தப் பாவி இந்தப் பட்டுப் பூவை காலடியில் போட்டு கசக்கி பாழாக்கி விடுவான்'' அதற்கு மேல் அவனால் சிந்திக்கவே முடியவில்லை.

மறுநாள் காலை அவளுடன் காபி பலகாரம் சாப்பிட தேவநாதன் சாப்பாட்டறைக்கு வந்தார்.

''பயந்துட்டியா... நான் சும்மா உன்கிட்டே விளையாடினேன். அதுக்கு அப்படி அரண்டு போயிட்டியே'' விகாரமாகச் சிரித்தார்.

அவரை நிமிர்ந்து பார்க்கவும் அவளுக்கு அச்சமாகவே இருந்தது. அருவருப்பாகவும் இருந்தது. எனினும் அவர் வீட்டு உப்பைத் தொடர்ந்து தின்கிறோமே என்று மனசாட்சியின் உறுத்தல். ''விளையாட்டுன்னு புரியலை சித்தப்பா.. உண்மையில் பயந்துட்டேன்..''

''சரி அதை மறந்துடு. நல்லா ாப்பிட்டுட்டு கொஞ்சம் ஒய்வு எடுத்துக்கோ. ராத்திரி வண்டிக்கு உன்னை வழி

https://telegram.me/aedahamlibrary



அனுப்ப நம்ப வைரவன் வருவான். எனக்கு பகல் ஒரு கூட்டம் இருக்கு. அதனாலே முடியாது. ஹாஸ்டலுக்குப் போனதும் கடிதம் போடு. இந்த காலேஜ் பீஸ் - ஹாஸ்டல் செலவு எல்லாத்துக்கும் இதை வெச்சுக்கோ. போதாட்டா மேலே அனுப்பி வைக்கிறேன்'' என்று கூறிவிட்டு ஆயிரம் ரூபாய்கள் அடங்கிய நோட்டுக் கத்தை ஒன்றை மேஜை மீது அவள் முன் வைத்தார். உண்மையில் அது அவர் வழக்கமாக ஹாஸ்டல் செலவிற்குக் கொடுப்பதைவிட அதிகம்தான்.

அவள் தன் வியப்பை வெளிக்காட்டிக் கொள்ள வில்லை. ஆனாலும் தகாத முறையாக தாம் நடந்து கொண்டதை மறைக்கக் கொடுத்த லஞ்சம் போல்தான் அந்தப் பணத்தை தொட அவளுக்கு அருவருப்பாக இருந்தது... ஆனால் வேறு வழி?

''தாங்யூ அங்கிள்... தலையை தூக்காது பதிலளித்தாள்.

''நல்லா படிச்சு பாஸ் செய்துடு... அதுதான் நான் பட்ட சிரமத்துக்கு நீ கொடுக்கும் பரிசு'' சிரித்துக் கொண்டே அவர் எழுந்து சென்று கையை கழுவிக்கொண்டு தோட்டத்திற்குள் மறைந்து விட்டார்.

பகல் உணவிற்குப் பிறகு அவளுக்கு வாழ்த்துக் கூறி விட்டு வேகமாக தமது காரில் ஏறிக் கொண்டு அவர் எங்கேயோ போய்விட்டார்.

வீட்டில் தனியே வைரவனுடன் இருந்த போதுதான் அவள் எல்லாம் சொன்னாள்.

திருச்சியில் அவர் வாங்கிக் கொடுத்த பரிசுகள் வழியில் நடந்தது - பசு மாட்டை அடித்தது - பால் டம்ளருடன் சென்றபோது நடந்து கொண்ட விதம் ஒன்றையும் விடாது அவனிடம் விவரமாகச் சொன்னாள்.

https://telegram.me/aedahamlibrary



அரைத்துக் கொண்டிருந்த அம்மிக் குழவியைத் தூக்கிக் கொண்டு அப்படியே அவர் தலை மீது போட்டு மண்டையை உடைக்க வேண்டும் போன்ற ஒரு கொலை வெறியில் வைரவன் துடித்தான்.

''தாத்தா... அவர் ஒரு ஸாடிஸ்ட். அவரிடம் ஜாக்கிரதையாக இருங்கள்'' அப்போதுதான் அவள் எச்சரித்தாள். ரயில் நகரும்வரை ஜன்னல் அருகே நின்று கொண்டிருந்த வைரவன் பன்னிப்பன்னி ஒன்றையேதான் சொல்லிக் கொண்டிருந்தான். ''குழந்தே! எப்படியாவது பி.ஏ. வகுப்பை முடிச்சுட்டு வந்துடு. உன் கையிலே படிப்பு இருந்தா உனக்கு உதவியாக இருக்கும். ஐயாவைப் பத்தின கவலையை விடு. நான் இருக்கும் வரை ஒரு ஈ எறும்புகூட உன் மேலே உட்கார முடியாது. விடமாட்டேன் நான். சத்தியம், என்னை நம்பு. எல்லை மீறி எதாச்சம் அவர் தாறுமாறாக நடக்க ஆரம்பிச்சா அவ்வளவுதான் என் உசிரைப் பத்தி கூட நான் கவலைப்பட மாட்டேன் தாழ்வாரத்திலே சொருகி வச்சிருக்கிற வெட்டருவாளாலே ஒரே போடு போட்டுட்டு போலீசிலே போய் விழுந்துடுவேன். நான் இருக்கேன் கவலைப்படாதே கொழந்தே'' ஆறுதல்கள் பல சொன்னான்.

''உங்களைத் தவிர எனக்கு இந்த உலகத்திலே யார் இருக்கா தாத்தா? நீங்கதான் என் தாய்- என் தந்தை - தாத்தா - பாட்டி எல்லாமே... சொல்லப் போனால் நான் கும்பிடற தெய்வமும் நீங்கதான். உங்க உதவியால்தானே நான் இந்த படிப்பு - இந்த சுகமான நிலை எல்லாம் காண முடிஞ்சுது.... இந்த நன்றியை நான் உசிர் உள்ளவரை மறக்க மாட்டேன்... உணர்ச்சியோடு சொல்லிக் கொண்டு அவனது கரங்களைப் பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள். சூடான கண்ணீர்த் துளிகள் கைகள் மீது விழுவதைக் கண்டு அவன் திடுக்கிட்டான்.

https://telegram.me/aedahamlibrary



''என்ன குழந்தை இது'' சொல்லி முடிப்பதற்குள் இரண்டாவது மணியடித்து வண்டி நகரத் தொடங்கியது. கையை நனைத்த அந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு... கண்கலங்க ''கடுதாசி போடும்மா, குழந்தை, உன் நினைவாகவே இருப்பேன்'' கத்திக் கொண்டே நகரும் வண்டியுடன் சிறிது ஓடினான்.

# 6

உறக்கம் பிடிக்காது எழுந்து உட்கார்ந்தான் வைரவன். நிலவொளியில் இன்னமும் தமயந்தி புன்னகைத்துக் கொண்டிருந்தாள். ''அம்மா கொழந்தே! சிரிச்சுக்கிட்டே இருக்கியே. அன்னக்கி உன்னைக் கன்னங் கன்னமாக அந்தப் பாவி அடிச்சானே எப்படித் துவண்டு விழுந்து விழுந்து அழுதே... அதை நினைச்சாக்கூட.... தனக் குள்ளே முணுமுணுத்தபடி கன்னங்களில் கோடிட்ட நீரைத் துடைத்துக் கொண்டான். படுக்கை மீது மறுபடியும் சாய்ந்தான்... உறக்கம் வந்தால்தானே?

ஒரு சில மாதங்கள் சென்றன. ஒரு நாள் மாலை தமது மருந்துக் கடை வியாபாரத்தை மேற்பார்வை யிட்டு விட்டு தாமே காரை ஓட்டிக்கொண்டு வந்தவருக்கு திடீரென்று நெஞ்சில் லேசாக வலி தலையைச் சுற்றுவது போன்ற ஒரு உணர்வு மனிதர் நடுநடுங்கிப் போனார்.

மெல்ல காரை ஒரு மரத்தடியிலே நிறுத்திவிட்டு ஆசனத்தில் சாய்ந்து கொண்டார். மூச்சு அடைப்பதைப் போன்று நெஞ்சினிலே திணறல்.

என்ன வந்து விட்டது? குண்டுக்கல் போலத்தானே அவர் இருந்தார்? வைத்தியர் நாராயணன் சொன்னபடி மிதமாகத்தானே சாப்பிடுகிறார்! மற்ற விஷயங்களிலும்

https://telegram.me/aedahamlibrary



சமீப காலத்திலே ஒரே கட்டுப்பாடாகத்தானே இருந்து வருகிறார். என்ன ஆயிற்று? அன்று ஒரு நாள் மாலை கூட தமது ஆரோக்யத்தை சோதித்துப் பார்க்க தோட்டத்தைச் சுற்றி ஒரு முறை வேகமாக ஓடி வந்தாரே?

அப்போது இப்படி மூச்சடைக்கவில்லையே?

"இந்தப் பாவி வைரவன் சில சமயம் சொன்னதைக் காதிலே போட்டுக் கொள்வதில்லை. வரவர அவனுக்குத் திமிர் அதிகரித்துக் கொண்டு வருகிறது. கண்டித்தால் திரும்பி முறைத்துப் பார்க்கிறான். ஓங்கி ஒரு அறை விட்டால் மூலையில் சுருண்டு போய் விழுந்து விடுவான். கிழப்பயல். ஆனாலும், நெட்டுக்குக் குறைச்சல் இல்லை. முட்டை கோஸ், வயிற்றுக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்று எத்தனை தடவை சொல்லியும் பகல் சாப்பாட்டின் போது கோஸ் கரியில் நிறைய தேங்காயைப் போட்டுப் பாவிப்பயல் பரிமாறினான். வாய்க்கு ருசியாக இருந்தது என்று தின்று தொலைத்து விட்டதின் பயனோ? எஜமானனை சீக்கிரம் எமலோகத்துக்கு அனுப்பிவிட்டு ஐயாயிரம் ரூபாயை அடித்துக் கொண்டு கிளம்பலாங்கிற யோசனை" பற்களைக் கடித்தார் ஆத்திரத்துடன். அப்போது மறுபடியும் லேசாக நெஞ்சை வலித்தது. உகும், இதை உடனடியாக கவனித்தாக வேண்டும். பயப்படக் கூடாது என்று சுதாரித்துக்கொண்டு டாக்டர் வீட்டு வாசலில் நிறுத்தினார்.

பகல் உணவிற்குப் பிறகு ஓய்வாக சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த நாராயணன் திடுக்கிட்டெழுந்தார்.

"தேவநாதன் ஸாரா? என்ன இந்த வேளையில்?"

தேவநாதனுக்கு எரிச்சல் தாளமுடியவில்லை.

கோஸ் கரியை சாப்பிட்டு விட்டதாலோ என்னவோ ஒரே முட்டாகக் காற்றுக் கிளம்பி நெஞ்சை அடைக்கிறது.

https://telegram.me/aedahamlibrary



உங்களைப் பார்த்துட்டு ஏதாவது மருந்து வாங்கிச் சாப்பிடலாம்னு வந்தேன். மீண்டும் லேசாக ஒரு வலி நெஞ்சை அடைக்க அவர் முகத்தைச் சுளித்தார்.

கார்லேயே இருங்க. இறங்க வேண்டாம். நானே வரேன். பரபரப்பாக நாராயணன் மருந்து பெட்டியுடன் வெளியே வந்தார். பின் ஆசனத்தில் படுக்க வைத்து அவரை சோதித்தார்.

''என்ன ஸார் இது? ஒரு முட்டா ரத்த அழுத்தம் ஏறிக் கிடக்கிறதே. இதற்கு உடனடியா ஓய்வு தேவை'' வைத்தியரின் குரலில் கவலை தொனித்தது.

தேவநாதன் முகம் வெளுத்துப் போனார். ''முன்பு ஒரு தடவை பரிசோதித்தபோது ஒண்ணும் இல்லை. உடம்பு நல்லா இருக்குன்னு சொன்னீங்களே, இப்ப என்ன வந்துவிட்டது?''

''மனிதக் காயம் அனித்தியம்னு அதுக்குத் தான் சொல்வது. நாற்பது வயதைத் தாண்டியவர்களுக் கொல்லாம் ரத்த அழுத்தம் சர்க்கரை வியாதி - மாரடைப்பு - புற்றுநோய்னு பல நோய்களை எதிர்பார்க்கலாம். கொஞ்ச காலமாக நீங்க அதிகமாக அது சாப்பிடுகிறீர்களா?''

''ஐய்யய்யோ-மதுவையும்-மாமிசத்தையும் மத்த விஷயங்களையும் எப்பவோ விட்டு தொலைச் சுட்டேனே!''

''உங்க காரை நானே ஓட்டிக் கொண்டு வரேன் - ஒரு ஊசி போடறேன். நல்லா தூங்குவீங்க; மனசிலே எந்த கவலையும் வேண்டாம் தெரிஞ்சுதா?''

''கவலையில்லாத மனிதன் யாராவது உண்டா டாக்டர்?'' தேவநாதன் சிரிக்க முயன்றார்.

https://telegram.me/aedahamlibrary



''நோயாளிகள் கவலைப்படக் கூடாது. அவர்கள் கவலைகளை மறக்க வைக்க எங்கிட்ட எத்தனையோ மருந்துகள் இருக்கு. உங்களுக்கு தெரியாத மருந்துகளா? எனக்கு தெரியும்! உங்க மனதில் தமயந்தியைப் பத்தி ரொம்ப கவலை. அவள்தான் புத்தி கெட்டு போய் விட்டாள்-அதைப் பத்தி நினைச்சு வேதனைப்படுகிறதிலே என்ன லாபம்?''

நெஞ்சுவலி பொறுக்க முடியாது தேவநாதன் கண்களில் நீர் புரண்டது.

வைத்தியர் அதை வேறுவிதமாக எண்ணிக் கொண்டார்.

பாவம்! மனிதருக்கு அந்த அனாதைப் பெண் மேல் எத்தனை பாசம்...? தமக்குள்ளே சிரித்தார்.

''நீங்க உங்க சொத்து அத்தனையும் அவளுக்கு எழுதி வச்சிருக்கிறீங்களாமே, கேள்விப்பட்டேன். உங்க தாராள மனசு யாருக்கு வரும்? உங்க தர்மம் உங்களை காக்கும். பயப்படாதீங்க. ஒரு பத்து நாள் ஓய்வா படுக்கையில் இருந்தால் சரியாயிடும். திருச்சியில் என் நண்பன் சபேசன் பெரிய கார்டியாக் ஸ்பெஷலிஸ்டாக பிராக்ட்டிஸ் பண்றானே... தெரியுமில்லை? அவனை இன்னிக்கே வரவழைக்க ஏற்பாடு பண்றேன்'' தலையை ஆட்டினார் தேவநாதன். ''அதற்குள் உயில் விவகாரம் ஊர் முழுவதும் பரவிவிட்டிருக்கிறதே?'' திருப்தியுடன் புன்னகைத்தார்.

அன்று இரவு காரில் புறப்பட்டு திருச்சியிலிருந்து வந்த ஸ்பெஷலிஸ்ட், அவரை நன்கு சோதித்தார். இரத்த அழுத்தம் அதிகமாகிவிட்டதினால் லேசாக மாரடைப்பு வந்திருக்கிறது. ஓய்வு பத்தியம் மருந்துகள் இவைகளால் விரைவில் குணப்படுத்தி விடலாம். கவலைப்படு வதற்கில்லை'' என்று தைரியம் கொடுத்தார்.

https://telegram.me/aedahamlibrary



மாடி படுக்கையறையிலே தான் அவர் ஓய்வாக படுத்துக் கிடந்தார்.

உடம்புக்கு வந்துவிட்டதாமே? அதற்குள் கிராமத்திலே கிசுகிசுப்பு.

பஞ்சாயத்து தலைவர் படை திரட்டிக் கொண்டு பார்த்துப் போக வந்துவிட்டார்.

அதற்குப்பின் கடை ஆட்கள் வயலில் வேலை செய்கிறவர்கள் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்று சாரை சாரையாக மக்கள் அவரைக் காண வந்து கொண்டிருந்தனர்.

குடம் குடமாக வைரவன் காப்பியைக் கலக்கி விநியோகித்துக் கை ஓய்ந்து போய்க் கொண்டிருந்தான்.

அவருக்குக் கொடுத்த மூன்று வார ஓய்வுக்குள் அவன் படுத்துவிடுவான் போல் அதிகப்படியான வேலைகள். நாராக ஆடிப் போனான் அவன். ஆனாலும் எல்லாவற்றையும் வேடிக்கை பார்ப்பது போன்றதொரு மவுனம். ஸ்பெஷலிஸ்ட் அவரை, ''படுக்கையினின்று எழுந்து நடக்கலாம். உலாவலாம். இனி பயமில்லை. இளஞ்சூடான நீரில் குளிக்கலாம். ஆனால் ஆத்திரப் பட்டு கூச்சலிடுவது, கோபிப்பது இவைகளை குறைத்துக் கொள்ள வேண்டும்'' என்று உபதேசித்துவிட்டு போயிருந்தார்.

அன்று காலை, மூன்று வாரமாக ஈரத்துணியால் வைரவன் உடம்பைத் துடைத்துக்கூட, படுக்கையிலே கிடந்த அசிங்கம் போக குறியலறைக்குள் புகுந்து அவர் ஆனந்தமாக சோப்பை பூசிக்கொண்டு நன்றாகக் குளித்தார். சுத்தமான ஆடைகளை அணிந்து கொண்டு படியிறங்கி கீழே வந்தார்.

https://telegram.me/aedahamlibrary



பத்தியத்தில் மனிதர் பாதியளவாக வற்றிப் போய் விட்டிருந்தார். பூஜையறைக்குள் சென்று பூக்களை அள்ளி முருகன் மீது வாரிப்போட்டு .... காப்பி பலகாரத்தை மிதமாகச் சாப்பிட்டார். பத்திரிகையைப் புரட்டினார். பின்னர் மெல்ல தோட்டத்திற்குள் இறங்கி நிழலில் ஓரமாக வைத்தியர் சொன்னபடி உலாவத் தொடங்கினார்.

தோட்டத்தில் ஒரு மூலையில் கோழிக்கூண்டு ஒன்று பெரிதாகக் கட்டப்பட்டிருந்தது. இப்போது காலியாகக் கிடந்தது. கொஞ்ச காலமாக அவர் மாமிசம், முட்டை எல்லாவற்றையும் கைவிட்டிருந்தார்.

கோழிக் கூண்டருகே வந்ததும் திடீரென்று அவருக்கு பழைய நினைவு வந்தது...

ஐம்பதிற்கு மேற்பட்ட கோழிகளை வைரவன் வளர்த்துக் கொண்டிருந்தான். தினசரி அவர் முட்டை, பால் சாப்பிடுவது வழக்கம். தமயந்தியும் வைரவனும் சுத்த சைவம். ஆனால் சில நாட்கள் அவருக்கு மதுவுடன் சாப்பிட கோழி ரோஸ்ட் தேவைப்பட்டது. அப்போது தோட்டக்காரன் உதவியுடன் ஒரு கோழியை அடித்து மருதாம்மாள் உபயோகித்த அறையிலே தனிப்பாத்திரங்களில் அவருக்கு கோழி வறுத்துக் கொண்டு வந்து ரகசியமாக மாடியறையில் அவன் வைப்பதுண்டு.

ஒரு தடவை ஒரு கோழி எட்டுக் குஞ்சுகளைப் பொரித்து விட்டிருந்தது. அதில் ஒன்றின் மீது தமயந்திக்கு ஆசை விழுந்துவிட்டது.

''தாத்தா! இந்த வெள்ளைக் குஞ்சுவின் கால் களைப் பார்த்தீங்களா? நீலமா இருக்கு. இதுக்கு நான் நீலக்காலின்னு பேர் வைக்கப்போறேன். நான் வளர்க்கப் போறேன் தாத்தா. எனக்கு இதை கொடுத்திடுங்க.''

https://telegram.me/aedahamlibrary



வைரவனுக்கும் அவளுக்கும் இடையே நீலக்காலி யென்ற அந்த பெட்டைக் கோழியைப் பற்றி அப்படி ஒரு ஒப்பந்தம். நீலக்காலி - தமயந்தி கூப்பிட்டதும் இறக்கையை படபடத்துக் கொண்டு அந்த கோழி ஓடி வரும். அவள் கைகளிலேயே தானியங்களைக் கொத்தித் தின்னும். புல் தரையில் அமர்ந்திருக்கையில் அவள்மீது ஜம்மென்று உட்கார்ந்துகொண்டு அவள் முந்தானையைக் கொத்தி கொத்தி இழுக்கும். ''நீலக்காலி படு பொல்லாதவளாகிக் கொண்டு வராள் தாத்தா'' அடிக்கடி அந்தக் கோழியைப் பற்றி அவள் பெருமைப்படுவாள்.

பி.ஏ. படிப்பு முடிந்ததும் வீட்டோடு நிரந்தரமாகத் தங்க நேர்ந்த போதுதான் தேவநாதன் தமது கண்களாலேயே சிவன் கோவில் அருகே அவர்களைப் பார்த்து விட்டார். கழுத்தை முறித்து தமயந்தியை அங்கேயே கொன்று குழிதோண்டி புதைக்க வேண்டும் போன்ற ஆவேசமான ஆத்திரத்தில் குமுறிப் போனார்.

வீட்டுக்கு வந்ததும் முதல் காரியமாக அவர் வைரவனை கூப்பிட்டார்.

''நல்ல காரமா மசாலா போட்டு ஒரு கோழி ரோஸ்ட் தேவை. அந்த நீலக்காலி கோழி நல்ல பருத்து பக்குவமா இருக்கு - தோட்டக்காரன்கிட்ட சொல்லி அதை அறுக்கச் சொல்லு...'' தலையை சீவிக் கொண்டு தன் அறையில் கண்ணாடி முன் நின்ற தமயந்தி அப்படியே முடியை அள்ளிக் கட்டிக் கொண்டு வெளியே விரைந்து வந்தாள்.

''சித்தப்பா... நீலக்காலி நான் வளர்க்கிற கோழி அதை...'' அவளுக்கு துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. கண்களில் நீர் பளபளத்தது.

''அதனால் என்ன? அதன் மாமிசத்தை சாப்பிட்டா வயிற்றை வலிக்குமா?'' அவர் விஷமமாகக் கேட்டார்.

https://telegram.me/aedahamlibrary



"வேண்டாம் சித்தப்பா... நீலக்காலியை விட்டு விடுங்கோ, வேறே எதையாவது எடுத்துக்க சொல்லுங்கோ.. நீலக்காலியை நான் என் குழந்தையாட்டம் வளர்க்கிறேன் சித்தப்பா" அவளுக்கு துக்கம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. விம்மி விம்மி அழத் தொடங்கினாள். நீலக்காலி தனக்கேற்பட்டுள்ள ஆபத்தை உணர்ந்து கொண்டது போல் எஜமானி காப்பாற்ற மாட்டாளா என்ற தவிப்பில் தோட்டக்காரன் கையில் சிறகை படபடத்துக் கொண்டு கொக் கொக்கென்று கூவிய போது தமயந்தி ஓவென்று அழுது விட்டாள்.

"சித்தப்பா உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேன் என் நீலக்காலியை விட்டுடுங்க" அவள் குழந்தைபோல் விக்கி விக்கி அழுதாள்.

"ஷட் - அப் பெரிய நாடகம் போடறியே" உறுமிய தேவநாதன் தோட்டக்காரனுக்கு சைகை காட்ட, அவன் ஓட்டுக் கட்டடத்திற்கு நீலக்காலியுடன் விரைந்தான். கொஞ்ச நேரத்தில் அதனுடைய கூக்குரல் அடங்கியது.

தோட்டக்காரன் கையைக் கழுவிக்கொள்ள பின்பக்கத்து தொட்டியருகே வந்தபோது தேவநாதன் உரத்து சிரித்தார்.

"உன் நீலக்காலி சிவலோகப் பிராப்தியடைந்து விட்டாள். பார் அங்கே"

தோட்டக்காரன் கைவிரல்கள் மீது படிந்திருந்த ரத்தத்தையும் அந்த கத்தியையும் கண்ட தமயந்தியின் உடல் வெடவெடவென்று நடுங்கியது. ஓவென்று அலறிக் கொண்டு பூஜையறைக்குள் ஓடி தரை மீது சுருண்டு விழுந்தாள். முகம் சிவக்க அவள் குமுறி அழுவதைக் காண சகிக்காத வைரவன் மனம் கரைந்து போனான்.

"எழுந்திரும்மா - இதுக்குப் போய்.."

https://telegram.me/aedahamlibrary



''எப்படி தாத்தா அவருக்கு மனசு வந்தது...? என் குழந்தையைப் போல வளர்த்தேனே... வளர்த்ததை வறுத்து திங்கும் அளவு அத்தனை கொடுமையான மனசா?'' விம்மினாள்.

உள்ளே வந்தார் தேவநாதன். ''தமயந்தி?'' பெருங் குரலில் அதட்டினார்.

''வளர்த்த கோழியை அறுத்துட்டேன்னு இப்படி அழுகிறாயே. நான் வளர்த்த பச்சைக்கிளியை ஒரு பூனை திங்க முயற்சிப்பதைப் பார்த்த பிறகு என் மனசு எப்படி இருக்கும்? புரிஞ்சுக்கோ'' தேவநாதன் கர்ஜித்தார்.

## 7

தமயந்தி அரண்டு போய்விட்டாள். அவரை நிமிர்ந்து பார்க்கக்கூட அவளுக்கு அப்போது துணிவு இருக்கவில்லை.

பல முறை தம்மைத் தாமே கடிந்து கொண்டார். ஆனாலும் தமயந்திக்கு அப்படி ஒரு துணிச்சலா? அவரால் நம்ப முடியவில்லை. மருந்துக் கடையில் கணக்கு எழுதிக் கொண்டிருந்த கிழவர் முனுசாமிதான் வருமான வரிக்கான அவரது மற்ற கணக்குகளை எல்லாம் கவனிப்பது வழக்கம். உறவினர்களைப் பார்க்க ஊருக்குப் போனவர் திரும்பாத ஊருக்குப் போய் விட்டார்.

புதிதாக ஒரு கணக்கர் அவருக்கு அவசரமாகத் தேவைப்பட்டது. நண்பர் ஒருவரிடம் சொல்லி வைத்திருந்தார்.

''பி.காம். படித்தவன் - தட்டெழுத்து - சுருக்கெழுத்து எல்லாம் கற்றவன். புத்திசாலிப் பையன். ஏழை வேலைக்கு அலைகிறான். சிறு வயசிலேயே பெற்றோர்களை இழந்து பெரியப்பா தயவில் ஜெய்பூரில் எடுபிடி வேலை

https://telegram.me/aedahamlibrary



செய்து கொண்டு தத்தளிக்கிறான். ஒரு கடிதம் போட்டு வரவழைக்கிறேன். வேலையைப் பார்த்து நீங்கள் சம்பளம் கொடுங்கள்'' வேப்பிலை அடித்தார் அந்த நண்பர்.

உள்ளூர்வாசிகள் எவனும் தேவையில்லை. அவரது அந்தரங்கங்களை அம்பலமாக்கி விடுவான்கள் பாவிகள். வெளியூரிலிருந்து இந்த பையன் வரட்டும் என்றுதான் அவர் அதற்கு ஒப்புக்கொண்டார்.

ஒருநாட் காலை அந்த வராந்தாவிலே ஓய்வாக நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தபோது அவன் வந்தான்.

''வணக்கம்'' கைகுவித்துக் கொண்டு தயங்கியபடி நின்ற அவனை வியப்புடன் ஏற இறங்கப் பார்த்தார்.

வயது இருபத்தைந்து இருக்கும் என ஊகம். களையான முகம். நல்ல நிறம் கூட. சுருண்ட கிராப்பு முடி கழுத்தில் புரள காதோரம் கிருதாக்களும் அரும்பு மீசையுமாக பையன் பார்க்க நன்றாகவேயிருந்தான்.

''யாரப்பா நீ?'' கொஞ்சம் அதட்டலாகக் கேட்டார். சுத்தமாக உடுத்திக் கொண்டிருந்தான். பையிலிருந்த சிபாரிசு கடிதத்தை எடுத்து நீட்டியபோது விரல்களை கவனித்தார். சிகரெட், பீடி குடிக்கும் பழக்கம் ஏதுமில்லை என்று பளிச்சென்ற விரல்களும் அழகாக வெட்டப்பட்ட சுத்தமான நகங்களும் அறிவித்தன.

''பெயர் சிவநேசன். உங்களிடம் கணக்கர் வேலைக்கு வந்திருக்கிறேன். ஜெய்ப்பூரிலிருந்து சென்னைக்கு வந்தேன். பிறகு டிக்கெட் கிடைக்க ரெண்டு நாள் தாமதமாகி விட்டது. காலையில் இறங்கி அரசங்குடி கிராமத்தைத் தேடி கண்டு பிடிக்க கொஞ்சம் நேரமாகி விட்டது. மேற்கு அரசங்குடி என்கிற கிராமத்துக்கு தவறுதலாக

https://telegram.me/aedahamlibrary



போய்த் தேடிவிட்டு இப்போதான் சரியான விலாசம் தேடி வந்திருக்கிறேன்? மன்னிக்கணும்'' மென்மையாகப் புன்னகைத்தான்.

அவன் முகம் முன்னைவிட இன்னும் கவர்ச்சியாகி விட்டது போன்றதொரு பிரமை அவருக்கு.

''இருநூறு ரூபாய் சம்பளம் - கடைக்கணக்கு - வீட்டுக் கணக்கு எல்லாத்தையும் கவனிக்கணும். சம்மதமா?''

ஏழை பட்டதாரி. வேலைக்கு அலைந்து கொண்டி ருப்பவன். மறுப்பு சொல்ல முடியுமா? ஒப்புக் கொண்டான்.

கிராமத்திலே ஒரு வீட்டிலே நூறு ரூபாய் கொடுத்து விட்டு சாப்பிட்டுக் கொண்டு தங்கியிருந்தான். டவுனுக்கு பஸ்ஸில் போய் கடை திறக்கு முன் ஆஜராகி விடுவான். முத்துப் போன்ற கையெழுத்து, கணக்கில் புலி, வேலையில் திறமைசாலி, அமைதியான குணம், அவருக்குப் பிடித்துப் போயிற்று. விடக்கூடாது இவனை. கடையிலே மடக்கிப் போட்டு வைக்க வேணும் என்ற நோக்கம். சில மாதங்களில் இன்னும் ஒரு நூறு ரூபாய் சம்பளத்தை உயர்த்தினார். வீட்டுக்கு வரச்சொல்லி தமது கடிதங்களை டைப் அடிக்கவும், வீட்டுக் கணக்குகளை சரிபார்க்கவும் ஏற்பாடு செய்தார்.

உலக அனுபவத்தில் அவருக்கு மிஞ்சியவர் யாரும் கிடையாதுதான். ஆனாலும் யானைக்கும் அடி சறுக்குமே!

சிவநேசன் விஷயத்தில் அவர் ரொம்பவும் நம்பி விட்டார். பையன் புத்திசாலி, எஜமான் கோபக்காரர், பொல்லாதவர் என்பதைப் புரிந்து கொண்டிருப்பான். அதனால் துணிவு எதுவும் ஏற்படாது என்று எண்ணி ஏமாந்து போனார்.

https://telegram.me/aedahamlibrary



குனிந்த தலையுடன் அவன் வாயில்அறையில் உட்கார்ந்து கணக்குகளை சரிபார்த்து எழுதிவிட்டு வந்த சுவடு தெரியாமல் போய்விடுவது வழக்கம்.

வைரவன் அதிகப்பிரசங்கி சில சமயம் அவர் உத்தரவைக் கூட கேட்காது ஒரு டம்ளர் காப்பியைக் கொண்டு வந்து அவனுக்குக் கொடுப்பதுண்டு.

ஊரிலே கொடை வள்ளல் என்ற பெயராச்சே! வீட்டிலே ஒரு வாய் காப்பித் தண்ணிக்குப் பஞ்சம் என்று சிவநேசன் நினைத்துக் கொண்டு விட்டால்? தொலையட்டும் என்று அந்த சிறு விருந்தோம்பலை அனுமதித்து விட்டி ருந்தார்.

நேரம் அதிகமாகி விட்டால் சிலசமயம் அவனுக்கு சாப்பாடு போட்டு அனுப்பும்படி தாமே தாராளமாக அவர் உத்தரவிடுவதுண்டு.

பின்கட்டுத் தாழ்வாரத்தில்தான் தரையில் இலையைப் போட்டு வைரவன் பரிமாறுவான். சிவநேசன் வேகமாக சாப்பிட்டுவிட்டு கைகழுவிக் கொண்டு பின் தோட்டத்து வழியே வெளியே போய்விடுவான்.

அவனை வேலைக்கமர்த்திய புதிதில் தமயந்தி இருக்கவில்லை. இறுதி ஆண்டுத் தேர்வுக்கு படித்துக் கொண்டு சென்னை கல்லூரி ஹாஸ்டலில் தங்கி இருந்தாள்.

பரீட்சைக்குப் பின்னர் நிரந்தரமாக அவள் வீட்டில் தங்க வந்தபோதுதான் அவர் மனதில் சிறு உறுத்தல். எனினும் தமது கழுகுக் கண் பார்வையிலே எவ்விதமான தவறும் நேராது, அவ்வளவு துணிச்சல் வருமா அந்தப் பெண்ணிற்கு... எண்ணி ஏமாந்து போனார்.

https://telegram.me/aedahamlibrary



‘‘காதலில் கட்டுண்டவனுக்கு பயம் இருக்காது. கல்வி மீது மோகம் கொண்டவனுக்கு பசி இருக்காது’’. அந்த பழமொழியை அவர் மறந்து போய்விட்டிருந்தார். ஒரு நாள் அவர் கடையினின்று வந்து தமது காரில் இறங்கிய போது தமயந்தி வாயில் அறையினின்று சாப்பிட்ட டம்ளருடன் வெளிப்படுவதை கவனித்து விட்டார். எரிமலையாகப் பொங்கிப் போனார்.

‘‘வைரவன் எங்கே? கூச்சலிட்டபடி தமயந்தியைக் கண்களால் எரித்தார்.

அவள் உண்மையிலே அன்று நடுங்கித்தான் போய் விட்டாள். லேசாக சிவந்து போன அவள் முகத்தையும் - பளபளத்த கண்களையும் கண்டபோது, பொறாமைத் தீ அவரைச் சுட்டுப் பொசுக்கியது.

உள்ளே வந்த தமயந்தி அவரை அச்சத்துடன் பார்த்தாள்.

வைரவன் கைவேலையைப் போட்டுவிட்டு ஓடிவந்தான்.

‘‘வயசுப் பெண் கையில் காப்பியைக் கொடுத்து அனுப்பிச்சிருக்கியே, உனக்கு புத்தியிருக்கா? மடசாம் பிராணி - வயசுதான் மாடுபோல் ஆச்சே ஒழிய...’’ பற்களைக் கடித்தார் கோபத்துடன்.

‘‘மன்னிச்சுக்கோங்க... யோசனையில்லாமல்.... மென்று விழுங்கினான் அவன்.

‘‘படிச்ச பெண் உனக்கெங்கே அறிவு போச்சு? என்கிட்ட வேலை செய்கிற கணக்கன் அவன். அவனுக்கு நீ போய் உபசாரம் செய்யணுமா? இன்னொரு தடவை இந்த தப்பு நடந்ததோ’’ உறுமிவிட்டு அவர் மாடி அறைக்குப் போய்விட்டார்.

https://telegram.me/aedahamlibrary



அப்பொழுதே அந்த சிவநேசனை வேலையினின்று நீக்கி ஒழித்து விட்டிருந்தால்... பெருமூச்சுடன் அவர் தோட்டத்திற்குள் கடந்த கால நினைவுகளுடன் வளைய வந்தார்.

பழரசம் நிரம்பிய டம்ளரை தட்டில் சுமந்துகொண்டு விரைவில் வந்தான் வைரவன்.

பின்னால் ஆள் வருவதைக் கவனிக்காது அவர் திரும்பினார். தட்டின் மீது கைபட்டு... டம்ளர் கீழே விழுந்தது. புல் தரைக்குள் பழரசம் புகுந்து மறைந்தது.

''கொஞ்ச நாளாகவே உனக்கு கையும் காலும் பதறுகிறது. என்ன சங்கதின்னு தெரியலை. அன்னிக்கு பீங்கான் தொட்டியைப் போட்டு உடைச்சே. இன்னிக்கு பழரசத்தைக் கீழே கொட்டிட்டே. உனக்கு என்ன கேடு வந்துடுச்சு? எனக்குத்தான் கேடு வந்து இப்போ யார் புண்ணியமோ உசிரோடு எழுந்து உட்கார்ந்திருக்கேன். உனக்கு அது பிடிக்கலையோ?'' ஏளனமாகக் கேட்டபடி உறுத்து விழித்தார்.

''மன்னிச்சுக்கோங்க எஜமான் - எனக்கு வயசாயிடுச்சு கையும் காலும் நிதானமில்லாம ஆடுது. நான் கிழவன் என்ன செய்வேன்?'' முணுமுணுத்த வைரவன், டம்ளரைக் குனிந்து எடுத்துக்கொண்டு மீண்டும் பழரசம் தயாரிக்க உள்ளே சென்றான்.

சாத்துக்குடி பழங்களை அறுத்து பிழிந்து கொண்டிருந்த வைரவனுக்கு திடீரென்று அந்த நினைப்பு வந்தது.

அவனுக்கு ஆரம்பத்திலேயே உண்மை பூராவும் தெரியும். அதை அவன் மிகவும் வரவேற்றான்.

ஒருநாள் காலை. சமையலறையில் அவனுக்குக்

https://telegram.me/aedahamlibrary



காய்களை அரிந்து கொடுத்து உதவிக் கொண்டிருந்தாள் தமயந்தி...அப்போது தேவநாதன் வீட்டில் இருக்க வில்லை. மருந்துக் கடையை மேற்பார்வையிடவும், நெல் அறுவடையை கவனிக்கவும் வெளியே போயிருந்தார்.

முருங்கைக் காய்களைத் துண்டமிட்டுக் கழுவி மேடை மீது வைத்துவிட்டு புடவைத் தலைப்பை முடுக்கிக் கொண்டு அருகில் வந்து நின்றாள் தமயந்தி.

''தாத்தா! உங்ககிட்ட ஒண்ணு பேசணும் - ரொம்ப நாளா சொல்ல பயந்துண்டு இருக்கேன்'' விரல்களால் மேடை மீது கோலமிட்டபடி உடம்பை நெளித்தாள் அவள்.

என்ன சொல்லப்போகிறாள் என்பதை வினாடியில் ஊகித்துக் கொண்டுவிட்டான் வைரவன். அவனுக்குத் தாங்கொண்ணா மகிழ்ச்சி. பருத்தி புடவையாகக் காய்க்க ஆரம்பித்துவிட்டால் ஆனந்தப்பட வேண்டியதுதானே?''

''புது கணக்கர் சிவநேசனைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?'' கேட்டுவிட்டு குப்பென்று முகம் சிவந்து போனாள் அவள். வைரவன் நெஞ்சு மகிழ்ச்சியால் துள்ளியது.

''நல்ல பையன் படிச்சவன் புத்திசாலி. ஆனால் பாவம் ஏழை - தாய், தகப்பன் கூட இல்லையின்னு கேள்வி - ஆமாம், ஏன் கேக்கறே?'' பல்லெல்லாம் தெரிய மெல்லச் சிரித்தான்.

''நான் கூட ஏழைதானே தாத்தா? பெற்றோர்கள் இல்லாத அனாதைதானே எனக்கு அவரை ரொம்பப் பிடிச்சிருக்கு?''

''அப்படியா சங்கதி? அவனுக்கு உன்னைப் பிடிக்க வேண்டாமா? அது தெரியுமா?''

''அவரும் என்னை ரொம்ப விரும்புகிறார் தாத்தா''

https://telegram.me/aedahamlibrary



"அடி சக்கை -எனக்குத் தெரியாமல் இத்தனையும் எப்படி நடந்திருக்கு? பஞ்சையும் நெருப்பையும் பக்கத்திலே வச்சால் இதுதான் நடக்கும்" உரக்கச் சிரித்தான் அவன்.

"அவர் கணக்கு எழுத இங்கே வந்தபோது ரகசியமாகத் தன் எண்ணங்களை ஒரு கடுதாசியில் எழுதி தோட்டப் பக்கமாகப் போகும்போது ஜன்னல் வழியே என் அறைக்குள் விட்டெறிஞ்சுட்டு போனார் நானும் பதிலெழுதி மகிழ மரத்துப் பொந்திலே கடிதத்தைச் சொருகி விட்டு வந்தேன்."

"பலே! பலே! கதை போகிற போக்கைப் பார்த்தால் பெரிய காதல் நாடகம் போல இருக்கே... பேஷ்... எத்தனை நாளாக இது நடக்கிறது."

"இரண்டு மாசமா நாங்க கடிதம் எழுதுகிறோம். இரண்டு மூன்று தடவை சிவன் கோவிலில் சந்தித்துப் பேசிக் கொண்டோம் தாத்தா? நீங்கதான் முன்னிருந்து எங்களுக்குக் கல்யாணம் செஞ்சுவச்சு ஆசி வழங்கணும். சித்தப்பாகிட்ட இதைப்பத்தி மூச்சுவிடக்கூட பயமா இருக்கு" தழதழத்தாள்.

"நான் இருக்கேன் கவலைப்படாதே... எஜமான் படிப்பு கொடுத்து முன்னுக்கு கொண்டு வந்தது வாஸ்தவம். அதுக்காக நீ அவரது கொத்தடிமையா? இந்த வைரவன் தான் உன்னை குழந்தை வயதிலிருந்து பரிவோடு எடுத்து வளர்த்தவன் என் பேத்தி போல மனசிலே ஏற்பட்டிருக்கிற பாசத்தை - உறவை யாரும் பிரிக்க முடியாது" உறுதி கொடுத்தான்.

தமயந்திக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "தாத்தா! என்னை குழந்தையிலிருந்து எடுத்து வளர்த்தீங்க! அது பெரிசல்ல எனக்கு வாழ்வு கொடுக்க முன் வந்தி ருக்கீங்களே! அதுதான் பெரிசு. எனக்கு ஆசி கொடுங்கோ

https://telegram.me/aedahamlibrary



தாத்தா'' திடீரென்று குனிந்து அவனது பாதங்களைத் தொட்டு வணங்கினாள்.

''என்னம்மா கொழந்தே இது...?'' வாரி எடுத்தான். அவள் கன்னங்கள் நனைந்திருப்பதைக் கண்டு நெஞ்சு துணுக்குற்றான்.

''அழுகிறியா அம்மா.. எதுக்கு? நான்தான் உன்பக்கம் என்று உறுதி சொல்றேனே...'' கடிந்து கொண்டு அவளது கண்ணீரைத் துடைத்து விட்டான்.

''அழவில்லை தாத்தா! இது என் ஆனந்தக் கண்ணீர அவரை நான் ரொம்ப நேசிக்கிறேன். அவரையேதான்... கல்யாணம் செய்து கொள்வது என்று தீர்மானம். ரெண்டு பேரும் ஏழைகள்தான். ஆனால் படிச்சிருக்கோம். ஏதாவது வேலை செய்து பிழைச்சுக்கலாம்னு எங்கள் திட்டம்... தாத்தா,அவர் ரொம்ப நல்லவர் தாத்தா!'' ஆர்ப்பரித்த அவள் ஆனந்தத்துடன் விம்மினாள்.

மனம் கரைந்து போன வைரவன் அவளது கூந்தலை மெல்ல அன்புடன் கோதிவிட்டான்.

''மகராசியா இரும்மா - பத்தும் பெற்று பெரு வாழ்வு வாழணும் - வாழ்த்தரேன் இந்த கிழவன்'' அவனுக்கு இறந்து போன மகனின் நினைப்பு வந்துவிட்டது. கண்களில் நீர் தளும்பியது - நெஞ்சைத் துக்கமும் இன்பமும் அடைத்தன. தாங்க முடியாது அவனும் விம்மி விட்டான்.

இரண்டு தினங்களுக்குப் பின்னர் ஒரு மாலைப் பொழுது வீட்டுக்குத் திரும்பிய தேவநாதன் கோபாவேசமாகக் காணப்பட்டார்.

''வைரவா! தமயந்தி எங்கே?'' சாலை வரை கேட்கும் அளவில் கூச்சலிட்டார்.

https://telegram.me/aedahamlibrary



பூஜையறை விளக்கை ஏற்றிவிட்டு ஊதுபத்தி கொளுத்தி வைத்துக் கொண்டிருந்த தமயந்தி பதறிப்போய் விட்டாள்.

"பூஜையறையில் இருக்கு - கூப்பிடவா?" கேட்டான் வைரவன்.

"அவளை மாடிக்கு வரச்சொல்!" உத்தரவிட்டார். வேகமாக படிகளில் ஏறித் தமது அறைக்குள்ளே சென்று விட்டார்.

தமயந்தியிடம் ஜாடை காட்டிவிட்டு அவசரமாக டம்ளரில் பழச்சாற்றை நிறைத்துக்கொண்டு மெல்ல அவள் பின்னால் அவனும் மாடிக்கு வந்தான்.

அச்சத்திலே அரண்டு போய் அவள் அவரது அறைக்குள்ளே மெல்ல நுழைந்தாள்.

அவர் பார்வையில் படாதபடி வாயிற்படியருகே வெளி வராந்தாவிலே வந்து நின்று கொண்டான் வைரவன். அவன் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

"என்ன இப்போவெல்லாம் ஒரே பக்தியில் இறங்கிட்டே? சித்தமின்னேதான் சிவன் கோவிலுக்குப் போனாயாம் இப்போ முருகனுக்கு பூஜையா? என்ன சங்கதி?" இகழ்ச்சியாக உரத்த குரலில் அதட்டினார். மவுனமாக அவள் தரையைப் பார்த்தாள்.

"உனக்கு சீக்கிரம் கல்யாணம் நடக்கப் போகிறது. ஏற்பாடுகள் செய்யப் போகிறேன். தெரியுமா?.... அவர் கேட்டதும் திடுக்கிட்டுப் போனாள்.

"என்ன சொல்றீங்க சித்தப்பா?' தலையை மெல்ல நிமிர்த்தினாள்.

https://telegram.me/aedahamlibrary



"சித்தப்பா - சித்தப்பா... அந்த உறவு முறையை இனி நீ ஒழிச்சுக் கட்டணும். அதுக்குக் காலம் வந்துவிட்டது.."

"எனக்கு ஒண்ணும் புரியலை சித்தப்பா விளக்கமாகச் சொன்னால் ...." வார்த்தைகளை விழுங்கிக் கொண்டாள்.

"மறுபடியும் சித்தப்பான்னு கூப்பிடாதே எனக்கு ரொம்ப கோபம் வருகிறது. சில நாட்களாக நான் நல்லா சிந்திச்சு ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். இந்த மாசத்திலேயே ஒரு முகூர்த்த நாள் இருக்கிறதாம். நம்ம புரோகிதரிடம் கேட்டு வச்சுக் கொண்டேன். ஊர் கூட்டி இந்தக் கல்யாணத்தை தம்பட்டம் அடிக்கப் போறதில்லை. எளிய முறையிலே வீட்டோட ரெண்டு பெரிய மனுஷங்களை சாட்சியாக வச்சுக்கொண்டு செய்திடப் போறேன். அதனாலே இனிமே நீ ஒழுங்கா நடந்துக்க பழகிக்கோ..." உறுமினார்.

"இன்னும் கொஞ்சம் விளக்கமாக சொன்னால் புரியும். என்னை குழப்புகிறீர்களே சித்தப்பா... அவள் வார்த்தைகள் பயத்தில் உடைந்தன.

"பட்டணத்தில் படிச்சவள் - பருவப்பெண் - படிக்காத புத்தகங்கள் இல்லை பார்க்காத சினிமா கிடையாது புரியலைன்னு நாடகமா போடறே? சாக்கடையிலே கிடந்த உன்னை நான் எதுக்காக படிக்க வைச்சு ஆளாக்கினேன்னு நினைச்சே?"

"ஒரு ஏழைக்கு வாழ்வு கொடுக்க வந்த தாராள மனம்னு நினைச்சேன்."

"என் வம்சம் என்னோட அழிஞ்சு போகாது ஒரு சந்ததியை விட்டுட்டு போகணும்ங்கிற ஆசையால்தான் உன்னை என் பராமரிப்பில் என் இஷ்டப்படி வளர்த்தேன். புரிஞ்சுக்கோ. இத்தனை அழகையும் இளமையையும் அந்த

https://telegram.me/aedahamlibrary



அனாதைப் பயலுக்கு விட்டுக் கொடுப்பேன்னு கனவு கண்டா உடனே மறந்திடு. உனக்கும் எனக்கும் வர வெள்ளிக்கிழமை காலை முகூர்த்தத்திலே கல்யாணம். அன்னிக்கு உன் பிறந்தநாள் இல்லையா?''

''சித்தப்பா அவள் அலறிவிட்டாள்.

''சீ வாயை மூடு இன்னொரு தடவை சித்தப்பான்னா நான் பொல்லாதவனாகி விடுவேன்.''

''இந்த வீட்டுக்கும் என் மனசுக்கும் உன்னை ராணியாக்க நான் பல நாளா திட்டமிட்டுக் கொண்டிருக்கையிலே அந்த பிச்சைக்காரப்பயலோட சிவன் கோவிலில் சந்திப்பா? ஆமாம் இந்த காதல் விவகாரம் எவ்வளவு போயிருக்கு. ரொம்ப நெருங்கிவிட்டதோ?'' அனலைக் கக்கினார் அவர்.

''அவரை நான் விரும்பறேன் - அவ்வளவுதான். அதற்கு மேல் எந்தத் தவறும் நாங்கள் செய்யவில்லை'' தாங்க முடியாத துக்கத்திலே நெஞ்சு வெடித்துவிடும் போல் அவள் குமுறி அழுதாள்.

''நிறுத்து இந்த ஓலத்தை காதல் கத்தரிக்காய் எல்லாத்தையும் இந்த நிமிஷமே மறந்துவிட்டு ஒழுங்கா என் மனைவியாகி குடித்தனம் செய்யக் கத்துக்கோ இந்த சொத்தை ஆள ஒரு மகன் பிறக்கணும். நீதான் அதுக்குத் தாயாக இருக்கணும் என்கிறது என் விருப்பம். என் திட்டம் இதுவரை நான் போட்ட திட்டத்தின் இடையே எவனும் வந்ததில்லை. அந்த ஈஸ்வரனே வந்தாலும் என் விருப்பத்தை மாத்த முடியாது தெரிஞ்சுக்கோ...''

''உங்களை நான் கல்யாணம் செய்துக்க மறுத்தால்?... அவள் விம்மினாள்.

''அத்தனை துணிச்சல் உனக்கு இருக்கா?''

https://telegram.me/aedahamlibrary



"குழந்தை நாளிலிருந்து அப்பாவைப் போல நினைச்சு பழகின உங்களை நான் எப்படி கணவனாக ஏத்துக்க முடியும்? இப்படிப்பட்ட ஒரு கெட்ட எண்ணம் உங்க மனசிலே இருந்தது தெரிஞ்சிருந்தா நான் பட்டணத்திலிருந்து இங்கே திரும்பி இருக்கவே மாட்டேன்."

"எங்கே போவே?"

"எங்கேயோ போய் வேலை செஞ்சி பிழைச்சுக் கொள்வேன். இப்பகூட நீங்க உத்தரவு கொடுத்தா கட்டின புடவையோட இங்கிருந்து உடனேயே வெளியே போய் விடுவேன். சித்தப்பா தயவு செய்து என்னை வற்புறுத்தாதீங்க. நான் சிவநேசனைக் காதலிக்கிறேன்."

"என்ன.. சொன்னே?" அருகில் ஆவேசமாக நெருங்கினார்.

"கையெடுத்துக் கும்பிடறேன். நாங்க ரெண்டு பேரும் ஒருவரையொருவர் ரொம்ப நேசிக்கிறோம்."

"இந்த பணம் காசு எல்லாத்தையும் விட்டுட்டு ஒரு பரதேசிப் பயலைக் காதலிச்சு - பட்டினியில் சாகிறேன் என்கிறியா?... அதுக்கு துணிஞ்சுட்டியா?"

"பணம் - பங்களா ஒன்றும் எனக்கு வேண்டாம் சித்தப்பா. படிப்பைத் தவிர அவருக்கு சொத்து பணம் ஏதும் கிடையாது. எனக்கு எல்லாம் தெரியும். அவரைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு கந்தலைக் கட்டிக்கொண்டு கஞ்சியைக் குடிச்சு குடிசையில் வாழ நேரிட்டாலும் பரவாயில்லை. எனக்குப் பூரண சம்மதம்...

"பட்டினி கிடந்து சாக நேரிட்டால்... அதுக்கும் சம்மதமா?"

"சேர்ந்தே ரெண்டு பேரும் சாகவும் தயார் சித்தப்பா...

https://telegram.me/aedahamlibrary



''அப்படியா சங்கதி? இத்தனை நாள் உன்னை நான் பாடுபட்டு வளர்த்ததின் பயன்?''

''நன்றி காட்டுகிறேன் உங்களை வாழ்த்தறேன் சித்தப்பா?''

''சீ மறுபடியும் அந்த உறவைச் சொல்லாதே. வலுக்கட்டாயமாக உன்னை என்னுடையவளாக்கிக் கொள்ள எனக்கு எத்தனை நேரம் பிடிக்கும்?''

''என் மனசை அடைய பல யுகங்கள் ஆனாலும் உங்களால் முடியாது. உங்களை மிகவும் கெஞ்சிக் கேட்கிறேன். எனக்கு வாழ்வு கொடுங்கள் ஐயா. நான் ஒரு ஏழைப்பெண்- அனாதை. என்னை அழிச்சிடாதீங்க சித்தப்பா'' அவள் கதறிக் கொண்டு கையெடுத்துக் கும்பிட்டாள்.

''சித்தப்பாவா! மறுபடியும் அந்த உறவை வச்சு என்னை பயமுறுத்துறியா?'' படீர் படீர் என்று அவளது கன்னத்தில் ஓங்கி அறைய அவள் அலறிக்கொண்டு இங்குமங்கும் ஓடினாள். ஒரே தாவலாக ஆத்திரத்துடன் புலிபோல் பாய்ந்து அவளை எட்டிப் பிடித்த தேவநாதன் தமது பலம் பொருந்திய கரங்களை அவளது கழுத்திலே வைத்து அழுத்தத் தொடங்கினார். வெலவெலத்துப் போனான் வைரவன்.

சட்டென்று ஒரு துணிவில் அவன் அறைக்குள்ளே புகுந்து விட்டான்.

''உங்க பழரசம். சாப்பிட மறந்துட்டீங்களே'' கூவியபடி இடையே புகுந்தான்.

தட்டை கோபத்துடன் தட்டிவிட்டார் தேவநாதன்.

''சமயம் பார்த்து வந்தியா திருட்டுப் பயலே. பின்னாலே கவனிச்சுக்கிறேன்'' என்று கத்தினார்.

https://telegram.me/aedahamlibrary



துணியாகத் துவண்டு அவரது பிடியினின்று மயங்கிக் கம்பளத்தின் மீது தொப்பென்று விழுந்த தமயந்தியைக் காலால் எட்டி உதைத்தார்.

''இந்த சனியனைக் கீழே எடுத்துக் கொண்டு போ பெரிய சாகசக்காரி.''

''ஆமாம், நீ எங்கேயிருந்து இப்போ வந்தே - என்ன நடக்கிறதுன்னு வேடிக்கை பார்க்க வந்தியாடா - இதுக்கு நீயும் உடந்தையா?'' கூச்சலிட்டார்.

ரத்தனக் கம்பளத்தின் மீது ஓடி மறைந்த பழரசத்தைப் பற்றியோ, சுக்கலாக உடைந்து நாலாபக்கமும் சிதறிய கண்ணாடி டம்ளரையோ அவன் கவனிக்கவில்லை.

கீரையாகத் துவண்டு கிடந்த தமயந்தியை வாரி தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு மூச்சடைக்க மெல்லப் படிகளில் இறங்கினான்.

கீழே அவளது அறையில் படுக்கை மீது கிடத்தினான். கொஞ்சம் தண்ணீரைக் கொண்டு வந்து முகத்திலே தெளித்தான். சூடாகக் கொஞ்சம் பாலை குடிக்கச் செய்து வற்புறுத்தினான்.

''தாத்தா... நான் இப்போ எங்கே இருக்கேன்?'' மெல்ல கண்களை விழித்த அவள் குழப்பத்துடன் கேட்டாள்.

''உன் அறையிலே பத்திரமா இருக்கே. நான்கூட துணையாக இருக்கேன்.''

''எனக்கு பயமாக இருக்கு தாத்தா... இப்போ நான் என்ன செய்வேன்?'' அவள் அழுதாள்.

''பயப்படாதே... என் உயிரைக் கொடுத்து உன்னைக் காப்பாத்துவேன்... சத்தியம்'' உறுதி கொடுத்தான் அவன் மறுபடியும். அவள் கண்களை மூடிக்கொண்டு மயக்கத்தி லாழ்ந்து விட்டாள்.

https://telegram.me/aedahamlibrary



# 8

சில தினங்கள் சென்றன. சிவநேசன் தொடர்ந்து கணக்கர் வேலை பார்த்துக் கொண்டுதானிருந்தான். வீட்டில் நடந்த எதுவும் அவனுக்குத் தெரிய வாய்ப்பு இருக்க வில்லை. கணக்குகளை கவனிக்க முன்போல் அவனை அவர் தமது வீட்டுக்கு வரச்சொல்வதை நிறுத்திக்கொண்டு விட்டிருந்தார். தன் அறையை விட்டு வெளியே எங்கும் போகக்கூடாது என்று தமயந்திக்கும் கடும் உத்தரவு போட்டிருந்தார். தேவநாதனைப் பாராமலே அந்த வீட்டிற்குள் அவள் பயந்தபடி ஒருவார காலத்தை எப்படியோ ஓட்டி விட்டிருந்தாள்.

இன்னும் இப்படியே எத்தனை நாள்? பசிக்கும் ஓநாய் போல் மிருக வெறியுடன் அலையும் தேவநாதனி டமிருந்து அந்தக் குழந்தையை எத்தனை நாள் கட்டிக் காக்க முடியும்? கலங்கித் தவித்துக் கொண்டிருந்தான் வைரவன். இரவில் அவள் அறையை உள்ளே நன்றாகத் தாளிட்டுக் கொள்ளச் சொன்னான். தாழ்வாரத்திலே காவலாக அறைக்கு முன் அவன் படுத்துக்கிடந்தான். சே! சே? இப்படி எத்தனை நாள்தான் அவன் பாதுகாக்க முடியும். தேவநாதனின் ஒரு குத்துக்கு அவன் தாங்கமாட்டானே? ''முருகா,முருகா'' நாள் முழுவதும் அவரைத்தான் உதவிக்கு தன்னுள் அழைத்துக் கொண்டிருந்தான்.''

அந்த வாரம் திங்கள்கிழமை காலை அவர் வைரவனைத் தமது அறைக்கு வரும்படி உத்தரவிட்டார்.

''பாவிப்பயல் எதற்குக் கூப்பிடுகிறான்? இன்னும் ஏதாவது புதிய திட்டமா?'' கலவரத்துடன்தான் வைரவன் மெல்ல அவர் முன் வந்து நின்றான்.

https://telegram.me/aedahamlibrary



''வைர அட்டிகை ஒன்று காணாமல் போயிருக்கு. அதை எடுத்தவன் நீதான்னு எனக்கு உன்னை உள்ளே தள்ள முடியும். என்ன சொல்றே?''

திடுக்கிட்டுப போனான் அவன். ''வைர அட்டிகையா? எஜமான். நான் அது மாதிரி பொருள் எதையும் இந்த வீட்டில் கண்ணால்கூடப் பார்த்ததில்லையே'' பதறினான்.

''சே! அது என் கற்பனை. ஆனால் உண்மையில் என்ன நடக்கும் தெரியுமா? என் புகாரை எழுதிக் கொண்டு போலீஸ் உன்னை புலன் விசாரிக்கத் தொடங்குவாங்க. வைர அட்டிகையை நீ விற்க வந்தாய்னு அந்தக் கடைக்காரன் கடிகாரப் பட்டையை வித்தியே அவன் வந்து சாட்சி சொல்வான். ஏற்கனவே நீ ஒரு தடவை திருடியிருக்கிறே. நான் மன்னிச்சுட்டேன் - இப்போ பெரிய பொருளாப் பார்த்து அமுக்கத் திட்டம் போட்டுக் கிளப்பிக்கொண்டு போய் விட்டேன்னு நானும் சொல்வேன். ஏழையின் சொல் அம்பலம் ஏறுமா? உன்னைத் திருட்டுக் குற்றத்துக்கு ஒரு வருஷமோ, இரண்டு வருஷமோ உள்ளே தள்ளி விடுவாங்க... அதனாலே வாயை மூடிக்கொண்டு இப்ப நான் சொல்றதை நீ செய்யப்போறே.''

எச்சிலை விழுங்கிக் கொண்டான் அவன். நெஞ்சு படபடவென்று துடித்தது. உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

''என்ன செய்யணும் எஜமான்'' குரல் கிணற்றி லிருந்து ஒலிப்பது போல் பலவீனமாக ஒலித்தது.

''அப்படி வா வழிக்கு இப்படி கிட்ட வந்து கீழே உட்கார். கவனமா எல்லாத்தையும் கேள்.''

https://telegram.me/aedahamlibrary



வைரவன் மேல் துண்டினால் முகத்தைத் துடைத்துக் கொண்டு அவரது கட்டிலின் காலைப் பிடித்துக் கொண்டு தரையில் உட்கார்ந்தான். எங்கேயோ தன்னைக் கொண்டு செம்மையாக மாட்டிவிடப் போகிறார் என்ற கிலி அவனுக்கு.

அவர் அடிக்குரலில் மூச்சுவிடாது பேசினார். எல்லாவற்றையும் கவனமாகக் கேட்ட வைரவன் நெஞ்சு பயத்திலே பதறியது.

''எஜமான்! நான் ஒரு தபா திருடியிருக்கிறேன். ஒத்துக்கிறேன். அதுக்காக இந்த காரியத்தை நான் எப்படி செய்ய முடியும்? என்னை வற்புறுத்தி பயங்காட்டுகிறது நியாயமா? யோசித்துப் பாருங்க ஐயா'' குமுறினான் அச்சத்துடன்.

''நியாயம் அநியாயம் இதெல்லாம் தர்க்கிக்க உன்னை நான் இங்கே கூப்பிடலை... வர வெள்கிக்கிழமை தமயந்தியின் பிறந்த நாள். அது ஒரு முகூர்த்த நாள் கூட. செய்கிறதை மங்களமாகவே செய்து முடிக்கணும்னு ஆசை. அதனாலே நீ வாயைத் திறக்கக்கூடாது. மூச்சு விட்டியோ உன்னை என் கையாலே வெட்டிப் புதைச் சுடுவேன். உனக்கு என்னை நல்லாத் தெரியும். கொலைக்கும் நான் பயப்படாதவன். அதனாலே அதை செய்து முடிக்கணும்.''

''அந்த குழந்தைக்கு ஏன் இத்தனை பெரிய தண்டனை அது செய்த குற்றம்?''

''எனக்கு மனைவியாக வேண்டியவள். இன்னொருத் தனை காதலிப்பதாகத் திமிராப் பேசின குற்றம். அவள் என் அனார்கலி... அதனால் இந்தத் தண்டனை... இதைப் பத்தி என்னிடம் விவரம் கேட்க உனக்கு எந்தத் தகுதியும் கிடையாது. நீ என் வீட்டு சொத்தைத் தின்னுட்டு கிடக்கும்

https://telegram.me/aedahamlibrary



ஒரு வேலைக்கார நாய். இதிலே ஏதாவது தப்பு பண்ணினியோ வைர அட்டிகை கேஸ் - கொலைக் கேஸ் இரண்டும் உன் தலையில் விழும். என்னாலே அப்படி ஜோடிக்க முடியும். பணம் வெகுதூரம் போகும் தெரியாதா? ... இந்த ஊரில் எந்தப் பயல் எனக்கு எதிரா சாட்சி சொல்வான்? சொல்லிட்டு உசிரோட இருப்பானா?'' உறுமினார் புலியாக.

வைரவன் நாவும் தொண்டையும் அச்சத்திலே உலர்ந்து போயின.

''இதுவரை நான் ஒரு கோழியைக் கூட அறுத்த தில்லீங்க... எலியைக்கூட அடிக்க மாட்டேன். பிடிச்சு கூட்டை திறந்து அப்பாலே கொண்டு விட்டுவிடுவேன்.

''மூட்டைப் பூச்சியையும் - கொசுவையும் கூடவா நீ கொன்னதில்லை?'' அவர் கோபமாகச் சிரித்தார்.

''இது பெரிய விஷயமாச்சே...?''

''என் வரைக்கும் கொசுவும் மூட்டைப் பூச்சியைப் போலத்தான். நசுக்கப்பட வேண்டிய விஷயம். என்ன பதிலைக் காணோம்? வெள்ளிக்கிழமை ராத்திரி காரியத்தை முடிச்சுடணும். இந்த வீட்டிலே அப்போ உன்னையும் என்னையும் தவிர யாரும் இருக்க மாட்டாங்க.''

''பூஜையறையில் முருகன் உட்கார்ந்திருக்கிறாரே... சொல்ல வேண்டும் போல் தோன்றியது. ஆனால் துணிவிருக்கவில்லை.

''சரிதான் போ. முதல்லே அந்த பொண்ணுக்கு நல்ல சோறு போடு. கொஞ்சம் கவனிச்சுக்கோ. ஆட்டை நல்லா கொழுக்கவச்சுத்தானே பின்னாலே வெட்டறோம். அதுபோல அவளுக்கு கொஞ்சம்கூட சந்தேகம் வரக்கூடாது. அந்தப் பயலுக்கு எதுவும் தெரியக்கூடாது. காரியம் தப்பா போச்சோ

https://telegram.me/aedahamlibrary



உன்னை நான் தீர்த்துக் கட்டிடுவேன் - மறக்காதே'' அடிக் குரலில் கர்ஜித்தார் நெருப்புக் கண்களால் உருட்டிப் பார்த்தார்.

''அப்படியே செய்றேனுங்க. நான் உங்க அடிமை. என்னை போலீசிலே மாட்டி விட்டுடாதீங்க. இந்த வயசிலே ஜெயிலுக்குப் போக எனக்கு உடம்பிலே தெம்பில் லீங்க. எஜமான் உங்க உப்பைத் தின்னு உங்களையே நம்பிக்கிட்டுக் கிடக்கிற நாய்தானுங்க நான்... அதனாலே என்னைக் காட்டிக் குடுத்திடாதீங்க - ஒப்புக்கிறேன். இது பத்தி மூச்சுவிட மாட்டேன்...'' கெஞ்சிக் கொண்டு அவரது பாதங்களைப் பற்றினான்.

''காலை விடுடா கழுதை... சொன்னதை விடு விடுன்னு கவனி - நாள் ரொம்ப இல்லை...'' தம் பாதங்களை அவனது பிடியினின்று விடுக்கென்று வெறுப்புடன் இழுத்துக் கொண்டார்.

மெல்லத் தள்ளாடிக் கொண்டு வெளியே வந்தான் வைரவன். மறுநாள் காலை தமயந்தியைக் கூப்பிட்டனுப் பினார் தேவநாதன். பயந்து நடுங்கிக்கொண்டு அவள் வைரவன் முகத்தைப் பார்த்தாள்.

''போம்மா! ஐயா ரொம்ப மனசு மாறியிருக்கிறாப் போல எனக்குப்படுகிறது. கவலைப்படாதே - நீ நித்திக்கும் கும்பிடற முருகன் உனக்குத் துணையாக இருக்காரும்மா.'' தைரியம் கொடுத்தான்.

சோபாவிலே காலை நீட்டிக் கொண்டு உல்லாசமாகச் ாய்ந்து கொண்டிருந்தார் தேவநாதன்.

அவளை ஏற இறங்க ஒருமுறை பார்த்தார்.

''நடந்ததையெல்லாம் மறந்திடு. எனக்கு புத்தி வந்து விட்டது.....''

https://telegram.me/aedahamlibrary



"என்ன சொல்றீங்க சித்தப்பா..." வியப்புடன் அவள் விழித்தாள்.

"என்ன இருந்தாலும் நான் வயசானவன். நீயோ பருவப் பொண்ணு. எனக்கும் உனக்கும் எப்படிப் பொருந்தும்? பலவந்தப்படுத்தி உன்னைக் கல்யாணம் செய்து கொண்டா வாழ்க்கை ரொம்ப அசிங்கமாயிடும்... எல்லாத்தையும் ஆர அமர யோசிச்சேன். நீ விரும்பியவனை உனக்கு கல்யாணம் செய்து கொடுத்து உன்னை வெளியே அனுப்பி விடுகிறதுன்னு முடிவு, சரிதானே? இப்போ சந்தோஷமா...? மீசையைத் தடவிக் கொண்டார்.

தமயந்திக்கு வியப்புத் தாளவில்லை.

"உண்மையாகவா சித்தப்பா?" கண்கள் கலங்க, நாத்தடுமாறக் கேட்டாள்.

"பொய் சொல்லவா உன்னைக் கூப்பிட்டனுப்பினேன். என்னவோ வளர்த்த பாசம் உன்னை வாடாது வாழ வைக்கணும்னு ஒரே ஆசை - அதனாலே ஏற்பட்ட ஆத்திரம் அடிச்சேன். மன்னிச்சுக்கோ - ஆனால் ஒண்ணு....

"என்ன சித்தப்பா?"

"நீ கட்டின புடவையோட புறப்பட்டு போகிறேன்னு சம்மதிச்சிருக்கே. இந்த வீடு நிலம் எல்லாத்தையும் எனக்குப் பின்னாலே தர்மத்துக்கு எழுதி வைக்கப் போகிறேன்."

"உங்க சொத்து இவைகள் - உங்க இஷ்டப்படி நீங்க எது வேண்டுமானாலும் செய்யலாம். அதில் தலையிட எனக்கென்ன உரிமை சித்தப்பா? என்னை அவருக்குக் கல்யாணம் செய்து வைத்து உங்கள் வாயினால் வாழ்த்தினால் போதும். வேறு ஒண்ணும் உங்ககிட்டேயிருந்து நாங்க எதிர்பார்க்கவே மாட்டோம். என்னைப் படிக்க வச்சு ஆளாக்கி

https://telegram.me/aedahamlibrary



- நல்ல கணவனிடம் ஒப்படைச்சதுக்கு கால முச்சூடும் உங்களுக்கு நான் நன்றி சொல்லி வாழ்த்திகிட்டே யிருப்பேன்'' உணர்ச்சி வசப்பட்டு தமயந்தி கீழே விழுந்து அவரைக் கும்பிட்டாள்.

''எழுந்திரு, இதெல்லாம் என்னத்துக்கு? போய் முகத்தைக் கழுவி பொட்டுவச்சு தலையை நல்லா சீவி சிங்காரிச்சுக்கோ. நல்லா சாப்பிடு. நல்லா தூங்கு. நான் இந்த சுப சேதியை சிவநேசனுக்கும் சொல்லப்பேறேன். முதல்லே நமக்குள்ளே விஷயம் இருக்கட்டும். அதற் குள்ளே ஊரில் பரவினால் பலர் என்னைப் பலவிதமாகப் பேசுவாங்க... புரிகிறதா?''

''சரி சித்தப்பா'' அவள் மகிழ்ச்சியுடன் தலையை ஆட்டினாள்.

''இந்த சுப சேதியை சிவநேசனுக்கும் சொல்லப் போறேன். முதல்லே நமக்குள்ளே விஷயம் இருக்கட்டும். அதற்குள்ளே ஊரில் பரவினால் பலர் என்னைப் பலவிதமாகப் பேசுவாங்க... புரிகிறதா?''

''சரி சித்தப்பா'' அவள் மகிழ்ச்சியுடன் தலையை ஆட்டினாள்.

''போன வருஷம் திருச்சியிலிருந்து ஸ்டீல் பாத்திரக் கடை சுந்தரம் தன் மகனுக்கு உன்னைக் கேட்டார். செவ்வாய்ப்பேட்டை சதாசிவம் தன் தங்கை மகனுக்கு உன்னைக் கேட்டார். நான் இவங்களையெல்லாம் தட்டிக் கழிச்சுவிட்டிருக்கிறேன். இப்போ ஒரு கணக்கனுக்கு உன்னைக் கட்டிக் கொடுப்பதைக் கேட்டால் இவர்கள் என்னை ரொம்ப கேவலமாகப் பேசுவார்கள். அதனாலே முதல்லே நமக்குள்ளே ஒரு சின்ன நிச்சயதார்த்த வைபவத்தை வீட்டோட செய்து முடிக்கப் போகிறேன்.''

https://telegram.me/aedahamlibrary



அவள் மவுனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள், மகிழ்ச்சியுடன்.

“பிறகு மெதுவா ஊரிலே பெரிய மனிதரான பஞ்சாயத்து தலைவரிடம் கிசுகிசுப்பேன். காதல் கல்யாணம்... அவர் என்ன செய்வார். பெண் ஆசைப்பட்டாள். ஒப்புக் கொள்ள வேண்டி வந்துவிட்டது என்ற விஷயம் வேறு விதமாகப் பரவிவிடும். பெண்ணைக் கொடுக்க மறுத்தேன் என்பதற்காக திருச்சி - செவ்வாய்ப்பேட்டை ஆசாமிகள் என் மேல் காரம் வைக்க மாட்டார்கள். விளங்குகிறதா?”

“புரிகிறது சித்தப்பா... உங்களுக்கு மிக்க நன்றி... நான் வாழ்நாள் முழுவதும் இந்த உதவியை மறக்கவே மாட்டேன்” சந்தோஷம் பிடிபடாமல் அவள் மாடிப்படிகள் மீது துள்ளிக் கொண்டு இறங்கினாள்.

சமையலறைக்குள் மூச்சிறைக்க வந்தாள். “தாத்தா! ஒரு ஆச்சரியமான சேதி. சித்தப்பா முடிவில் ஒப்புக் கொண்டு விட்டார். எனக்கும் சிவநேசனுக்கும் கல்யாணம் நடக்கப் போகிறது. வர வெள்ளிக்கிழமை நம் வீட்டில் ஒரு சின்ன நிச்சயதார்த்த விழா” ஆர்ப்பரித்து கையைக் கொட்டிக் கொண்டு அவள் அறைக்குள்ளே சுற்றி வளைய வந்து விளையாடினாள். மகிழ்ச்சியில் பொங்கிப் பூரித்துப் போய்விட்டிருந்தாள்.

வைரவன் மனது பாராங்கல்லாக வேதனையில் கனத்தது. வெள்ளிக்கிழமை காலை வைரவனுக்கு மூச்சுவிடக் கூட நேரமின்றி வேலைகள் இருந்தன. ஸ்நானத்தை முடித்ததும் தமயந்தியுடன் தேவநாதன் கோவிலுக்குப் புறப்பட்டார்.

சந்தேகம் ஏதுமின்றி அவள் முன்போல் அவருடன் காரில் ஏறிக்கொண்டு தனியேதான் சென்றாள். அவளது

https://telegram.me/aedahamlibrary



பிறந்த நாளை ஒட்டிக் கோவிலில் அபிஷேக ஆராதனைக்கு முதல் நாளே பலத்த ஏற்பாடுகள் செய்திருந்தார். கோவிலி லிருந்து அவர்கள் திரும்பி வருவதற்குள் காலை ஒன்பது மணியாகிவிட்டது.

அதற்கு மேல் தான் அவர்கள் காபி பலகாரம் சாப்பிட்டார்கள். இரவு நடக்கவிருந்த வைபவத்திற்கு விருந்து தயாரித்துக் கொண்டிருந்தான் வைரவன். சமையலறையை விட்டு அசைய முடியாத நிலை. அதனால் தமயந்தியே அவருக்குக் காப்பி பலகாரம் கொடுத்து உபசரித்தாள். பகல் உணவையும் அவளே அவருக்குப் பரிமாறினாள்.

''அடுத்த பிறந்தநாளின் போது நீ எங்கேயோ - நான் எங்கேயோ. அதனாலே இன்னிக்காவது உன் கையால் சாப்பிடக் கொடுத்து வச்சிருக்கேனே... அது போதும்...'' அவர் புகழ்ந்தார்.

உணவுக்குப் பின் மாடி அறைக்குள் விரைந்தார் அவர். சிறிது பொழுதில் கையில் ஒரு நீல வெல்வெட் பெட்டியுடன் கீழே இறங்கி வந்தார்.

''அன்னிக்கு என்னவோ அப்படி வைராக்யமா பேசிட்டேன். ஆனால் வளர்த்த பாசம் என் மனசை அலட்டிக் குலைக்கிறது. உன் பிறந்தநாளின் போதெல்லாம் ஒவ்வொரு தடவையும் நான் ஏதாவது பரிசு உனக்கு கொடுப்பது வழக்கம். இன்னிக்கு அது ஒரு விசேஷ நாளாகி விட்டதாலே உனக்கு இந்த பரிசைக் கொடுக்க ஆசைப்படுகிறேன். நேத்தே பாங்கியிலிருந்து உனக்காகக் கொண்டு வந்து வச்சிருக்கேன். இந்தா.....'' என்று அவளிடம் பெட்டியைக் கொடுத்தார்.

ஆவலுடன் அதைத் திறந்த தமயந்திக்கு தூக்கி வாரிப் போட்டது. கண்கள் விரிய ''சித்தப்பா'' என்று வியப்புடன் கூவிவிட்டாள்.

https://telegram.me/aedahamlibrary



பெட்டிக்குள் நீல ஒளியை கக்கிய வைர அட்டிகையும் ஒரு ஜோடி வைர வளைகளும் ஒரு ஜதைக் கம்மலும் இருந்தன.இத்தனை பெரிய பரிசா? ''சித்தப்பா... நீங்க காட்டுகிற அன்பு ஒண்ணே போதுமே... இதையெல்லாம் போட்டுக்க எனக்கு என்ன தகுதி சித்தப்பா '' மறுபடியும் வியப்புடன் அவைகளைப் பார்த்தாள்.

''இன்னும் எத்தனையோ போட்டுக்கிற தகுதி உனக்கு இருக்கும்மா... ஆசையோடு கொடுக்கிறேன். பூட்டிக்கொள்'' மெல்லியதாகப் புன்முறுவலித்தார்.

''வைரவா, குழந்தைக்கு என்ன கொடுத்திருக்கேன்னு வந்து பாரேன்.''

''போம்மா தமயந்தி... போய்ப் பட்டுப் புடவை ஒண்ணை கட்டிக்கிட்டு இதையெல்லாம் போட்டுட்டு வா. எப்படி இருக்கேன்னு பார்க்கலாம்.'' வைரவன், அந்தப் பெட்டிக்குள் இருந்த நகைகளை அதிசயமாக உற்றுப் பார்த்தான்.

அந்த அட்டிகையை வைத்துக் கொண்டுதான் அவர் அவனை இரண்டு தினங்களுக்கு முன்னர் பயமுறுத்தினார். இப்போது அதை தமயந்திக்கு பரிசாகக் கொடுக்கிறார். என்ன நாடகம் இது? ஆமாம் இவைகள் காலஞ் சென்ற பார்வதி அம்மாளின் நகைகளாச்சே? மண்டையைக் குழப்பிக் கொண்டான் அவன்.

மாலை மங்கி இருள் பரவிக் கொண்டு நிகழ்ச்சி நடக்க வேண்டிய நேரம் நெருங்கத் தொடங்கியதும் வைரவன் வயிற்றிலே ஒரு பயங்கர உணர்வு குடலை முறுக்கியது.

இந்தப் பழிகாரன் இன்னும் என்னென்ன செய்யப் போகிறானோ? ஊகிக்க முடியலையே? என்று உள்ளூர அவனுக்கு ஒரு தவிப்பு. வேதனையும் துக்கமும்

https://telegram.me/aedahamlibrary



உள்ளத்தைக் கொத்திப் பிடுங்க - கால்கள் பின்ன - கைகள் நடுங்க அவன் வீட்டிற்குள் பீதியுடன் வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தான்.

இரவு ஏழு மணி அளவில் சிவநேசன் வந்தான். அவனுக்காக தோட்டத்து கேட்டும் -வாயிற்கதவும் திறந்து வைக்கப்பட்டிருந்தன. சுத்தமாக உடுத்தி கொண்டு களை கட்டிய மலர்ந்த முகத்துடன் உள்ளே வந்து தேவ நாதனை வணங்கினான்.

மயில் கழுத்து காஞ்சிபுரம் பட்டுசேலையும், வைர அட்டிகையுமாக தகதகத்த தமயந்தியைக் கடைக் கண்ணால் பார்த்து பூரித்துப் போனான்.

''உண்மையா, இது, அல்லது கனவா?'' என்ற திகைப்பு அவனுக்கு. தட்டுகள் - டம்ளர்கள் - கிண்ணங்கள் என்று வீட்டிலிருந்த சாப்பாட்டு மேஜை மீது அலங்காரமாக பரப்பி வைத்திருந்தான் வைரவன்.

சமையலறையிலிருந்து எழுந்த உணவுகளின் வாசம் மூக்கைத் தூக்கவே மெல்ல அந்தப் பக்கம் பார்த்தான் சிவநேசன். தேவநாதன் கையைக் கொட்டி வேடிக்கையாகச் சிரித்தார்.

''மாப்பிள்ளைக்கு பசி போல இருக்கு வைரவா எல்லாம் ரெடியா?'' குரல் கொடுத்தார்.

முகத்திலே வழிந்த வியர்வையைத் துண்டால் ஒத்திக் கொண்டான் வைரவன். அவன் மார்பு அச்சத்திலே அதிவேகமாகத் துடித்தது. ஆபத்து ஆரம்பிக்கப் போகிறதே என்ற பயத்தில் கால்கள் தடுமாறின.

''அந்த தட்டுகளை எடுத்துவா... தேவநாதன் கம்பீரமாக உத்தரவிட்டார்.

https://telegram.me/aedahamlibrary



வெற்றிலை பாக்குப் பழங்களுடன் புது வேட்டி அங்க வஸ்திரம் வைத்திருந்த தட்டை தூக்கமாட்டாது சுமந்து கொண்டு வந்தான்.

"இந்தாங்க மாப்பிள்ளை இது என் பரிசு உடுத்திட்டு வாங்கோ" என்று கூறியபடி சிவநேசனிடம் தட்டைக் கொடுத்தார்.

மிகவும் பணிவுடன் இரு கைகளையும் நீட்டி வாங்கிக் கொண்டு நன்றி தெரிவித்தான் அவன்.

"இந்தாம்மா உனக்கு" என்று பட்டுப்புடவை, ரவிக்கைத் துண்டு முதலியவைகள் வைக்கப்பட்டிருந்த இன்னொரு தட்டை தமயந்தியிடம் கொடுத்தார்.

"சீக்கிரம் உடுத்திட்டு வாங்க...மாப்பிள்ளை பசியாக இருக்கிறார்" என்றார். தமயந்தி தன் அறைக்குள் புகுந்து அவர் கொடுத்த நீல வண்ண காசிப்பட்டை பொருத்தமான ரவிக்கையோடு அணிந்து கொண்டாள். சிவநேசன் புது வேட்டியும், அங்கவஸ்திரமும் தரித்து வாசல் அறையினின்று வெளிப்பட்டான்.

"இரண்டு பேரும் அப்படியே போய் பூஜையறையில் முருகனை வணங்கிட்டு வாங்க, பிறகு சாப்பிடுவோம்' அன்பாகக் குழைந்தார்.

இருவரும் ஜோடியாக முருகனை விழுந்து கும்பிட்டு விட்டு மகிழ்ச்சியுடன் வெளிவந்தபோது வைரவன் கண் கொட்டாது அவர்களை பார்த்தான். தமயந்தி அந்த நீலப் புடவையில்-வைர அட்டிகை மின்ன கண்பட்டுவிடும் போன்ற கொள்ளை அழகோடு திகழ்ந்தாள். சிவநேசனும் எத்தனை அழகாக அவளுக்குப் பொருத்தமானவனாக இருக்கிறான்.

https://telegram.me/aedahamlibrary



“இந்த அழகு ஜோடியரை இந்த பாவி என்ன கோலம் செய்யப் போகிறான்?” நெஞ்சு வெடித்துவிடும் போல் விம்மியது. மகிழ்ச்சியோடு அவர் காட்டிய ஆசனங்களில் சாப்பிட இருவரும் உட்கார்ந்தனர்.

தட்டுகளில் உணவைப் பரிமாறிய வைரவனுக்கு கைகள் ஆடின. தவறிப் போய் சூடான குழம்பை ஒரு கரண்டி எஜமான் கை மீதுகூட ஊற்றிவிட்டான். வழக்கம் போல் அவர் கூச்சலிட்டுக் கொண்டு கையை ஓங்கி அவனை அடிக்க வரவில்லை. பற்கள் அனைத்தையும் காட்டி மெல்லியதாக சிரித்தார்.

“வைரவன் தாத்தாவுக்குத்தான் என்னைவிட இதில் ரெம்ப சந்தோஷம். தமயந்தியை எடுத்து வளர்த்த வராச்சே அந்த பாசத்தின் பதட்டம்! கையும் காலும் நிலை கொள்ளாமல் தள்ளாடுகிறார் பாவம்!” கபடமாகச் சிரித்தார். அடுத்து என்ன நடக்குமோ என்றதொரு பயங்கர எதிர்பார்ப்பில் வைரவன் ஒவ்வொரு வினாடியும் அச்சத்திலே மருண்டு கொண்டிருந்தான்.

“மோருக்குப் பின் கடைசியாக பாயசத்தைச் சாப்பிட்டால் அடுத்த ஜன்மத்தில் ராஜயோகம் கிட்டுமாம். இந்த பிறந்த நாளின் நினைவு எப்பவும் இனிப்பாகவே இருக்கட்டும். பாயசத்தை மறந்துட்டிங்களே சாப்பிடுங்கள்... இடது கையால் விளிம்புவரை வழிய வைத்திருந்த பாயசக் கிண்ணங்களை அவர்கள் பக்கம் நகர்த்தினார்.

ஒருவரையொருவர் ஆசையுடன் பார்த்து முறுவலித்துக் கொண்டு இருவரும் பாயசத்தை பருகினர். எழுந்து கைகளைக் கழுவிக் கொண்டு வெற்றிலை பாக்கை சுவைத்த வண்ணம் முன் அறைக்கு வந்தனர்.

“வைரவா இங்கே வா... இன்னும் ஒரு முக்கிய நிகழ்ச்சி நீ பார்க்க வேண்டாமா?” அதட்டலாக அழைத்தார் தேவநாதன். அவன் விரைந்தோடி அங்கே வந்தான்.

https://telegram.me/aedahamlibrary



''சிவநேசன் கழுத்தில் நீ இந்த மாலையைப் போடு. அப்படியே இந்த வைர மோதிரத்தை அவன் விரலில் போட்டுடு. மோதிரம் மாப்பிள்ளைக்கு என் பரிசு... சொல்லிக் கொண்டே சட்டைப் பையிலிருந்த ஒரு விலை உயர்ந்த வைர மோதிரத்தை அவனிடம் கொடுத்தார்.

தமயந்திக்கு பிரமிப்புக்கு மேல் பிரமிப்பு. ''எத்தனை தாராளம் இந்த சித்தப்பா.'' வியப்பில் கண்கள் மலர வெட்கத்தில் முகம் சிவக்க பெரிய மல்லிகை மாலையை எடுத்து சிவநேசன் கழுத்தில் போட்டாள். அவனது இடது கரத்தைப் பிடித்து மோதிரத்தை அணிவித்தாள்.

''தாங்க்யூ அங்கிள்''... என்று கண்கள் பளபளக்க அவரைப் பார்த்து முறுவலித்தாள்.

''நீ இப்போ தமயந்தி கழுத்தில் இந்த மாலையை எடுத்துப் போடு. நாங்கள் எல்லாம் பார்க்க துடிச்சிட்டு நிற்கிறோம்'' பரிகாசம் செய்தார் அவர். சிவநேசனும் அவர் கொடுத்த ஒரு மல்லிகை மாலையை எடுத்து அவள் கழுத்தில் போட்டுவிட்டு அன்போடு அவளைப் பார்த்தான்.

''இப்படி சோபாவில் அருகருகே உட்காருங்கள்... அவர்கள் அமர்ந்தனர்.

காய்ந்து போன உதடுகளை நாவால் தடவிக்கொண்டு கிலியுடன் நின்று கொண்டிருந்தான் வைரவன். உண்மையில் மணப் பந்தலில் உட்கார்ந்திருக்கும் மணமக்கள் போல் அவர்கள் இருவரும் புதிய ஆடையில் மாலையும் கழுத்துமாக அழகாக இருந்தனர்.

''இணைபிரியாத சிட்டுக் குருவிகள் போன்ற இவர்களை இந்த பாவி... இதற்குமேல் வைரவனால் சிந்திக்கவே முடியவில்லை.

https://telegram.me/aedahamlibrary



''சித்தப்பா தலையை சுத்துகிறதே மயக்கமா இருக்கிறதே...?'' தமயந்தியின் வாய் குழறியது. கண்கள் சொருகின-அப்படியே துவண்டு சோபா மீது சாய்ந்து விட்டாள்.

''என்னம்மா கொழந்தே...'' பதறிக் கொண்டு வைரவன் அருகில் வருவதற்குள் தொப்பென்று கம்பள விரிப்பின் மீது சிவநேசன் மயக்கமாக குப்புற விழுந்து விட்டான்.

அதிர்ந்து போன வைரவன் பேசத் தோன்றாது விழித்தான்... ''பாவிப்பயல் கொன்னுட்டானே - மருந்துக் கடையிலிருந்து விஷத்தை கொண்டு வந்து எப்படி எதில் போட்டான் சண்டாளன்?''

''என்னடா முழிச்சிட்டு நிக்குறே... கதவைத் திறக்கிறேன். ஒவ்வொருத்தரா தூக்கிட்டு வா-முதல்லே மாப்பிள்ளையை அவன் பிணமாக கனக்கிறான். தூக்க முடியலைன்னா. தர தரன்னு இழுத்துட்டு வா... மேலே சிராய்ச்சா குற்றமில்லை...? செத்துப் போயிட்டாங்கன்னு தானே கவலைப்படறே? அப்படி சுலபமா செத்து விடறதை நான் விரும்பலையே?''

''முருகனை வணங்கப் போனபோது நீ உள்ளே குழம்பு எடுத்து வரப் போயிருந்தியே அப்போ நான் பாயசக் கிண்ணத்திலே தூக்க மருந்தை அளவோடு போட்டு கலக்கி வச்சுட்டேன். தேன் குடிச்ச நரி மாதிரி காதல் மயக்கத்திலிருந்த ரெண்டு பேருக்கும் பாயசத்தின் ருசி மாறியிருந்தது கூடத் தெரியலை. குடிச்சுட்டாங்க மயங்கி விட்டாங்க. ராத்திரி முழுதும் நல்லா தூங்கு வாங்க விடிஞ்சு எழுந்த பிறகுதான் கதையே வேறாக இருக்கப் போகிறது. மத்ததெல்லாம் அங்கே நான் சொன்னபடி தயாராகத்தானே வச்சிருக்கே...?'' அதட்டினார் அவர்.

https://telegram.me/aedahamlibrary



''கோவிலுக்கு நீங்க போயிருந்தப்போ சட்டியில் சோறும், பீங்கான் கிண்ணத்தில் தண்ணீரும் கொண்டு வச்சுட்டு வந்தேன்,'' சட்டைப் பையிலிருந்த சாவிக் கொத்தை எடுத்து ஒரு சாவியைத் தேடி கையில் பிடித்துக் கொண்டார்.

மயங்கிக் கிடந்த சிவநேசனை அள்ளித் தோளில் போட்டுக்கொண்டு சுமக்க அவனுக்கு சிரமமாகத் தானிருந்தது. பின்கட்டுத் தாழ்வாரத்தைத் தாண்டி அங்கிருந்த ஒரு பெரிய அறைக்குள் வந்தனர். பழைய சாமான்கள் நிறைந்த ஒரு தூசி படிந்த அறை அது. பலகைகள்-ஷட்டர்கள் உத்திரங்கள் என்று பல பொருட்கள் குவிந்து கிடந்தன. அவற்றைப் புரட்டி அவன் காலையிலேயே அங்கே வழி செய்து வைத்திருந்தான். அலமாரிபோல் தென்பட்ட ஒரு கதவை அவர் சாவி போட்டுத் திறந்தார், உள்ளே இறங்கிச் செல்ல பல படிகள் தென்பட்டன. விளக்கில்லாததால் ஒரே இருட்டு.

டார்ச் விளக்கை சுழற்றிக் கொண்டு படிகளில் அவர் இறங்க, பின்னால் அவன் சென்றான். கொஞ்ச தூரம் சென்றதும் தாழ்வராம் போன்றதொரு கூடம்-அதைக் கடந்ததும் இன்னொரு கதவு அதையும் சாவி போட்டுத் திறந்தார், குப்பென்று மக்கல் நாற்றம் முகத்தில் மோதியது. பல நாள் பெருக்காது கவனிக்கப்படாது புறக்கணிக்கப்பட்ட ஒரு பாதாள அறை அது.

''மாப்பிள்ளையைத் தரையில் போடு போய் அவளையும் தூக்கிட்டு வா விளக்குக் காட்றேன் மாலையும் புதுத் துணிகளும் அப்படியே இருக்கட்டும், மணக் கோலத்தோட பிணக்கோலத்திற்குப் போகட்டும்... பட்டினி கிடந்து செத்தாலும் ரெண்டு பேரும் சேர்ந்து சாவோம்னு சவால் விட்டாளே சாகட்டும்'' சிரித்தார் தேவநாதன். தட்டுத்

https://telegram.me/aedahamlibrary



தடுமாறிக் கொண்டு தமயந்தியையும் தூக்கிக் கொண்டு வந்து சிவநேசன் அருகே கிடத்தினான் வைரவன்.

''பார்-கடைசியாக உன் பேத்தியையும் அவள் தேர்ந் தெடுத்திருக்கிற மாப்பிள்ளையையும் பார்த்துக்கோ, பிறகு எப்போ பார்க்கப் போறே?'' இகழ்ச்சியாக முறுவலித்த அவர் டார்ச் விளக்கொளியை அவர்கள் முகத்தின் மீது சுழற்றினார். திடீரென்று வைரவன் தாங்கமாட்டாத துயரத்தில் குலுங்கக் குலுங்க அழுதான்.

அந்த நிலையிலும் கொள்ளை அழகுடன் உறங்கிக் கொண்டிருந்த தமயந்தியைப் பார்த்ததும் அவன் மனம் பதறிப் போய்விட்டது.

''ஐயா!... பேச முடியாது திணறினான். தேவநாதனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ஓங்கி தன் கை முஷ்டியால் அவன் முதுகில் ஒரு குத்துவிட்டார்.

''ஐயோ'' என்று வலி தாங்காத அவன், அலறி விட்டான்.

'பார்த்தாச்சா-பிறகு புறப்பட வேண்டியதுதானே? ஒப்பாரி வைக்கிறாயா மடையா! பட்டினி-பசி, காற்று இல்லாது பத்தே நாளில் இரண்டு பேரும் பரலோகம் போயிடுவாங்க - அணு அணுவா வேதனைப்பட்டு செத்துப் போவாங்க சாகட்டும். இங்கிருந்து எத்தனை சத்தம் போட்டாலும் யாருக்கும் கேட்காது. இரண்டு கதவுகளைத் தாண்டிக் கொண்டு இருட்டிலே எப்படி தப்பிச்சு வெளியே வருவாங்க. இந்த தேவநாதன் யார்னு கடைசி நிமிஷத்திலே தமயந்தி புரிஞ்சுக்குவா-அகங்காரி'' நெருப்பை கக்கினார். வைரவன் வாயைத் திறக்கவில்லை.

''மடையா... அவன் கையிலிருக்கும் மோதிரத்தையும், அவள் கழுத்து-கை-காதிலிருக்கும் நகைகளையெல்லாம்

https://telegram.me/aedahamlibrary



சீக்கிரம் கழற்று. எத்தனை நேரம் இங்கே நிற்பது - எனக்கு மூச்சடைக்கிறது. புதுத் துணி, மாலை இவைகளை விட்டு விடு. அதோட போகட்டும் இரண்டு பேரும்'' விகாரமாக சிரித்தார்.

வைரவன் அவசரமாக நகைகளைக் களைந்தான், எல்லாவற்றையும் அவரிடம் பத்திரமாகக் கொடுத்தான்.

''சரி கிளம்பு இன்னும் என்ன இருக்கு பார்க்க? பிணத்தை வைச்சதும் திரும்பிப் பார்க்காம சுடுகாட்டிலே நடக்கிறாப்பலே போ மேலே... இவங்க இனிமேலே பிணந்தான்'' குரூரமாகச் சிரித்தார்

இந்த மனிதனுக்குக் கட்டாயம் பைத்தியம் பிடித்தி ருக்கிறது. இல்லாவிட்டால் இப்படி ஒரு வெறி ஏற்படுமா? எண்ணி வெகுண்ட வைரவன் மெல்ல மேலே ஏறி வந்தான். முதல் கதவைப் பூட்டிவிட்டு தேவநாதன் நடந்தார். மேலே வந்து இரண்டாவது கதவையும் பூட்டிவிட்டு சாவிக் கொத்தை செல்லமாகக் குலுக்கி தம் பையில் போட்டுக் கொண்டார்.

முன்போல் பலகை-உத்திரங்கள் எல்லாவற்றையும் நகர்த்தி அலமாரி போன்ற அமைப்பை மூடி மறைத்தான் வைரவன். நேரே தேவநாதன் குளியலறைக்குள் புகுந்து நன்றாக ஸ்நானம் செய்துவிட்டு வேறு உடுத்திக் கொண்டார்.

இங்குமங்கும் உதிர்ந்து கிடந்த பூக்களை அள்ளிக் குப்பைக் கூடையில் போட்டான் அவன். அவர் சொற்படி தமயந்தியின் அறைக்குள் புகுந்து பீரோவைத் திறந்து அவள் புடவைத் துணிகளை வாரி கலைத்துப் போட்டான். அழுக்காகிவிட்ட தன் துணிகளையும்-எஜமான் துணி களையும் வேலைக்காரிக்கு தெரியாதிருக்க சோப்பு போட்டு துவைத்து கொடியில் காயப்போட்டான். பின்னர் தானும் குளித்துகிட்டு வேறு உடுத்திக் கொண்டான்.

https://telegram.me/aedahamlibrary



சமயலறைக்குள் புகுந்து எல்லாவற்றையும் ஒழுங்கு செய்யத் தொடங்கினான்.

''மீதி சாப்பாட்டையெல்லாம் குப்பை தொட்டியிலோ அல்லது சாக்கடையிலோ கொட்டிவிடு. விருந்து நடந்த சங்கதி வேலைக்காரிக்குத் தெரியக்கூடாது'' அவர் உத்தரவு.

''தலை முழுகியாச்சு இனிமேல் நிம்மதியாகத் தூங்கலாம். மற்றவைகளை நாளைக்கு நான் கவனிச்சுக்கிறேன்... வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டே அவர் மாடிப் படிகளில் அமைதியாக ஏறி கொஞ்சமும் அஞ்சாது தமது படுக்கையில் போய் விழுந்தார்.

இந்த பயங்கர அனுபவத்திற்கு பின்னர் வெகு நேரம் வைரவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

அடுத்த நாள் சிறிது பொழுதில் ஊர் முழுவதும் செய்தி பரவிவிட்டது. அந்தப் பெருமையும் அவருடையதாகவே இருந்தது. பஞ்சாயத்துத் தலைவரை வரவழைத்து ஓவென்று அலறி அவரைக் கட்டிக் கொண்டு கண்ணீர் வடித்தார்.

''தமயந்தி என் கடைக் கணக்கனுடன் ஓடி என்னை அவமானப்படுத்தி விட்டாளே? எப்படி நான் இனி உயிர் வாழ்வேன்?'' புலம்பித் தீர்த்தார்.

பஞ்சாயத்து நாயகர் ஆறுதல்கள் பல சொல்லி சமாதானப்படுத்தினார், அவர் தமது படைகளுக்கு விஷயத்தை ரகசியமாகச் சொல்ல அவர்கள் மற்றவர்களிடம் கிசுகிசுக்க கால் தலை வாலுடன் சங்கதி புது உருவத்தோடு நெருப்பாகப் பரவியது.

சிறிது பொழுது சென்றதும் காரை எடுத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷன்வரை போய்விட்டு விரக்தியாகத் திரும்பி வந்தார் தேவநாதன்.

https://telegram.me/aedahamlibrary



''வைரவா தமயந்தி- மேஜர் தன் இஷ்டப்பட்டவனுடன் கிளம்பிப் போய் பதிவுத் திருமணம் செய்து கொண்டால் அதைத் தடுக்க நமக்கோ சட்டத்துக்கோ உரிமையில்லை யாம். நம் வீட்டில் ஏதாவது திருடிக் கொண்டு போயிருந்தால் நடவடிக்கை எடுக்க முடியுமாம். என்ன செய்வேன்? போனவள் கட்டின புடவையோடத் தானே போனாள். வெளியே போய் என்னென்ன கஷ்டப்பட போகிறாளோ?'' புலம்பித் தள்ளினார். வீடு கூட்டிக் கொண்டிருந்த வேலைக் காரிக்கு அழுகை வந்து விட்டது.

''இந்த துக்கிரிப் பெண் இப்படியா ஒரு காரியம் செய்யும்! எத்தனை பெரிய மனுசன் உருகி அழுவுறாரே பாவம்... அவளும் கூடச் சேர்ந்து அழுதாள் அடிக்கடி மூக்கை முந்தானையால் துடைத்துக் கொண்டாள்.

பின்னர் பத்திரிகையில் பலமுறை விளம்பரம் செய்தார்.

''அருமை மகளே! உன்னை மன்னித்துவிட்டேன்- உடனே புறப்பட்டு வீட்டுக்கு வா. உன்னைக் காணாமல் தவிக்கும் சித்தப்பா...'' என்று படம் பிரசுரிக்காது மர்மமான தொரு விஷயத்தை பல பத்திரிகையில் பல மாதங்கள் கொடுத்தார். அனுதாபிகள் கூட்டம் பல நாட்கள் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. பிறகு அரசங்குடி மக்கள் தமயந்தியையும் மறந்து போனார்கள்.

# 9

அந்தப் பயங்கர நிகழ்ச்சியை நினைத்தபோதெல்லாம் தூக்கம் பிடிக்காமல் 'முருகா-முருகா' என்று ஆயிரம் முறை வைரவன் ஜெபித்திருக்கிறான்.

'காற்றுப் புகாத அந்த பாதாள அறையில் என்னென்ன நடந்திருக்கக்கூடும்... என்று நினைக்கும் போதே அவன்

https://telegram.me/aedahamlibrary



நெஞ்சு அந்த பயங்கரங்களை எண்ணி பதறிப் போகும்... 'இந்த பழிகாரன் வீட்டில் வேலைக்கமர்ந்து எத்தனை சிக்கலில் மாட்டி விட்டு விட்டது' எண்ணிக் கோபத்திலே கொதிப்பான்-உறக்கமில்லாமல்-சித்திரவதைகள் எல்லாவற்றையும் பொறுமையோடு அனுபவித்துக் கொண்டிருந்தான்.

''வைரவா-இன்னும் என்ன பண்ணிட்டு இருக்கே மறுபடியும் பழச்சாறு எடுத்து வர ஒரு யுகமா?'' தோட்டத்தினின்று எழுந்தது அவரது உரத்த குரல்.

திடுக்கிட்டு அவன் கடந்த காலத்திலிருந்து விடுபட்டு விழித்துக் கொண்டான்.

''வைரவா... மறுபடியும் தேவநாதன் எரிச்சலுடன் கத்திக் கூப்பிட்டார்.

''இதோ வந்துட்டேன்!'' பழரச டம்ளருடன் தன் தள்ளாமையை உதறிவிட்டு அவன் தோட்டத்திற்குள் வேகமாகச் சென்றான். உறிஞ்சி பழச்சாற்றை சுவைத்துக் குடித்துவிட்டு காலி டம்ளரை அவன் கையில் கொடுத்தார்.

''உனக்கு ஞாபகம் இருக்கா? நாளைக்கு தமயந்தியின் பிறந்த நாள். நாலு வருஷமா நான் மறந்து விட்டிருந்த இறந்த நாள்.'' அவன் வாயைத் திறக்கவில்லை.

''நாளைக்கு அதை விமரிசையாகக் கொண்டாட விரும்புகிறேன்.''

''பகல் சாப்பாட்டுக்கு பால் பாயசம் வச்சுடு, அப்படியே ஒரு வேடிக்கை செய்து பார்க்க நான் ஆசைப்படுகிறேன்... வைரவன் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. மூச்சு நின்றுவிடும் போன்ற ஒரு மிரட்சி அவனுக்கு. இன்னும் இந்தப் பாவி என்ன வேடிக்கை செய்ய விரும்புகிறான்; செய்த கொடுமைகள் எல்லாம் போதாதா?

https://telegram.me/aedahamlibrary



‘‘என்னடா முழிக்கிறே. உயிலில் அவளுக்கு அத்தனை பணமும் எழுதி வச்சிருக்கேனே... அவள் பிறந்த நாளை நாம் கொண்டாட வேண்டாமா... டாக்டர் கிடக்கிறார். ஒரு நாள் பத்தியத்தை தூக்கி எறிஞ்சுட்டு... வயிறு நிறைய காரசாரமாக சாப்பிடப்போறேன். நல்ல ருசியா... சமைக் கணும். தமயந்திக்கு இப்போ என்ன வயசு...? இருபத்தி நான்கு இருக்கும். என்னைக் கட்டிக் கொண்டிருந்தால்.... கழுத்து நிறைய நகையும் இடுப்பிலே ஒரு புள்ளையுமா வீட்டுக்கு ராணியா இருந்திருக்கலாம் இல்லையா...

‘‘வைரவா... அந்த தரித்திரம் புடிச்சவளுக்கு இந்த வீட்டு உப்பைத் திங்க கொடுத்து வைக்கலை... ஹா...ஹ’’ வெறி பிடித்தாற்போல் சிரித்தார்.

வைரவனுக்கு ஏனோ அவரைப் பார்க்கவே பிடிக்க வில்லை. தமயந்தி சொன்னது உண்மைதான். தேவநாதன் ஒரு ஸாடிஸ்ட்! பிறரைத் துன்பப்படுத்தி அதில் ஒரு இன்பங்காணும் பயங்கர அரக்கன் சந்தேகமேயில்லை... தேவநாதன் ஒரு ஸாடிஸ்ட். தனக்குள்ளே பல முறை கோபத்துடன் சொல்லிக் கொண்டான்.

## 10

மறுநாள் காலை, தோட்டத்திலே உலாவிக் கொண்டி ருந்த தேவநாதன் ரோஜா பாத்தியருகே சென்று... அன்று மலர்ந்த ஒரு அழகான பெரிய சிவப்பு ரோஜா மலரைக் காம்போடு கிள்ளி கையில் எடுத்துக் கொண்டார். நேரே வேகமாக வீட்டிற்குள் வந்தார்.

காலடி ஓசை கேட்டு பதட்டமாக சமைலறையி லிருந்து எட்டிப் பார்த்தான் வைரவன். சாப்பாட்டறை சுவற்றில் ஒரு பக்கத்திலே தொங்கிய தமயந்தியின் புகைப்படத்தருகே வந்து நின்றார் அவர்.

https://telegram.me/aedahamlibrary



''ஹாப்பி பர்த்டே டு யூ மை டியர்'' உரத்துக் கூவிச் சிரித்தார். வைரவனைத் திரும்பிப் பார்த்து கண்களைச் சிமிட்டினார். முகம் சுருங்கி மனம் வெதும்பி மரமாக நின்றான் அவன்.

''ஏண்டா மடையா தமயந்திக்கு சிவப்பு ரோஜான்னா உசிராச்சே-தினமும் ஒரு பூ பறிச்சு படத்திலே வச்சா உன் பேத்தியின் அழகு குறைஞ்சா போயிடும்? மனுஷங்க உசிரோட இருக்கிறவரை தான் மதிப்பு-மாலை மரியாதை எல்லாம்-செத்த பிறகு அவங்களை சுடுகாடுகூட மறந்துடுது-பாசமுள்ள பாட்டன்கூட பேத்தியை மறந்துட்டானே ஹ... ஹ...'' அட்டகாசமாகச் சிரித்தார்.

காலையிலிருந்தே அவரது பேச்சு, போக்கு ஒன்றுமே... அவனுக்குப் பிடிபடவில்லை. குளியலறையில் உரத்த குரலில் பாடிக்கொண்டே வெகு நேரம் குழாயைத் திருப்பி விட்டுக்கொண்டு குளித்தார்.

மாடிப்படிகளில் சின்னப் பையனைப்போல் வேகமாக இறங்கி வந்தார்... காலை ஆகாரத்திற்கு வைத்தியர் பத்திய மாக கொடுத்த அளவுக்கு மீறி ஐந்து இட்டிலிகளையும் அரைச்சட்டி சாம்பாரையும் தீர்த்தார்... இரண்டு தடவை காப்பியை கோப்பை நிறைய ஊற்றிக் குடித்தார்.

''ஐயா... டாக்டர் வந்து'' என்று ஆரம்பிக்கும் முன் புலியாகச் சீறி விழுந்தார்.

''டாக்டர் கிடக்கிறார்... கிராமத்து வைத்தியர்... இப்போதெல்லாம் இரத்த அழுத்தம் மாரடைப்பு இவை களுக்கு பல புதிய முறைகள் வந்திருக்கு, இந்த பத்தாம் பசலி பழைய காலத்து முறைகளோடு அமுங்கிக் கிடக்கிறார்... நான் அமெரிக்கா பத்திரிகை ஒன்றை வாசித்தேன். மாரடைப்பு வந்த ஒருத்தன் மாடிப்படிகளில் பத்து முறை மேலும் கீழும் ஓடினானாம். ஒண்ணும் ஆகலை.

https://telegram.me/aedahamlibrary



தேகப்பயிற்சி நல்ல சாப்பாடு ஓய்வு கவலையில்லாத வாழ்வு-இது போதும்! வேறு மாத்திரை-மருந்து தேவையில்லைனு எழுதியிருக்கான்... என்னடா அப்படி பாக்குறே?'' கோபத்துடன் உறுமினார்.

வைரவனுக்குக் கொஞ்சம் அச்சமாக இருந்தது. இப்போதெல்லாம் எஜமான் மதுவைத் தொடுவதில்லையே... பின் ஏன் இப்படி விபரீதமாக பேசுகிறார்-நடக்கிறார்... ஒரு சமயம் புத்தி பேதலிக்க ஆரம்பிச்சிடுச்சோ?

அவன் உள்ளத்திலே குழப்பிக் கொண்டிருந்த சந்தேகத்திற்கு விளக்கம் தருகிறவர் போல்... ''ஏன்டா திரு திருன்னு முழிக்கிறே எனக்கு பைத்தியம் கியித்தியம் பிடிச்சிட்டுதான்னு பயப்படுகிறியா? என் மூளை இதுக் கொல்லாம் கலங்கிடாது. இன்னிக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கிறேன். ஏன் தெரியுமா? தமயந்தியைப் போய் பார்க்கப் போகிறேன். நீயும் நானும் அவள் இருக்கிற கோலத்தை கண்டு ஆனந்தப்பட வேண்டாமா? அவள் பிறந்த நாளை விசேஷமாக கொண்டாடப் போகிறோம்.''

வைரவன் நகர முடியாது ஸ்தம்பித்து நின்று விட்டான். இப்படியும் ஒரு ஆசையா? இவன் என்ன மனிதன்.

''பசியிலும் தாகத்திலும் துடிச்சி மூச்சுவிட முடியாம இரண்டு பேரும் அழுதழுது செத்து மடிஞ்சு உடம்பு அழுகி புழுவச்சு இத்தனை காலத்துக்குப் பிறகு... எலும்புக்கூடுகள் மட்டும் அப்படியே ஆஸ்பத்திரியிலே இருக்கிறாப்ல அழகாக அசையாத நிலையிலே இருக்கும்.''

''மாமிசமும் தோலும் மூடியிருக்கச்சே அழகா இருந்த ரெண்டு பேரையும் எலும்பு கூடாக பார்த்தா நீ சிரிப்பே. அந்த அழகெல்லாம் தோல் அளவோடுதான்... தெரிஞ்சுக்கோ,'' வைரவன் கோபத்துடன் கீழ் உதட்டை கடித்துக் கொண்டான்.

https://telegram.me/aedahamlibrary



"இளமைத் தெம்பிலே காதல் மயக்கத்திலே கிழவன்னு நினைச்சுத்தானே என்னை அவமானப்படுத்தினா?

"இந்தக் கிழவன்தான் இப்போ இன்னமும் உசிரோட மாடிப் படியிலிருந்து பந்துபோல குதிச்சுட்டு இறங்கும் வலுவோட இருக்கிறான். அவள்...?"

"அந்த பரதேசிப் பயல்...?"

"ரெண்டு பேரும் போன போக்கைப் பார்த்து ரசிக்க வேண்டாமா; ஏண்டா அப்படி விழிக்கிறே... நீதானே இந்தக் காரியத்திலே முழுசா இறங்கினவன்? பாவம் வந்து மென்னியை பிடிக்கும்னு பயப்படுகிறாயா..."

அதிர்ந்து போன வைரவன் திகிலுடன் விழித்தான். "இப்ப அதெல்லாம் என்னத்துக்கு நினைப்பூட்டுறீங்க..."

கையைக் கொட்டி வீடு அதிரும்படி அவர் உரத்து சிரித்தார். நல்ல வேளை, வேலைக்காரி காரியங்களை முடித்துக் கொண்டு போய்விட்டிருந்தாள். தோட்டக்காரன் அன்று வரமாட்டான்; நிம்மதியாக சற்று மூச்சு விட்டான்.

"சுற்று முற்றம் பார்க்கிறியே? நான் என்ன மடையனா? வேலைக்காரி-தோட்டக்காரன் இவங்கள்ளாம் இல்லை யின்னு தெரிஞ்சுதானே பேசறேன்? ஏண்டா உனக்கு இப்படி வேர்த்துக் கொட்டுது? சாப்பாட்டுக்குப் பிறகு பாதாள அறைக்கு ஒரு விசிட் போய் வரலாமா? போய் அந்த மூலை அறையிலே கிடக்கிற மரம்-மட்டையெல்லாம் எடுத்து வழியைச் சுத்தப்படுத்து" உக்கிரமாக அதட்டினார். முகத்தைத் துண்டால் துடைத்துக் கொண்டான் வைரவன். வேகமாக அப்பால் நகர்ந்தான்.

பாவிப் பயலுக்கு என்ன குரூர புத்தி? பாதாள அறைக்குப் போய் பார்க்கணுமாமே? எத்தனை கொடுமை யானவன்? ஊகும் இவன் கிட்ட இனி தொடர்ந்து வேலை

https://telegram.me/aedahamlibrary



செய்தால் என்னையும் ஒரு நாள் எங்கேயாவது... நினைக்கவும் அஞ்சியவனாக கொடுத்த வேலையைப் பரபரப்புடன் கவனிக்க விரைந்தான்.

வெள்ளித் தட்டின் மீது கும்பமாக சோற்றை போடச் சொல்லி நெய்யை வார்த்து பருப்பைப் போட்டு பிசைந்து மண் அப்புவது போல் அவர் வாயில் அடைத்துக் கொண்டதைக் காண வைரவனுக்கே அருவருப்பாக இருந்தது. சுபாவத்திலே மனிதன் ஒரு ஆட்டை முழுக்கத் தின்று தீர்த்துவிடும் பெருந்தீனிக்காரன்தான்.

ஆனால் இன்று ஏன் இந்தக் கோரப்பசி-கொடுமை யான எண்ணம். இந்த நாசகாரனுக்கு என்ன வந்துவிட்டது - இப்படி கூத்தாடுகிறான். கொக்கரிக்கிறான். மனத்திற் குள்ளே அவரை சபித்தபடியே சாம்பாரை கரண்டியில் முகந்து அவர் வேண்டாம் என்கிறவரை ஆத்திரமாக அவனும் பரிமாறினான்.

தயிர் சாதத்தைக் குழைத்து ஊறுகாயுடன் நாக்கை சப்புக் கொட்டிக் கொண்டு உண்டு விட்டு எழுந்தவர் "எங்கேடா பாயசம்... மறந்துட்டியா?" என்று கத்தினார்.

சூடாக பாயசத்தை பெரியதொரு வெள்ளிக் கிண்ணி யில் ஊற்றி எடுத்து சாப்பிட ஒரு ஸ்பூனுடன் அவன் உள்ளேயிருந்து எடுத்து வந்தான்.

ஒரு வாய் அள்ளி சாப்பிட்டவர்... அவனை நிமிர்ந்து ஏளனமாகப் பார்த்தார்.

"எங்கே என் பாயசத்தில் தூக்க மருந்தை போட்டுட்டி யோன்னு கொஞ்சம் பயமா இருந்தது" கடகடவென்று சிரித்தார்.

https://telegram.me/aedahamlibrary



''அத்தனைத் துணிவு எனக்கு ஒரு நாளும் கிடையாதுங்க...''

தூக்கி வாரிப்போட்டது அவருக்கு. வைரவன் கூட தைரியமாகத்தான் மனசைகொட்டி பேசுகிறானே? கிழவனுக்கு என்ன வந்துவிட்டது? பிசாசு பயமா!...

தனக்குள்ளே முறுவலித்தார். ''டேய் வைரவா... நீ ஏன் இப்படி நடுங்கிப் போய் உளறிக் கொண்டிருக்கேன்னு எனக்கு புரிகிறது, பாதாள அறைக்கு போகப் போகிறோமே அங்கே பிசாசுகள் இருக்குமேன்னு நடுங்கிறே... மனுஷங்க உசிரோட இருக்கும் வரைதான் அவங்களைக் கண்டு அவங்க அதிகாரத்தை உணர்ந்து பயப்படனும். செத்தவங் களைக் கண்டு என்னடா பயம்-பிசாசுகளைப் பத்தி நீ நம்புகிறியா? அவைகள் இருப்பது உண்மையானால் இந்த பங்களாவைச் சுத்திக் கொண்டு நம் இரண்டு பேர் தூக்கத்தையும் கெடுத்துகிட்டு இருக்கணுமே... என்னிக் காவது... நீ தமயந்தியை ஆவி நிலையில் பார்த்திருக் கிறாயாடா?'' பரிகாசமாகக் கேட்டார்.

''ஒரு நாளைக்குக் கனவுலே பார்த்தேனுங்க...

''போலீஸ், கொலை குத்தத்துக்கு உன் கையிலே காப்பு போட்டு இழுத்திட்டுப் போகப் போறாங்கன்னு... உன்னை எச்சரிக்க வந்தாளா!''

''நான் இதிலே நேரிடையா எதுவும் செய்யலையே... ஐயா உத்தரவிட்டதை இந்த அடிமை...'' இழுத்தான்.

''மெல்ல நழுவிவிட்டால் இதில் சம்பந்தம் இல்லாமல் போயிடும்னு நினைப்பா?''

''ஆரம்பத்திலிருந்து சொல்லிக்கிட்டுதான் இருக்கேன் இந்த கொலைக்கு நான் பொறுப்பில்லையே?'' அவன் அவரை வெறித்துப் பார்த்தான்.

https://telegram.me/aedahamlibrary



''என்னடா கண்ணாலே உருட்டறே?... என்னால் இந்தக் காரியத்தை செய்ய முடியாதுன்னு அப்பவே ஒதுங்கிட்டிருக்கலாம் இல்லையா? திருட்டுப் பட்டம் கட்டுவேன்னு சொன்னதும் நடுங்கி போனியோ? பயந்தாங் கொள்ளிப் பயலே... நீயெல்லாம் ஒரு ஆம்பிள்ளையாடா? தூ மரமண்டை! ஒரு வாய்ச்சோறு கொட்டிக்கிட்டு சீக்கிரமா வா, பாதாள அறையைத் திறக்கணும்... பார்க்கணும்னு துடிக்கிறேன், போடா போ...'' கத்தினார்.

முகம் சிவந்து நெஞ்சு பதறி ஆத்திரத்தில் ஆடிப் போன வைரவன் அவரை மீண்டும் வெறித்துப் பார்த்தான்.

படபடவென்று என்னவெல்லாமோ பேச வேண்டு மென்ற ஆவேசம் அவனை உலுக்கியது...

கொந்தளித்துக் கொண்டு வந்த கோபத்தை கட்டுப் படுத்திக் கொண்டு சமையலறைக்குள் புகுந்தான்.

அவனுக்கு பசியிருக்கவில்லை சாப்பாட்டை நினைத்ததுமே வயிற்றை குமட்டிக் கொண்டு வந்தது. ஈயச் செம்பிலே நிறைத்து வைத்திருந்த மோரை ஒரு டம்ளரில் சாய்த்து இரண்டு மடக்கு விழுங்கினான். வாயைத் துண்டால் துடைத்துக் கொண்டு முகம் இறுகியவனாக வெளியே வந்தான்.

''எஜமான் நான் தயார்... கீழே போகலாமா...? முதலில் வாயில் கதவுகளை அடைச்சுட்டு வரேன் சாவி களையும் டார்ச் விளக்கையும் நீங்க தயாரா வச்சுக்கோங்க. அப்படியே கையில் ஒரு துண்டு எடுத்துக்கோங்க.. தூசியும் நாத்தமும் உங்களால் சகிக்க முடியாது போகும்.

துணிவோடு நிமிர்ந்து அவர் முகத்துக்கு நேராக நின்று கொண்டு பேசினான்.

தேவநாதன் திடுக்கிட்டுப் போனார். பயலுக்கு குளிர்

https://telegram.me/aedahamlibrary



விட்டுப் போச்சு போலிருக்கே? தெம்பா பேசறானே? இருக்கட்டும்! பற்களை கடித்துக் கொண்டார்.

பின்கட்டு அறைக்குள்ளே இருவரும் புகுந்தனர். வழியைச் சுத்தப்படுத்தி வைத்துவிட்டிருந்தான் வைரவன்.

அலமாரி போன்ற கதவைத் திறந்தார். அவன் சொன்னபடி ஒரே இருட்டு அதுவும் வெளிச்சத்திலிருந்து கீழே படிகளில் இறங்க முயன்ற போது... அவருக்கு தலை சுற்றியது.

டார்ச்சின் பொத்தானை அழுத்தி வெளிச்சத்தை நாலா பக்கமும் சுழற்றினார்.

''மெல்ல... பார்த்து இறங்குங்க... தேள் கரப்பான் என ஏதாவது மேலே விழுந்து தொலைக்கப் போகுது...''

உண்மையில் அவர் பயந்துதான் போய்விட்டார். மூடிக் கிடக்கும் அறைகளில் இவைகளை எதிர்பார்க்கலாமே சனியன் பிடித்தவன் வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்க மாட்டேன் என்கிறானே, எனக்கே பயம் காட்டும் அளவுக்கு துணிஞ்சுட்டான்.

கருவிக்கொண்டே மெல்ல படிகளில் இறங்கினார். ஒட்டத்திலே கால் புதையும் அளவு தூசி மெல்ல நடந்து துருவேறிக் கிடந்த இரண்டாவது கதவின் பூட்டைச் சாவியால் திருப்பினார். சுலபமாக அது திறக்க மறுத்தது. ஆத்திரத்துடன் தாடைகளை இறுக்கிக் கொண்டு முயன்ற போது சடக்கென்ற சப்தத்துடன் பூட்டு கழன்றுக் கொண்டது.

''வைரவா! தயாராக இரு... பிரமாதமான காட்சி... உன் வாழ்க்கையில் மறக்கவே முடியாத அந்த புதுக் காட்சியைப் பார்க்கப்போற... பின்னாலே மெல்ல வாடா... பயந்தாங் கொள்ளி... உற்சாகமாக கூறிக்கொண்டு கதவை அகலத்

https://telegram.me/aedahamlibrary



திறந்துவிட்டு உள்ளே படிகளில் இறங்கினார். டார்ச் விளக்கைச் சுழற்றிக் கொண்டு சுற்றிலும் பார்த்தபோது முன்னைவிட ஒட்டடையும் தூசியும் கழுத்து மட்டும் நிறைந்த ஒரே புழுதிக் கோலம்... வெறி பிடித்தவர் போல் உரத்து சிரித்தார்.

''வாடா வைரவா? உன் பேத்தியைப் பார் மாப்பிள்ளையின் அழகைப் பார்'' உற்சாகமாகக் கத்திக் கொண்டு டார்ச்சின் ஒளியை நாலா பக்கமும் சுழற்றியவர்... அதிர்ந்து போனார்.

சுவற்றோரமாக வைக்கப்பட்டிருந்த சோற்று சட்டி அதே இடத்தில் இருந்தது. சோற்றை கரப்பானும் எறும்புகளும் காலி செய்துவிட்டிருந்தன. காய்ந்து போன சட்டி மீது ஒரே தூசி. தண்ணீர் வைக்கப்பட்டிருந்த பீங்கான் கிண்ணம் ஒரு மூலையில் கவிழ்ந்து கிடந்தது.

அவர்கள்...? தமயந்தி-சிவநேசன் இருவரது உடல்களும் எங்கே மறைந்தன? ஒரு எலும்பைக்கூட காணவில்லையே... என்ன அதிசயம்? திகைத்துப் போனார் அவர்.

அப்போது வேறு ஒரு மூலையிலிருந்து மெல்லியதாக கியா... கியா... என்ற சத்தம் கேட்கவே திடுக்கிட்டு விளக்கை அந்த பக்கம் திருப்பினார்.

வீட்டின் தோட்டத்திலே எச்சில் இலைக்காக ஓடி வந்து நிற்கும் அந்த சிவப்பு நாய் குட்டிகளை அணைத்துக் கொண்டு ஒரு மூலையில் படுத்துக் கிடந்தது. விளக்கொளியில் அதனுடைய கண்கள் நெருப்புத்துண்டு போல் சிவப்பாக பளபளப்பதைக் கண்டு அரண்டு போனார் தேவநாதன்.

வைரவா... இது எப்படிடா இங்கே வந்தது? எங்கே தமயந்தியின் உடல்? எங்கே அந்த பிச்சைக்காரப் பயலின்

https://telegram.me/aedahamlibrary



எலும்புகள்...? என்னடா செய்தே...? சொல்லு கொன்று குழியை வெட்டி புதைச்சிடுவேன்...'' கோபம் தாங்காது கத்தினார். வைரவன் அவர் கோபத்தை பாராட்டியவனாகத் தோன்றவில்லை. எப்பொழுதும் குனிந்த தலையும் மார்பில் மடங்கிய கைகளுமாக பணிவுடன் நின்று பதிலளிக்கும் அவன் இப்போது தலையை நிமிர்த்திக் கொண்டு மிகவும் துணிவாக அவரை எறெடுத்துப் பார்த்தான்.

''பாலூட்டி வளர்த்த என் பச்சைக் கிளின்னு சொல்லி அந்த பச்சைக் கிளியை கூண்டில் அடைச்சு வச்சீங்க... அது எந்த வழியா பறந்து போச்சோ, அதே வழியாகத்தான் இந்த நாய் உள்ளே வந்து குட்டி போட்டுகிட்டு சுகமாக தூங்குது பாவம்'' சிரித்தான் அவன் திமிராக.

உள்ளிருந்து பொங்கிப் புரண்ட ஆத்திர உணர்வு அவர் உடலை அனலாக எரித்தது. தலையிலே விண் விண் ணென்று ஒரு வலி. கூட இருந்தே கழுத்தை அறுக்கும் அளவு துணிச்சல்காரனா இந்தக் கிழவன்? அந்த அதிர்ச்சியை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

''என்னடா கதை விடறே... நான் யாரு தெரியு மில்லே?'' மிரட்டலாகக் கூச்சலிட்டார்.

''இந்தச் சலசலப்புக்கொல்லாம் இனி வைரவன் அஞ்ச மாட்டான் தெரிஞ்சுக்கோங்க. நீங்க எப்படி இந்த மாபெரும் பாதகத்தை செய்ய திட்டம் போட்டீங்களோ அதே அளவிலே அதை தவிர்க்க நானும் ஒரு திட்டம் போட்டேன். புரிகிறதா?'' வியப்பும் கோபமுமாக அவனை முறைத்தார்...

''இந்த வீடு உங்க முப்பாட்டான் காலத்திலே கட்டினது. உங்கப்பா உசிரோட இருந்தப்போ ஒரு முறை இந்த பாதாள அறைக்குள்ளே ரெண்டு பேரும் சும்மா

https://telegram.me/aedahamlibrary



வந்து சுற்றிப் பார்த்தோம். அப்போ உங்க அப்பாதான் சொன்னார்.''

''என்னடா சொன்னார்?... காவாலிப் பயலே... உன்னை என்ன பண்றேன் பார்!'' இரைந்து ஆவேசமாகக் கத்தினார்.

''ஸ்... சும்மா கூக்குரல் போடாதீங்க வெளியிலே யாருக்கும் கேட்காது...'' சிரித்தான் வைரவன் வேடிக்கையாக.

ஆத்திரத்திலே தேவநாதன் ஆடிப்போனார் ''பயலுக்கு துணிச்சல் எக்கச்சக்கமாக ஏறிவிட்டிருக்கிறதே... மிஞ்சி விட்டானே கடன்காரன்'' குமுறினார்.

''அந்தக் காலத்திலே கட்டின வீடு இது. தீவட்டிக் கொள்ளைக்காரங்க வருகிறது தெரிஞ்சா, பெண்களை நகைகளுடன் இந்தப் பாதாள அறையிலே பதுக்கி விடுவாங்களாம். ஒண்ணும் கிடைக்கலேன்னு ஆத்திரப் பட்டு கொள்ளைக்காரன் வீட்டுக்கு நெருப்பை வச்சுட்டா... பெண்கள் தப்பி வெளியேற... இந்த அறைக்குள்ளே அங்கே பாருங்க ஒரு கதவு... கற்பாறை போன்ற தடுப்புக்குப் பின்னால் இருக்கு. அதைத் திறக்கிற சாவி எங்கிட்ட இருக்கு...

''அப்படின்னா?''

''நீங்க இந்த திட்டத்தைப் பத்தி சொல்லி ஒப்புக் கொள்ளும்படி என்னை வற்புறுத்தின போது... இந்த கதவு இருக்கிற விஷயம் உங்களுக்குத் தெரியாதுன்னு புரிஞ்சு கிட்டேன். அதனால்தான் பயந்து போய் ஒப்புக் கொள்றாப்பல நடிச்சேன்!''

''அட பாவி!''

''உங்களை விடவா நான் பாவி...? பச்சைக்கிளி போல குழந்தையை வளர்த்து கூண்டுக்குள்ளே அடைச்சு கொல்லனும்னு என்ன கொடூர புத்தி. ஒரு நிமிஷம் அவங்க

https://telegram.me/aedahamlibrary



இரண்டு பேரும் மயங்கி விழுந்தபோது பயந்துட்டேன் விஷத்தை போட்டுக் கொன்னுட்டீங்களோன்னு அதிர்ந்து போனேன்''

''அப்படியா சங்கதி...

''இன்னும் நிறைய இருக்கு கேளுங்க... இந்தக் கதவு தோட்டத்து மூலையிலே கத்தாழைப் புதர் பக்கம் திறக்கும் - அங்கே நீங்க தப்பித் தவறிகூட போகமாட்டீங்க. ஏன்னா ஒரு தடவை அங்கே பாம்பைப் பார்த்து நடுங்கிப் போனவர் நீங்க. அந்தத் துணிவில் நீங்கள் வீட்டில் இல்லாத சமயம் கத்தாழைப் புதரை வெட்டி துருப்பிடித்த சாவித் துவாரத்திற்கு எண்ணை போட்டு திறந்து பார்த்து சமாதான மடைந்து எல்லாத்தையும் தயாராக வச்சிருந்தேன். ஞாபகமிருக்கா.?''

''என்னடா மிரட்டரே...? உறுமினார் தேவநாதன்

''உங்க நினைவுக்கு சில விஷயங்களைக் கொண்டு வர முயற்சிக்கிறேன். அவ்வளவுதான்!''

''ஒரு தடவை ஒரு வேலைக்காரனை - மனைவியின் சாவுக்கு லீவு கேட்காமல் போன குத்தத்துக்கு வேலையில் இருந்து தள்ளிவிட்டீங்களே-கண்ணுசாமின்னு பேர்... அவன் அப்போ பட்டினியிலே செத்துப் போகலை - இப்போ பக்கத்தூர்லே வெற்றிலை பாக்குக் கடை வச்சு சொந்த வீடு கட்டிக் கொண்டு சுகமா இருக்கான்.''

''அவனுக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம்!''

''ரொம்ப சம்பந்தம் இருக்கு. அவன் என் நெருங்கின நண்பன். உசிரைக் கொடுத்து உதவும் உண்மையான தோழன். அவனும் என்னோட இந்த காரியத்தில் ஒத்து ழைச்சான். உங்க ஏற்பாட்டை அவனிடம் ஒளிவு மறைவு

https://telegram.me/aedahamlibrary



இல்லாம சொல்லி தோட்டத்துப் பின்னாலிருக்கும் கதவைப் பத்தியும் சொன்னேன்...

"நீங்க கதவைப் பூட்டிக்கிட்டு இங்கே உள்ளே வந்த கையோடு அவன் ஒரு வைக்கோல் வண்டியோட வந்து கதவைத் திறந்து உள்ளே இறங்கி மயக்கமாயிருந்த இருவரையும் தூக்கி வண்டியிலே ஏத்திகிட்டுப் போய் வீட்டிலே ஒளிச்சு வச்சு கவனிச்சான். யாருக்கும் தெரியாம சாமான் வண்டியிலே அவங்க இரண்டு பேரையும் திருச்சிக்கு கொண்டு ரெயிலேத்திட்டு வந்துட்டான்!"

"பணம் ஏதுன்னு கேட்கறீங்களா!"

"ஒரு தடவை என் மகளுக்காக திருடினேன். பிறகு என் வளர்ப்பு பேத்தியை காப்பாத்த திருடத் தொடங்கினேன். உங்க சட்டைப் பையிலிருந்து உங்களுக்கு தெரியாம நூறு ரூபாய் நோட்டொன்றை எடுத்து வச்சிருந்தேன். என் சிநேகிதன் ஒரு நூறு ரூபாய் கொடுத்து உதவினான்.

"கூண்டிலடைத்த பச்சைக்கிளி தன் காதலனோட அப்பவே பறந்தோடிப் போச்சு.

வடக்கே டெல்லிக்கோ பாம்பேக்கோ போய் பிழைச்சுக் கோங்கன்னு நான் கடிதாசி போட்டேன். அப்படியே அவங்க பதிவுத் திருமணம் செய்துகிட்டு டெல்லியிலே கொஞ்ச காலம் இருந்தாங்க. அந்தப் பையன் மேலே படிக்க ஆசைப்பட்டான். நான் உதவினேன்!"

"பெரிய கோடீஸ்வரன்.... உதவினியோ?" ஏளனமாகச் சிரித்தார் கோபத்தை அடக்கமாட்டாது.

"கோடீஸ்வரன் கிட்டே திருடினேன். உங்க வீட்டு அண்டா குண்டா சருவங்களை வெள்ளி பாத்திரங்களை அப்பப்ப வித்து காசாக்கி கண்ணுசாமி மூலம் ஒரு நண்பருக்கு

https://telegram.me/aedahamlibrary



அனுப்பி வச்சேன். அவர் பணத்தை அவங்ககிட்டே கொடுத்தார். நல்லவங்களுக்கு நாலுபேர் உபகாரம் செய்யாமலா போயிடுவாங்க?

''என் குழந்தை இப்போ ரெண்டு குழந்தைகளுக்கு தாயாகி விட்டிருக்கா. மணி மணியா ரெண்டு ஆம்பிளைப் பிள்ளைகள்.''

''என் மாப்பிள்ளை மேலே என்னவோவெல்லாம் படிச்சு இப்போ திருவொற்றியூரிலே பெரியதொரு கம்பெனியிலே மாசம் இரண்டாயிரம் சம்பாதிக்கிறான். வீடு கொடுத்திருக்காங்க.'' என்னையும் கூடவந்து தங்கச் சொல்லி தமயந்தி எனக்கு எழுதியிருக்கு. என் கடுதாசியெல்லாம் கண்ணுசாமி விலாசத்துக்கு வரும்.

பாக்கிறீங்களா... சொல்லிக் கொண்டே இடுப்பில் சொருகிக் கொண்டிருந்த ஒரு உறையிலிருந்த படத்தை எடுத்தான். பாருங்க எஜமான் தமயந்தியும் மாப்பிள்ளையும் ஆளுக்கொரு குழந்தையை தூக்கிட்டு அவங்க வீட்டு வாசல்ல நின்னுக்கிட்டு எடுத்த படம். தமயந்திக்கு வயது இருபத்தி மூணு ஆச்சு... ஆனால் அதே பதினெட்டு வயசு போல் இன்னும் இளமை மாறாத அழகோட குழந்தை எப்படி இருக்கா பாருங்க...

புகைப்படத்தை மிகவும் துணிவாக அவர் முகத்தருகே நீட்டினான். தமது திட்டம் தவிடு பொடியானதை உணர்ந்து திகைத்துப் போன அவரால் ஆத்திரத்தை அடக்கவே முடியவில்லை.

''அயோக்கிய ராஸ்கல்... உன்னை என்ன பண்றேன் பார்... ஓங்கி உரத்த குரலில் கூச்சலிட்டுக் கத்தினார்.

''போய்யா... எதுக்கும் உங்களுக்கு இரைஞ்சு கத்தத் தான் தெரியும். பூச்சி காட்டாதீங்க. போலீசிலே என்னைத்

https://telegram.me/aedahamlibrary



திருடன்னு பிடிச்சுக் கொடுத்தால்... உங்களைப் பத்தி அங்கே விவரமா சொல்ல எனக்கு தெரியும்.''

''கொலைகாரனா இருப்பதைவிட திருடனா இருப்பது எவ்வளவோ மேல். அதுவும் எனக்காகவா திருடினேன்?''

''பெரிய ராபின்ஹுட் வா வா வெளியே வா என்ன பண்றேன் பார்...'' வீறிட்டுக் கத்தினார்.

''இன்னொன்னு பார்த்தீங்களா...? இறந்து போயிட்டதாக ஒரு உயில் எழுதி உங்களையறியாமலே தமயந்திக்கு அத்தனை சொத்தையும் கொடுத்து விட்டீங்க பார்த்தீங்களா...'' வைரவன் பரிகாசமாகச் சிரித்த போது... அவர் எரிமலையாக வெடித்தார்.

''அந்த உயிலைக் கிழிச்சு எறிய எத்தனை நாழி ஆகும்? அந்த ஓடிப்போன கழுதைக்கு ஒரு செல்லாக்காசு கூட நான் தரமாட்டேன். ஏன் கொடுப்பேன்...? வேகமாக படிகள் மீது விழுந்தடித்துக் கொண்டு விரைந்தார். வைரவன் அதே வேகத்தில் மூச்சிறைக்க பின்னால் ஓடி வந்தான்.

''படுவா... முதல்லே உயிலை அடுப்பில் போட்டு பொசுக்கிட்டு உன்னை என்ன பண்றேன் பார்'' உரக்க கத்திக் கொண்டு இரண்டாவது அறையின் படிகளையும் விரைந்து கடக்க வேகமாக ஏறினார்...

''போய்யா... உங்க பணத்துக்கு அவங்க ஒண்ணும் ஏங்கிக்கிடக்கலை. உங்ககிட்ட அதிகாரம் இருக்கு, பணம் இருக்கு ஏழை எளியவங்க கிட்ட தெய்வத்தின் பக்கத்துணை இருக்கு. இதுதான் நான் புரிஞ்சு கொண்ட உண்மை.''

''படுவா. ராஸ்கல்... எனக்கு புத்தி சொல்றியா?'' கோபத்தோடு கூச்சலிட்டு கையை ஓங்கிக்கொண்டு உச்சிப் படியில் நின்றவர் திடீரென்று வாயில்படி மீது சரிந்து விழுந்தார்.

https://telegram.me/aedahamlibrary



“ஆ... ஆ... என்ற முனகல் சத்தத்துடன் நெஞ்சை இடது கரத்தால் பிடித்துக் கொண்டு வேதனையுடன் துடித்தார்.

வைரவன் விரைவாக அருகில் வந்து அவரை மெல்ல நிமிர்த்தி உட்கார வைக்க முயன்றான். ஒரு காலும் கையும் தனியாக சரிந்து விழுந்தன. வாய் ஒரு பக்கம் கோணிக் கொண்டது. கடைவாயில் எச்சில் வழிந்தது. ஏதோ பேச விரும்பியவர் பேச முடியாது தவிப்பதை உணர்ந்தான்.

மெல்ல அவரை இழுத்துக்கொண்டு போய் கீழே இருந்த ஒரு அறையின் படுக்கை மீது சிரமப்பட்டு தூக்கிப் போட்டான். உயிர் இருந்தும் செத்த பிணம் போல்.. ஒரு பக்கக் காலும் கையும் விளங்காது - பேச இயலாது மனிதர் பரக்க பரக்க விழித்துக் கொண்டு கிடந்தார். ஓடிச் சென்று பாதாள அறைக் கதவை அடைத்து முன்போல் மரத்துண்டுகளை இழுத்து மூடிவிட்டு வந்தான்.

அழுக்காகிவிட்ட அவரது உடைகளைக் கழற்றி ஈரத் துணியால் முகத்தைத் துடைத்து இரவு படுக்கைக்கு அணியும் பைஜாமாவையும், சொக்காயையும் அணிவித்தான். அவசரமாக தன் ஆடைகளைக் களைந்து குளித்து வேறு உடுத்திக் கொண்டான்.

பூஜையறையிலிருந்து திருச்செந்தூர் விபூதியை எடுத்து தன் நெற்றியில் அப்பிக்கொண்டு அவர் நெற்றி மீதும் கொஞ்சம் வைத்தான். ஒரு பக்கத்துக் கண் இமைகள் துடிக்க நாக்குழற அவர் பரிதாபமாக விழித்தார்.

மனிதனுக்கு ரத்த அழுத்தம் மேலோங்கி பக்க வாதம் வந்துவிட்டது. பேச முடியாது வாயடைத்துப் போயிற்று. ஆனால் நினைவு ப்ளிச்சென்று இருக்கிறது என்றவரை அவன் புரிந்து கொண்டான்.

https://telegram.me/aedahamlibrary



"நோயாளியாயிட்டீங்க. நொந்த புண்ணில் கோல் விட மனசில்லை. ஆனால் ஒண்ணு தெரிஞ்சுக்கோங்க. அந்தக் குழந்தை ரொம்ப கடவுள் பக்தியா இருந்திச்சு. எல்லாத்துக்கும் பூஜையறையிலே நிக்கிற உங்க முருகனை நம்பிக்கிட்டிருந்தது. அவர் கைவிடவில்லை.

"உயிலை எழுதி பூஜையறைக்குள்ளே வை அப்படின்னு கொடுத்தீங்க. முருகா இதை பார்த்துக்கோன்னு சொல்லித்தான் அந்த இரும்பு அலமாரியிலே வச்சேன்.

"அவர் பத்திரமா பார்த்துக்கிட்டார். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இப்போ இனி உங்க சொத்து முழுவதும் தமயந்திக்குத்தான் - அவ பெத்திருக்கிற மாணிக்கங்களுக்கு தான் போய் சேரப் போகிறது,"

"உயிலை மாத்திடுவேன்னு சவால் விட்டு வந்தீங்களே. இனி மாத்த முடியும்னு நினைக்கிறீங்களா? முருகன் அதை கெட்டியா பிடிச்சுவச்சுகிட்டான். அதனால் தான் உங்க கையும் காலும் விழுந்திடுச்சு"

"வாழ்க்கையிலேயே என்ன வேணுமானாலும் செய்யலாம் எதையும் எடுத்துக்கலாம். ஆனால் எல்லாத்துக்கும் எல்லோரும் கூலி கொடுக்கணும்."

"நீங்க தமயந்திக்கு செய்த அக்கிரமத்துக்குத் தான் கூலியைக் கொடுத்தீங்க. பேசிக்கிட்டே இருக்கேனே நான் ஒரு மடையன். ஓடிப்போய் டாக்டரை கூட்டிக்கிட்டு வர்றேன்" சொல்லிக் கொண்டே அவன் கதவைத் திறந்து கொண்டு வெளியே விரைந்தான்

சிறிது பொழுதில் டாக்டர் நாராயணனின் மருந்து பையைத் தூக்கிக் கொண்டு அவருடன் உள்ளே வந்தான். தேவநாதனைப் பரிசோதித்து கலவரமடைந்து போனார் நாராயணன்.

https://telegram.me/aedahamlibrary



"வைரவா! என்ன நடந்தது? நல்லா குணமாகிட்டு வந்தாரே என்ன ஆச்சு?" வியப்பும் துயரமுமாகக் கேட்டார்.

"டாக்டர் ஐயா அதையேன் கேட்கிறீங்க. இன்னிக்கு தமயந்தியின் பிறந்த நாள். காலையிலிருந்தே எஜமான் ரொம்ப விசனமா இருந்தார்.

"அந்தப் பொண்ணு எங்கே இருக்கோ எப்படி கஷ்டப் படுதோன்னு ரொம்ப துக்கப்பட்டார். எனக்கு கொஞ்ச நாளா அந்த பொண்ணு எங்கே இருக்கான்னு தெரியும். அது எனக்கு ரகசியமா கடிதாசி எழுதிகிட்டு இருந்திச்சு. நான் ஒரு அறிவு கெட்டவன். போனதபா அது அனுப்பின போட்டோ எங்கிட்டே இருந்தது."

"அப்படியா தமயந்தி இருக்கிற இடம் உனக்கு தெரியுமா?"

"ரொம்ப நாளா தெரியுங்க. அது பயந்துகிட்டு சொல்லாதீங்கன்னு கேட்டுக் கொண்டதால் நான் சொல்ல பயந்துகிட்டிருந்தேன். இவர் படும் வேதனையைத் தாங்க முடியாமல் இன்னிக்கு மத்யானம் அந்த படத்தை எடுத்துட்டு போய் காட்டினேன்!"

"அப்புறம்?"

"என் கொழந்தை தமயந்தி உசிரோட இருக்காளா வைரவா? என் பேரன்களைப் பாருடான்னு ஓங்கி சந்தோஷத்தோட கத்தினாருங்க. அவ்வளவுதான். அப்படியே கீழே விழுந்துட்டார்." வைரவன் கண்கலங்கி பேச முடியாது துண்டை வாயில் பொத்திக் கொண்டான்.

"என் மகன் கூட டாக்டருக்கு மேலே படிச்சிட்டு இருந்தானே அவன் லீவுக்கு வந்திருக்கான். அவனை வரச் சொல்லியிருக்கேன். ஸ்கூட்டரில் வரேன்னு சொன்னான் வந்திடுவான் பார்க்கலாம். தேவநாதனுக்கு நாம் என்ன செய்ய முடியும்னு பார்க்கலாம்" நாராயணன் பெருமூச் செறிந்தார்.

https://telegram.me/aedahamlibrary



ஸ்கூட்டரில் விரைந்து வந்த அவர் மகன் இருதய நோய்கள் பற்றி மேற்படிப்பு படிக்கிறான். வேகமாக உள்ளே வந்து பெட்டியைத் திறக்குமுன், தேவநாதன் தமது உயிர்ப் பெட்டியைத் திறந்து கொண்டு கிளம்பி விட்டிருந்தார்.

'ஹி ஈ-ஸ் டெட்' என்று வியப்புடன் கூவினான் அந்தக் குட்டி டாக்டர்.

''ஐயா தர்மதுரை போயிட்டீங்களா... நான் என்ன பண்ணுவேன்'' என்று அலறிய வைரவன்... கண்களைத் துடைத்துக் கொண்டு ''டாக்டர் ஐயா நீங்கதான் இந்த விலாசத்துக்கு கொழந்தை தமயந்திக்கு ஒரு தந்தி கொடுக்க ஏற்பாடு பண்ணணும். அது வராட்டா ஐயா நெஞ்சு வேகாதுங்க...'' அரற்றியபடி ஒரு கடிதத்துண்டை நீட்டினான்.

''வைரவா... நீ நம்பிக்கையும் நன்றியுமுள்ள ஒரு வேலைக்காரன். அப்படியே செய்வோம்... எல்லாத்தையும் பத்திரமா பார்த்துக்கோ?'' சொல்லிவிட்டு கிளம்பி சென்றார் நாராயணன்.

தேவநாதனின் உடலை ஒரு துப்பட்டியால் கழுத்து வரை போர்த்திவிட்டு... வெளியே வந்தான்... சாப்பாட்டறை யில் தொங்கிய தமயந்தியின் படத்தின் மீது சொருகியிருந்த சிவப்பு ரோஜாவை எடுத்து வந்து அவர் தலை மாட்டில் வைத்தான்.

''ஐயா! இனி உங்க போட்டோவுக்கு தினம் ஒரு ரோஜா வைக்கச் சொல்றேன் குழந்தை என் பேச்சைக் கேட்பாள் - எம்மா தமயந்தி'' என்று சொல்லிக் கொண்டே போட்டோ அருகில் வந்து லேசாக விரல்களால் அதை மென்மையாகத் தடவினான்.

(முற்றும்)

https://telegram.me/aedahamlibrary

تم

https://telegram.me/aedahamlibrary

